Stay Connected with Uthayan.com

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.25
கொழும்பு : ரூபா.30

# உதயன்

UTHAYAN - A Lively National Tamil Daily






**உலகம்**



பக். 06

ஐ.நா. சபையில் மாற்றம் தேவை. இணைந்து வலியுறுத்துகின்றன இந்தியாவும் ஜப்பானும்

**இந்தியா**



பக். 07

கொத்தடிமைகள் 40 பேர் 10 வருடங்களின் பின் மீட்பு

**விளையாட்டு**



பக். 22

ஆஷஸ் கிண்ணத் தொடரில் விளையாட விருப்பம்

# காணி சுவீகரிப்பு விவகாரம் அரசுக்கு நேற்று நோட்டீஸ்

## தேவைப்பட்டால் இடைக்காலத் தடை உத்தரவையும் பெறலாம்

கொழும்பு, மே 31

வலி. வடக்கில் தமிழ் மக்களின் காணிகள் இராணுவத் தேவைகளுக்காகச் சுவீகரிக்கப்படுவதை எதிர்த்து தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன் முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்றுக் கொண்டுள்ளது. காணிச் சுவீகரிப்பை ஏன் ரத்துச் செய்யக்கூடாது என்பதற்கான பதிலை நீதிமன்றில் தாக்கல் செய்யுமாறு அரச தரப்புக்கு 'நோட்டீஸ்' அனுப்பவும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.



காணி சுவீகரிப்புக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட மனு நேற்று மேன்முறையீட்டு நீதிமன்றில் அதன் தலைவர் நீதியரசர் எஸ்.ஸ்ரீஸ்கந்தராசா முன்பாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

காணி அமைச்சரின் சார்பில் பிரதி சட்டமா அதிபர் ஒருவர் மன்றில் முற்பட்டிருந்தார்.

வலி. வடக்கில் தமிழ் மக்களுக்குச் சொந்தமான காணிகளை இராணுவத் தேவைகளுக்காக சுவீகரிப்பதை எதிர்த்து 2,176 பேர் சார்பில் இந்த ரிட் மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

காணிகளைச் சுவீகரிப்பது தொடர்பாக காணி அமைச்சு வெளியிட்டிருந்த இரு வர்த்தமானி அறிவித்தல்களையும் உடனடியாகத் திரும்பப்பெற உத்தரவிட வேண்டும் என்று மனுதாரர்கள் கேட்டிருந்தார்கள்.

மனுதாரர்கள் நீதிமன்றிடம் கேட்டிருக்கும் நிவாரணங்களை ஏன் கொடுக்கக் கூடாது என்பதற்கான விளக்கங்களை ஜூலை மாதம் 10ஆம் திகதி மன்றில் முன்வைக்குமாறு நீதியரசர் உத்தரவிட்டார்.

அதற்கிடையில், தேவையேற்பட்டால் காணி சுவீகரிப்புக்கு எதிராக இடைக்காலத் தடை உத்தரவைப் பெறுவதற்கு மனுதாரர்களுக்கு உரிமை உள்ளது என்பதை மன்று ஏற்றுக்கொண்டிருக்கின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

மனுதாரர்கள் சார்பில் சட்டத்தரணி மோகன் பாலேந்திராவின் அனுசரணையுடன் சட்டத்தரணிகள் கனக ஈஸ்வரன், எம்.ஏ.சுமந்திரன், விரான் கொறயா, பவானி பொன்சேகா, நிரான் அங்கிட்டல் ஆகியோர் மன்றில் முற்பட்டிருந்தனர். (உ)

## பா.ஜ.கட்சியின் எம்.பிக்கள் மூவர் அடுத்த வாரம் வருவர்

### ஜனாதிபதியையும் சந்தித்துப் பேசுவர்

கொழும்பு,மே 31

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட 13ஆவது திருத்தச் சட்டத்தையும் மாகாண சபை முறைமையையும் இல்லாதொழிக்க வேண்டும் என்று ஜனாதிபதியின் சகோதரர் மற்றும் ஆளும் தரப்பு அமைச்சர்கள் தொடர்ச்சியாக வலியுறுத்தி வரும் நிலையில், இந்தியாவின் பிரதான எதிர்க்கட்சியான பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மூவர் கொண்ட குழுவினர் இலங்கைக்கு வருகைதர உள்ளனர்.

இவர்கள் வடக்குக்கும் வந்து நிலைமைகளை பார்வையிட உள்ளனர் என இந்திய ஊடகங்கள் நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளன.

பாரதீய ஜனதாக் கட்சியின் நாடாளுமன்ற கீழவை உறுப்பினர் ரவிசங்கர் பிரசாத் தலைமையிலான மூவர் கொண்ட குழுவினரே எதிர்வரும் 4 ஆம் திகதி இலங்கைக்கு வருகைதரவுள்ளனர்.

இலங்கைக்கு வருகை தரும் இவர்கள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ ஆகியோரையும் சந்தித்துப் பேசவுள்ளனர்.

அத்துடன் வடபகுதிக்கும் வந்து நிலைமைகளைப் பார்வையிட உள்ளனர். இந்திய அரசின் நிதியுதவியில் மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத் திட்டங்களையும் இவர்கள் அவதானிப்பர்.

இந்தியப் புலனாய்வுத் துறையான 'றோ' வின் அதிகாரிகள் வடபகுதியில் ரகசியப் பயணம் மேற்கொண்டு நிலைமைகளை அவதானித்து வரும் நிலையிலேயே இவர்களின் பயணம் இடம்பெற்றுள்ளது. (த-5)

## தமிழர் தீர்வு தொடர்பில் புதுடில்லியில் மாநாடு

### புலம்பெயர் தமிழருக்கும் அழைப்பு

கொழும்பு,மே 31

தமிழ் மக்களின் தீர்வு தொடர்பில் ஆராய்வதற்காக இந்தியாவில் கூட்டப்படும் மாநாட்டில் பங்குபற்றுமாறு புலம்பெயர் தமிழர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்திய மத்திய அரசின் முக்கிய நாடாளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பனினால் இந்த மாநாடு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்படுவது தொடர்பில், இங்குள்ள தமிழ்க் கட்சிகளை டில்லிக்கு அழைத்து இவ்வாறானதொரு மாநாட்டை 2011 ஆம் ஆண்டு சுதர்சன நாச்சியப்பன் நடத்தியிருந்தார்.

தொடர்ச்சி: பக்கம் 24

## தமிழக எதிர்ப்பால் ஆசியத் தடகளம் புனேக்கு மாற்றம்

சென்னை, மே 31

இலங்கை வீரர்கள் பங்கெடுப்பார்கள் என்பதால் தமிழக அரசால் சென்னையில் நடத்தத் தடை விதிக்கப்பட்ட ஆசிய தடகளப் போட்டி புனேக்கு மாற்றப்பட்டுள்ளதாக இந்தியத் தடகளக் கூட்டமைப்பு கூறியுள்ளது.

தமிழீழ விதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன், இலங்கை இராணுவத்தினரிடம் சரணடைந்த பின்னர் கொல்லப்படும் ஒளிப்படங்களை சனல்-4 கடந்த பெப்ரவரியில் வெளியிட்டிருந்தது.

இந்த ஒளிப்படங்கள் முழு உலகையுமே உலுப்பிப் போட்டன. தமிழகத்தில் மாண

தொடர்ச்சி: பக்கம் 24

## 'றோ' அதிகாரி வன்னிக்கும் பயணம்

யாழ்ப்பாணம், மே 31

யாழ்ப்பாணத்துக்கு நேற்று முன்தினம் வருகை தந்த இந்தியப் புலனாய்வு அமைப்பான 'றோ' வின் உயர் அதிகாரி நேற்று வியாழக்கிழமை கிளிநொச்சி மாவட்டத்துக்கும் சென்று இராணுவத் தளபதியைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

எல்.ஐ.என்.ஜி. சிங்ஹா தலைமையிலான 4 பேர் கொண்ட குழுவினரே நேற்று முன்தினம் யாழ்.மாவட்டத்துக்கு வருகை தந்திருந்தனர்.

இந்த நிலையில் நேற்று விசேட ஹெலி மூலம் வவுனியா விமானப் படைத் தளத்துக்குச் சென்ற 'றோ' குழுவினர் அங்கு வன்னி

தொடர்ச்சி: பக்கம் 24

## வடக்கு - கிழக்கு நிலைமைகளை ஐ.நா. குழுவினர் நேரில் ஆராய்வு

யாழ்ப்பாணம்,மே 31

ஐக்கிய நாடுகள் சபையின் மனிதாபிமானப் பணிகளுக்கான ஒருங்கிணைந்த செயலகத்தின் தலைமை அதிகாரி அக்னெஸ் செக்கென்யி தலைமையிலான குழுவினர் வடக்கு - கிழக்கு பிரதேசங்களுக்குச் சென்று தற்போதுள்ள நிலைமைகளை நேரடியாக அவதானித்து வருகின்றனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளர் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே இவர்களின் பயணம் அமைந்துள்ளது.

இந்த மாதம் 10 ஆம் திகதியிலிருந்து, வடக்கு - கிழக்கின் பல்வேறு பகுதிகளுக்கும் செல்லும் ஐ.நா. அதிகாரி அக்னெஸ் தலைமையிலான குழுவினர் எதிர்வரும் 2 ஆம் திகதி இலங்கையை விட்டுப் புறப்படவுள்ளனர்.

வடக்கின் 5 மாவட்டங்களுக்கும், கிழக்கின் 3 மாவட்டங்களுக்கும் செல்லும் குழுவி

தொடர்ச்சி: பக்கம் 24

## வாக்காளர் புதிய சட்ட வரைவு 6 ஆம் திகதி நாடாளுமன்றில்

கொழும்பு,மே 31

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தோரை வாக்காளர்களாகப் பதிவு செய்யும் விசேட ஏற்பாடுகள் சட்டவரைவு எதிர்வரும் 6 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

1983 ஆம் ஆண்டுக்கும் 2009 ஆம் ஆண்டுக்கும் இடைப்பட்ட காலப் பகுதியில் வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்டோரை அவர்களது சொந்த இடங்களில்

தொடர்ச்சி: பக்கம் 24

## ஜயலத் ஜயவர்த்தன நேற்று காலமானார்



கொழும்பு, மே 31

முன்னாள் அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான மருத்துவர் ஜயலத் ஜயவர்த்தன நேற்றுக் காலை காலமானார்.

இருதய நோயினால் பாதிப்படைந்திருந்த அவர் சிங்கப்பூர் தனியார் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் காலமானார்.

1953 ஆம் ஆண்டு பிறந்த ஜயலத் ஜயவர்த்தன 1994 ஆம் ஆண்டு ஐக்கிய தேசியக்

தொடர்ச்சி: பக்கம் 24

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பீட விரிவுரையாளருக்கு எதிராக பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டம்

## அவரது உருவப் பொம்மையும் எரிப்பு

யாழ்ப்பாணம்,மே 31

யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீட பொருளியல் துறை விரிவுரையாளருக்கு எதிராக மாணவர்களால் முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட்டு தீர்வு எட்டப்படும் வரை, குறித்த விரிவுரை யாளர் எந்தவிதமான பரீட்சை விடயங்களிலும் ஈடுபடக் கூடாதெனக் கோரி பல்கலைக்கழக மாணவர்களால் நேற்றுக் காலை போராட்டம் நடத்தப்பட்டது.



அத்துடன் குறித்த விரிவுரையாளரின் உருவப் பொம்மையையும் மாணவர்கள் பறை அடித்து ஒப்பாரி பாடித் தீ வைத்தனர்.

யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பொருளியல் துறை விரிவுரையாளருக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் மாணவர்களால் முன் வைக்கப்பட்டு அவை தொடர்பான விசாரணைகள் முடிவடையும் தறுவாயில் உள்ளன.

விசாரணைகளின் பிரகாரம் தீர்க்கமான முடிவுகள் எட்டப்படும் வரை குறித்த விரிவுரையாளர் எந்த விதமான பரீட்சை விடயங்களிலும் ஈடுபடக்கூடாது என்ற கோரிக்கையை முன்வைத்த அனைத்து பீட மாணவர்களாலும், ஊழியர் தொழிற் சங்கத்தினராலும் நேற்றுக் காலை பல்கலைக்கழக வளாகத்தில் போராட்டம் நடத்தப்பட்டது.

கணிசமான மாணவர்கள் விசாரணைக்கு நேரடியாகச் சென்று குறித்த விரிவுரையாளரின் குற்றச் செயல்களைச் சுட்டிக்காட்டியதுடன் ஆதாரங்களை முன் வைத்த பின்பும் நிர்வாகம், அவரைச் சுதந்திரமாகப் பரீட்சை விடயங்களில் ஈடுபட எப்படி அனுமதிக்க முடியும் என்று மாணவர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

போராட்டத்தில் கணிசமான மாணவ, மாணவியர் பங்கெடுத்தனர். 'அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்யும் புத்திமான்களே நாங்கள் உங்கள் பகடைக் காய்களா', 'நீதி தேவதையே எங்கள் பல்கலைக்கழகத்தில் மௌனம் காப்பது ஏன்?', 'ஆசிரியம் என்பது புனிதத் தொழில் அதை நாசம் செய்வதோ உனது தொழில்', காம வெறியனை இனங்காட்டியும் குற்றங்களை நிரூபித்தும் தண்டனை வழங்க தயங்கும் நிர்வாகமே நீ தயங்குவது எதற்கு ? என்ற வாசகங்கள் தாங்கிய பதாகைகளை ஏந்தி மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தின் இறுதியில் குறித்த விரிவுரையாளரின் உருவப் பொம்மைக்கு மாணவ, மாணவியர் செருப்பால் அடித்து, ஒப்பாரி வைத்து பறை அடித்தனர். இதன் பின்னர் பொம்மையை இழுத்துச் சென்று கைலாசபதி அரங்கின் முன்னால் வைத்து எரித்தனர்.

அத்துடன் பல்கலைக்கழக துணைவேந்தருக்கு இந்த விடயம் தொடர்பில் மனு ஒன்றும் மாணவர்களால் கையளிக்கப்பட்டது.

இது இவ்வாறிருக்க யாழ். பல்கலைக்கழக கலைப்பீட பொருளியல்துறை விரிவுரையாளரின் அறை நேற்றுக் காலை இனந்தெரியாதோரால் உடைத்து சேதமாக்கப்பட்டது.

### விரிவுரையாளருக்கு ஆதரவாக கவனயீர்ப்பு

இதேவேளை - யாழ். பல்கலைக்கழக நுண் கலைப் பீட இசைத்துறை மாணவர்கள் சிலர் நேற்று முன்தினம் மருதனார்மடத்திலுள்ள இராமநாதன் நுண்கலைக் கல்லூரியின் முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இசைத்துறை தலைவர் பதவியிலிருந்து கலாநிதி தர்ஷனன் நீக்கப்பட்டதை எதிர்த்து ஒரு சில மாணவர்களினால் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

(த-5)

# மிகப் பெரும் சொத்தை இழந்து விட்டது ஐ.தே.க

## ஜயலத்தின் மறைவுக்கு ரணில் இரங்கல்

கொழும்பு,மே 31

மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்த எங்கள் கட்சியின் மிகப்பெரிய சொத்தை இன்று இழந்து நிற்பதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் மறைவை முன்னிட்டு எதிர்க் கட்சித் தலைவரினால் விடுக்கப்பட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

ஜயலத் ஜயவர்த்தன எங்கள் கட்சியின் மிகப் பெரிய சொத்து. இன்று நாங்கள் எல்லோரும் அந்தச் சொத்தை இழந்து நிற்கின்றோம்.

இந்த நாட்டில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்காகப் பாடுபட்டவர்களில் முக்கியமானவர் ஜயலத். இங்கு இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு எதிராக அடக்கு முறைகளுக்கு மத்தியிலும் குரல் கொடுத்தவர் அவர். இவ்வாறு மனித உரிமைகளுக்காக குரல் கொடுத்த எங்கள் கட்சியின் மிகப்பெரிய சொத்தை இழந்து நிற்கின்றோம். அவரது இழப்பு பேரிழப்பாகும் - என்றுள்ளது. (த-5)

# இன்றைய இனவாதச் சூழலில் ஜயலத்தை இழந்து விட்டோம்

## மனோ கணேசன் வருத்தம்

கொழும்பு,மே 31

தமிழ் மக்களுக்காக, தமிழ் மக்களின் மனித உரிமை மீறல்களுக்காக குரல் கொடுத்த ஒருவரை இன்றைய இனவாத சூழ்நிலையில் இழந்துள்ளோம்.

எமக்காக குரல் கொடுத்ததால் 'சிங்களப்புலி ' என்று சொல்லப்பட்ட நண்பர் ஜயலத் ஜயவர்த்தனவின் மறைவு எமக்கு பேரிழப்பு என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

சிங்கப்பூரில் சிகிச்சை பெற்றிருந்த வேளையில் உயிரிழந்த நாடாளுமன்ற உறுப்பினர் ஜயலத் ஜயவர்த்தனவின் மறைவு தொடர்பில் விடுத்துள்ள இரங்கல் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

தமிழ் பேசும் மக்களுக்கு பெரும்பான்மை இன இனத்தவர் மத்தியில் புதிய நண்பர்கள் தோன்றாத நிலையில் புதிது புதிதாக இனவாதப் பகைமை பேசுபவர்கள் தான் தோன்றி வருகின்றனர்.

இந்த நிலையில் எம் மத்தியில் செயற்பட்டு வாழ்ந்து, இருந்த தமிழ் பேசும் மக்களின் நண்பர் மருத்துவக் கலாநிதி ஜயலத் ஜயவர்த்தனவின் மறைவு இன்றைய இனவாத சூழ்நிலையில் மிகப் பெரும் இழப்பாக என்னால் உணர முடிகின்றது. அவரது மறைவு என் மனதை பெரிதும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

என்னைக் குற்றத் தடுப்புப் பிரிவினர் விசாரணை என்ற பெயரில் ஒன்பது மணித்தியாலம் தடுத்து வைத்து கைது செய்ய முயற்சித்த வேளையில் என்னோடு இறுதி வரை கூட இருந்து பொலிஸ் அதிகாரிகளுடன் சண்டையிட்டு என்னை மீட்டு வந்தவர் ஜயலத்.

கொழும்பில் தமிழர்கள் நாளாந்தம் வெள்ளை வானில் கடத்தப்பட்ட போது, கொல்லப்பட்ட போது கோரப் போர் இடம் பெற்ற காலமாக அப்போதைய காலகட்டம் இருந்தது. இன்றைய நிலையை விட அன்று மோசமாகவே இருந்தது.

எங்கள் கட்சி உறுப்பினர்கள் கூட என்னுடன் தங்களை அடையாளம் காட்டிக் கொள்வதற்கு தயங்கிய கால கட்டத்தில், ஜயலத் ஜயவர்த்தன என்னுடன் இணைந்து நின்று சிங்களப் புலி என்ற பட்டத்தை சுமந்தார்.

ஜயவர்த்தனவின் தமிழ் பேசும் மக்கள் சார்பு கொள்கை தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே ஒரு பிரிவினர், அவர் மீது விமர்சனங்களை முன் வைத்த வேளையிலும் அவர் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளவில்லை.

தமிழ் மக்களுக்காகவே குரல் கொடுத்த ஜயலத் ஜயவர்த்தனவுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம் - என்றார். (த-5)

# பாஷையூர் அந்தோனியார் ஆலயக் கொடி நாளை

யாழ்ப்பாணம், மே 31

பாஷையூர் புனித அந்தோனியார் ஆலய வருடாந்தப் பெருந் திருவிழாவின் கொடியேற்றம் நாளை மாலை 5 மணிக்கு திருச்செபமாலையுடன் ஆரம்பமாகி அதனைத் தொடர்ந்து கொடியேற்றப்படவுள்ளது.



பின்னர் குழந்தை இயேசு சொரூபம் அமைந்துள்ள இடத்தில் வழிபாடுகள் நடைபெறும். எதிர்வரும் ஜூன் 13 ஆம் திகதி புனிதரின் திருவிழா நடைபெறுகிறது.

# அடிகாயங்களுடன் எரியுண்ட இளம் தாய் புதனன்று சாவு

## சந்தேகத்தில் கணவர் கைது

யாழ்ப்பாணம், மே 31

அடிகாயங்களுடன் எரிகாயங்களுக்கு உள்ளான 18 வயதுத் தாயார் சிகிச்சை பயனளிக்காது யாழ்.போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தார். இதற்குக் காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் குறித்த பெண்ணின் கணவர் வைத்தியசாலையில் வைத்து யாழ். பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் அரியாலை நாவலடியில் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த டன்சன் காயத்திரி என்பவரே நேற்றுமுன்தினம் பிற்பகல் வைத்தியசாலையில் உயிரிழந்தார். இவர் 2 மாதக் குழந்தையின் தாயாவார்.

அவரது உயிரிழப்புத் தொடர்பில் நேற்று விசாரணை இடம் பெற்றது. அதன்போது குறித்த பெண்ணின் தாயாரான தனராஜ் கவிதா சாட்சியமளித்தார். அவர் சாட்சியத்தில் கூறியிருப்பதாவது:-

தனது மகளான காயத்திரி 15 கும்போது காதல் திருமணம் செய்துவிட்டார். திருமணம் செய்தவர் வேறு சாதி என்பதனால் அவர்கள் இருவரையும் நாங்கள் சேர்க்கவில்லை. கதைப்பதும் இல்லை.

இந்நிலையிலேயே காயத்திரி எரிகாயங்களுக்குள்ளாகி வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளதாக அறிந்து வைத்தியசாலைக்குச் சென்று மகளைப் பார்வையிட்டேன். அதன் போதே நடந்த சம்பவத்தை மகள் எனக்குக் கூறினார்.

"சம்பவதினமன்று தனது கணவன் தன்னை கடையில் மண்ணெண்ணெய் வாங்கி வரும்படி கூறினார். தான் வாங்கிக் கொடுத்தேன். தன்னை அறையில் பூட்டிவைத்து அடித்தார். பின்னர் மண்ணெண்ணெய் ஊற்றித் தீ மூட்டி அறைக்குள் விட்டுப் பூட்டிவிட்டார். சிறிது நேரத்தின் பின்னர் கதவைத் திறந்தார். அதன் போது நான் தப்பி ஓடி கிணற்றடிக்குச் சென்று தண்ணீரால் ஊற்றி தீயை அணைத்துவிட்டு ஓட்டோ ஒன்லைக்கு வந்தேன்'' என்று மகள் கூறியதாக தாயார் சாட்சியமளித்தார்.

உடற்கூற்றுப் பரிசோதனையின்போது சடலத்தில் அடிகாயம் இருப்பது தெரியவந்துள்ளது. உயிரிழந்த பெண்ணின் கணவனும் வைத்தியசாலைக்குச் சென்றிருந்தார். விசாரணையின் போது பெண்ணின் உயிரிழப்புக்குக் காரணமாக இருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண்ணின் கணவனான டன்சன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டார். அவர் விசாரணைக்குட் படுத்தப்பட்டுள்ளார்.

விசாரணை மற்றும் பரிசோதனையின் பின்னர் சடலம் பெண்ணின் தாயாரிடம் ஒப்படைக்கப்பட்டது. திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந. பிறேம் குமார் இறப்பு விசாரணை மேற்கொண்டார்.

இதேவேளை எரியுண்டு மரண [illegible] நேற்று மாலை இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டதா

# ஒருவனுக்கு ஒருத்திதான் யாழ்ப்பாணத்தில்



யாழ்ப்பாணம். மே 31

யாழ்ப்பாணத்தில் ஒருவனுக்கு ஒருத்தி என்பதைப் பின்பற்றுங்கள். இதனை நான் இந்தச் சபையில் தீர்மானமாக முன்மொழிகிறேன் என்றார் யாழ்.மாநகர சபை முதல்வர் யோகேஸ்வரி பற்குணராசா.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று மாநகர சபையில் இடம்பெற்றது. இந்தக் கூட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் கலாசாரச் சீரழிவுகள் தொடர்பாக ஆளும் கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது. இதன்போதே சபை முதல்வர் இந்தத் தீர்மானத்தை முன்வைத்தார்.

யாழ்ப்பாணத்துக்கான தனிக் கலாசாரம் உள்ளது. இதனைக் கோப்பை கழுவுபவர்கள் 5 ஆம் வகுப்புப் படித்தவர்கள் கெடுக்க முயற்சிக்கிறார்கள். [illegible] ஒருவனுக்கு ஒருத்தி எனும் கலாசாரத்தைப் பின்பற்றுங்கள் என்றார் மாநகர முதல்வர்.

(த-14)

# விபசார விடுதி தேடும் மாநகர சபை உறுப்பினர்

யாழ்ப்பாணம். மே 31

விபசார விடுதிகள் யாழ்ப்பாணத்தில் எங்கே உள்ளன. எனக்கும் காட்டிக்கொடுங்கள் நானும் போக ஆசைப்படுகின்றேன் என்று நேற்று சபையில் கேட்டார் யாழ்.மாநகர சபை உறுப்பினர் றெமிடியஸ்.

யாழ்.மாநகர சபையின் மாதாந்தக் கூட்டம் நேற்று மாநகர சபையில் இடம்பெற்றது. அண்மைக்காலமாக யாழ்ப்பாணத்தில் சில விடுதிகளில் விபசாரம் இடம்பெறுகின்றமை தொடர்பாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின்றமை குறித்து மாநகர சபைக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது. இதன்போதே உறுப்பினர் றெமிடியஸ் இவ்வாறு கூறினார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்:-

யாழ்ப்பாணத்தின் கலாசாரத்தைச் சீர்குலைக்க வேண்டும் என்றே யாழ்ப்பாணத்தில் விபசாரம் இடம்பெறுவதாக வெளிமாவட்ட விசமிகள் ஊடகங்கள் ஊடாகத் தகவல்களைப் பரப்பி வருகிறார்கள். இத்தகையவர்கள் சட்டம் என்றால் என்ன? விபசாரம் என்றால் என்ன ? என்பது தொடர்பாக முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் விபசாரம் நடப்பது என்பது ஏற்றுக்கொள்ள முடியாது. எங்கே நடைபெறுகிறது? அப்படியானல் முகவரியைத் தாருங்கள். நானும் போக ஆசைப்படுகின்றேன் என்றார்.

விபசார விடுதிகள் தொடர்பாக ஆளுங்கட்சி, எதிர்க்கட்சி உறுப்பினர்களிடையே காரசாரமான விவாதம் இடம்பெற்றது.

(த-14-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-5678844, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## மீள்குடியேற்றம் குறித்த அறிக்கையும் அதன்பால் எழும் ஐயங்களும்

போரினால் இடம்பெயர்ந்த அனைவரும் மீளக்குடியேற்றப்பட்டு விட்டனர். மொத்தத்தில் 2,95,873 பேர் இது வரை இலங்கை அரசினால் -அதாவது மீள்குடியேற்ற அமைச்சினால்- மீள்குடியேற்றப்பட்டுவிட்டனர். இது அரசாங்கத்தின் புள்ளிவிவரம். ஐக்கிய நாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவின் மாநாட்டில் இதனை உத்தியோக பூர்வமாக வெளியிட்டிருக்கிறார் அதன் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி ரவிநாத் ஆரியசிங்க.

போரினால் இடம்பெயர்ந்த மக்களை அவரவர்களின் சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தும் அரசின் திட்டத்தின் கீழ், பலாலி உள்ளிட்ட இராணுவ முகாம்களில் நிலைநிறுத்தப்பட்டிருந்த படையினரை அகற்றுவது குறித்தும் ஆராயப்பட்டு வருகிறது என்றும்-

பலாலி விமான நிலையத்தையும், காங்கேசன் துறைமுகத்தையும் விஸ்தரிப்பதற்காகவும் காணிகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. விஸ்தரிப்புப் பணிகளின் போது தமது சொந்தக் காணிகளை இழப்போருக்கு நஷ்டஈடு வழங்கப்படும் என்றும்-இலங்கைப் பிரதிநிதி மேலும் தகவல் வெளியிட்டுள்ளார்.

அரசாங்கத் தரப்பின் தகவலும் புள்ளிவிவரமும் மேற்கண்டவாறு இருக்கும் அதேவேளை, நோர்வே அகதிகள் கவுன்ஸிலிலும், அனைத்துலக நாடுகளில் இடம்பெறும் இடம்பெயர்வுகளைக் கண்காணிக்கும் நிலையமும், இம்மாத முதல் வாரத்தில் வெளியிட்ட கூட்டறிக்கை ஒன்றில்-போரின் காரணமாக இடம்பெயர்ந்த 93,000 பேர் (அண்ணளவாக) உறவினர்கள் மற்றும் நண்பர்களின் வீடுகளிலும், அகதி முகாம்களிலும் இடம்விட்டு இடம் மாறிக்கொண்டிருக்கும் நிலையே காணப்படுகிறது-

வடக்கிலும்-கிழக்கிலும், படையினர் மக்களின் நிலங்களை தமது தேவைகளுக்குப் பயன்படுத்துவதால், சுமார் 26,000 பேர் தங்கள் சொந்த இடங்களுக்குத் திரும்ப முடியாமல் கஷ்டங்களை அனுபவிக்கிறார்கள்-என்று சுட்டிக்காட்டி இருந்தது.

மேற்குறிப்பிட்ட அறிக்கைகளுக்கு புறம்பாக, வடக்கிலும், கிழக்கிலும் உள்ள நலன்புரி முகாம்களுக்கு-அதாவது தமது சொந்த, முந்திய வாழ்விடங்களுக்குத் திரும்ப முடியாத நிலையில், அதற்கான ஏற்பாடுகள் எதுவும் செய்யப்படாத நிலையில் இடம்பெயர்ந்த மக்கள் தங்கி வாழும்-நலன்புரி நிலையங்களுக்கு, மீள்குடியேற்ற அமைச்சின் அதிகாரிகள் மக்களின் வாழ்க்கை நிலைமைகளை, அவர்களின் தேவைகளை கண்டறிவதற்குச் சென்று வருகிறார்கள்.

ஆயினும், அவர்களைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்துவதற்கான ஏற்பாடுகள், அதற்கான ஆயத்தங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான அறிகுறி எதுவும் இல்லை. வெறுமனே, நலன்புரி நிலையங்களில் தாம் கண்டவற்றை, அகதிகளிடம் இருந்து கேட்டவற்றை அறிக்கை இடுவதோடு அலுவல் முடிந்து விடுவதாகவே உள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில், அவற்றின் பிரதேசங்களில் இயங்கும் நலன்புரி நிலையங்களில் தங்கி உள்ள இடம்பெயர்ந்தோரின் நலன்கள் எந்தளவுக்குப் பூர்த்தி செய்யப்படுகின்றன என்பது ஏனையோருக்கு வெளிப்படுத்தப்படுவதும் இல்லை.

அதேபோன்று போரினால் இடம்பெயர்ந்து தமிழகத்தில் அகதி முகாம்களிலும், நண்பர்கள் உறவினர்களுடன் வாழும் அகதிகளைச் சொந்த நாட்டுக்கு திரும்ப அழைக்கும், வருவிக்கும் எண்ணம், திட்டம் எதுவும் இந்நாட்டு அரசிடம் இருப்பதாகத் தெரியவில்லை. கடந்த 2011 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம் 2013 ஜனவரி வரை 3063 பேர்கள் மட்டுமே தமது சொந்த நாட்டுக்கு வந்துள்ளனர்; திரும்பி உள்ளனர்.

உள்நாட்டில், நலன்புரி முகாம்களில் வேண்டா வெறுப்புடன் பலவகைப்பட்ட இல்லாமைகளுடனும் வேதனைகளுடனும் காலத்தை விரயமாக்கும் நிலை அறிந்த பின்னர், தமிழகத்தில் அகதிகளாக வாழ்வோர் இலங்கை வருவதற்கு எவ்வாறு மனம் கொள்வர்....?

இயற்கை அனர்த்தங்கள் மற்றும் போர் போன்றவற்றால் இடம்பெயர்ந்த மக்களை நாட்டின் ஏனைய பிரசைகளைப் போன்று வாழச் செய்வதற்கு, அவர்களையும் மனிதர்களாக மதித்து, தேவையான வசதிகளைச் செய்ய வேண்டும் என்று அனைத்துலக மனிதாபிமானச் சட்டங்கள் பலவும் சுட்டிக்காட்டுகின்றன.

அவற்றில்,புனர்வாழ்வுக்குரிய தவிர்க்க முடியாத, ஆகக் குறைந்த ஆறு அம்சங்களாகப் பின்வருவன அமைகின்றன; அனைத்துலக மட்டத்தில் இனம் காணப்பட்டுள்ளன;

★ வாழ்வதற்கு உகந்த பொருத்தமான நிலம்; பாதுகாப்பான புகலிடம்.

★ குடியிருப்பு வசதிக்கான உதவி.

★ உணவு மற்றும் மருத்துவம் போன்ற இன்றியமையாத அடிப்படை வசதிகள்.

★ குடிதண்ணீர் மற்றும் சுகாதார வசதிகள்.

★ உளவியல் தாக்கம் ஏற்படாமல் பாதுகாத்துக் கொள்ளலும் அதற்குரிய வழிகாட்டுதல்களும்.

★ உயிராபத்துக்கு இடமளிக்காமையும் கண்ணிவெடிகளை அகற்றுதலும்.

போரின் காரணமாக, இடம்பெயர்ந்த வடக்கு, கிழக்கு மக்களுக்கு நலன்புரி நிலையங்களில் வாழும் மக்களுக்கு இந்த அடிப்படை, ஆதார வசதிகள் செய்யப்படுகின்றனவா?

இந்த வினாவுக்கு விடை எப்படி அமைகின்றது என்பதனை இடம்பெயர்ந்த மக்களிடம் இருந்து சறுக்கல், கோணல் இல்லாமல் திரட்டுவதற்கும், அவர்கள் கூறுவனவற்றை திரித்துவிடாமல் வெளிப்படுத்தவும் அரசு முன்வருமா என்ற வினா இயல்பாகவே எழுகிறது. அவை எல்லாவற்றையும் உள்ளடக்கியே, ஜெனிவாவுக்கான இலங்கை அரசின் நிரந்தரப் பிரதிநிதி கருத்து வெளியிட்டாரா என்ற ஐயம் எவருக்கும் எழுவது இயல்பே...!



# விவசாய டிப்ளோமா கற்கைநெறியில் வடபகுதி மாணவர் அக்கறையில்லை

## வேலை வாய்ப்பு கை நழுவிப் போகிறது

அச்சுவேலி, மே 31

இலங்கை விவசாயக் கல்லூரியினால் நடத்தப்படும் விவசாய டிப்ளோமா கற்றைக் நெறியை பயில்வதில் வட பகுதியை சேர்ந்த தமிழ் மாணவர்கள் அக்கறை காட்டுவதில்லை எனக் கவலை தெரிவிக்கப் படுகின்றது.

ஒரு சிலர் மட்டுமே பயிற்சியில் இணைந்து கொள்வதால் தமிழர்கள் பலர் உயர் வேலை வாய்ப்பு வசதியை இழந்து வருகின்றனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

விவசாய டிப்ளோமா இரண்டு வருட கற்கைநெறி 2014-2016 இற்கு விண்ணப்பிக்க வேண்டிய இறுதித் திகதி இன்று 31 ஆம் திகதியுடன் முடிவடைகின்றது.

ஜி.சீ.ஈ. உயர்தரம் விஞ்ஞான பிரிவில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம். விவசாயக் கல்லூரிக்கு மாணவர்களை தெரிவு செய்வதற்கான போட்டிப் பரீட்சை ஜூலை மாதம் 27 ஆம் திகதி யாழ்ப்பாணம் உட்பட குறிப்பிட்ட முக்கிய நகரங்களில் நடைபெறவுள்ளது. விண்ணப்பம் தொடர்பான மேலதிக விவரங்கள் ஏப்ரல் 26 ஆம் திகதி வெளியான வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

விவசாய டிப்ளோமா சான்றிதழ் பெற்றுக் கொண்டவர்களுக்கு தனியார் துறையிலும் அரச துறையிலும் விவசாயத்திணைக்களத்திலும் உயர் பதவி மற்றும் விவசாய தொழில்நுட்பத் துறையில் உயர் பதவி பெறுவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன.

தமிழர்கள் பயிற்சி நெறியில் உரியமுறையில் இணைந்துகொள்ளத் தவறுவதால் பெரும்பான்மை இனத்தை சேர்ந்தவர்கள் குறித்த வேலை வாய்ப்பைப் பெற்றுக்கொள்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

விவசாயக் கல்லூரியினால் நடத்தப்படும் விவசாய டிப்ளோமா பயிற்சி தமிழ்மொழி மூலம் குண்டகசாலை, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறுகின்றது. (த-11)

## மாணவர்களுக்குத் தினமும் 10 நிமிடங்கள் உடற்பயிற்சி



வடமராட்சி,மே 31

மாணவர்களின் உடல், உள ஆற்றல்களை விருத்தி அடைய வைக்கும் நோக்கில் மாணவர்களுக்கு தினமும் 10 நிமிடங்கள் உடற்பயிற்சி வழங்கும் திட்டம் எதிர்வரும் ஜூன் 10 ஆம் திகதி முதல் சகல பாடசாலைகளிலும் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மத்தியில் நீரிழிவு மற்றும் ஏனைய தொற்றும், தொற்றாத நோய்களின் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதாக கண்டறியப் பட்டுள்ளது.

இதனையடுத்தே மாணவர்கள் உடல், உள விருத்தியைக் கருத்தில் கொண்டு பாடசாலைகளில் மாணவர்களுக்கு உடற்பயிற்சி அளிக்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

தினம் தோறும் பாடசாலைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் 10 நிமிடங்கள் வரை அதாவது காலைக் கூட்ட நேரத்தில் இந்த உடற்பயிற்சி வழங்கப்படும்.

இதற்கென புதிய பயிற்சிகள் அடங்கிய பயிற்சித் திட்டம் ஒன்று கல்வி அமைச்சினால் வடிவமைக்கப்பட்டு சகல பாடசாலைகளுக்கும் அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (த-8)

## மருத்துவர் சிவசங்கரை விடுவிக்குமாறு கையெழுத்து

கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள மருத்துவர் சிவசங்கரை விடுவிக்கக்கோரி வடக்கு கிழக்கில் உள்ள இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகளிடம் கையொப்பம் பெறும் நடவடிக்கைகளை இந்து மகா சபை மேற்கொண்டுள்ளது.

இந்து அமைப்புக்களின் பிரதிநிதிகள் பின்வரும் இடங்களில் உள்ள மனுவில் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை வரை கையொப்பம் இடலாம் என இந்து மகா சபை அறிவித்துள்ளது.

யாழ்ப்பாணம் கந்தர்மடம் குமார சுவாமி வீதியில் அமைந்துள்ள வேதாந்தமடம், கிளிநொச்சி செயலகத்துக்கு அண்மையாகவுள்ள சிவத் தமிழ் அறநெறி மையம், வவுனியா கோயில் குளம் அகிலாண்டேஸ்வரர் (சிவன் கோவில் ) ஆலயம், அம்பாறை தம்பிலுவில் சிவன்மானிட மேம்பாட்டு நிறுவனம், திருகோணமலை சென்மேரிஸ் வீதியில் அமைந்துள்ள சிவன்மானிட மேம்பாட்டு நிறுவனம், மட்டக்களப்பு சிவன்மானிட மேம்பாட்டு நிறுவனம் ஆகிய இடங்களில் கையொப்பம் இடலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-8)

## வங்கக் கடலில் மீன்பிடி தடை நீக்கப்பட்டது நேற்று முதல்

யாழ்ப்பாணம், மே 31

மீன்களின் இனப்பெருக்கத்துக்காக மீன் பிடிக்கத் தடைவிதிக்கப்பட்டிருந்த வங்கக் கடல் பகுதியில் நேற்று முதல் தமிழக மீனவர் மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் குறிப்பிட்ட காலப் பகுதியில் மீன்களின் இனப்பெருக்கத்துக்காக ஒன்றரை மாதம் மீனவர்கள் கடலுக்குச் செல்லத் தடை விதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடைக்காலம் நீக்கப்பட்டதையடுத்து நேற்று மீனவர்கள் கடலுக்குச் செல்ல அனுமதி வழங்கப்பட்டது. இதனையடுத்து தமிழகம் மற்றும் புதுச்சேரி மீனவர்கள் நேற்று கடலுக்குச் செல்ல ஆரம்பித்தனர்.

தடைக்காலம் நீக்கப்பட்டாலும் காற்றமுத்த தாழ்வு நிலை மற்றும் புயல் வாய்ப்பு உள்ளதால் ஆழ்கடலுக்குச் சென்று மீன்பிடிக்க வேண்டாம் எனவும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (த-14)

## நானாட்டான் பிரதேச செயலக கலாசாரப் பெருவிழா இன்று

மன்னார், மே 31

நானாட்டான் பிரதேச செயலக கலாசார பேரவையின் கலாசாரப் பெருவிழா இன்றும் நாளையும் நானாட்டான் மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

நானாட்டான் பிரதேச செயலாளரும் கலாசார பேரவைத் தலைவருமான க.அ.சந்திரஐயா தலைமையில் நடைபெறும் இந்த விழாவில் பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரச அதிபர் சரத் ரவீந்திரா தேசிய கரும மொழிகள் அமைச்சின் மேலதிக செயலாளர் க.நிக்கலஸ் பிள்ளை ஆகியோர் கலந்து கொள்வர்.

பிற்பகல் 3 மணி தொடக்கம் இரவு 8 மணி வரை நடைபெறும் இன்றைய நிகழ்வில் கவியரங்கம், பட்டிமன்றம், நாடகம் என்பன இடம் பெறவுள்ளன.

2ஆம் நாள் நிகழ்வில் மொனராகலை மாவட்ட அரச அதிபர் அ.பத்திநாதன் கலந்து கொள்வார். இந்த நிகழ்வில் துறைசார்ந்த 9 கலைஞர்களுக்கு 'நெடுங்கலை வித்தகர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படுவதுடன் கலாபூஷணம் பட்டம் பெற்ற 5 பேர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படவுள்ளனர். (வ-86)

## நாளை முதல் வடக்கிலும் வாகன புகைப் பரிசோதனை

வலி.வடக்கு, மே 31

நாளை முதலாம் திகதி முதல் வட மாகாணத்திலும் வாகனங்களுக்கான புகைப் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளது. இது தொடர்பான அறிவித்தல் ஏற்கனவே மோட்டார் போக்குவரத்துத் திணைக் கள ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கைக்கு அமைவாக வடமாகாண போக்குவரத்து திணைக்களத்தினாலும் சுற்றறிக்கை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

உரிய வாகனங்கள் புகைப் பரிசோதனைக்கு உள்ளாக்கப்பட்டு உரிய சான்றிதழ் வழங்கப்பட்டாலே அடுத்த மாதம் முதல் பிரதேச செயலகங்களினால் வரி அனுமதிப்பத்திரம் வழங்கப்படும்.

புகைப் பரிசோதனை செய்வதற்கு பின்வரும் கட்டணங்கள் வாகன உரிமையாளர்களிடம் இருந்து அறவிடப்படவுள்ளன.

மோட்டார் சைக்கிள் (பெற்றோல், டீசல்) 415 ரூபா, ஓட்டோ (பெற்றோல், டீசல்) 505 ரூபா, கார் (பெற்றோல், டீசல்) 1,110 ரூபா, வான் (பெற்றோல், டீசல்) 1,200 ரூபா, லொறி (பெற்றோல், டீசல்) 1,560 ரூபா, பஸ் (பெற்றோல், டீசல்) 1,010 ரூபா, கனரக வாகனம் (டீசல்) 1,660 ரூபா (த-86-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் இடமாற்றத்தை கண்டித்து கொக்குத்தொடுவாயில் ஆர்ப்பாட்டம்



முல்லைத்தீவு, மே 31

முல்லைத்தீவு, கொக்குத் தொடுவாய் அ.த.க. பாட சாலையில் அதிபர் இடமாற் றத்தைக் கண்டித்து நேற்று பெற்றோர், மாணவர்களால் ஆர்ப் பாட்டம் மேற்கொள்ளப் பட்டது.

இது குறித்து தெரியவருவதாவது;

கொக்குத்தொடுவாய் அ.த.க. பாட சாலை மீளக் குடியேற்றத்தின் பின் சொந்த இடத்தில் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதல் கனகசபாபதி சுபாஜிதன் என்பவர் அதிபராகக் கடமை புரிந்து வந்து ள்ளார். 2013 பெப்ரவரி 22 முதல் பாடசா லைக்குப் புதிய அதிபராக முல்லைத்தீவு மாவட்ட கல்விப் பணிப்பாளரின் சகோதரர் மாணிக்கவாசகம் உதயகுமார் நியமிக்கப்ப ட்டார். இதன் பின்னர் கனகசபாபதி சுபாஜிதன் உப அதிபராகவும் ஆசிரியராகவும் கடமையாற்றினார்.

கடந்த 21 ஆம் திகதி பணிக்குச் சென்ற சுபாஜிதன் புதிய அதிபரால் பணியி டம் மாற்றப்பட்டுள்ளதாகக் கூறி திருப்பி அனுப் பப்பட்டுள்ளார்.

இதனைக் கண்டித்து கொக்குத்தொடுவாய் அ.த.க. பாடசாலை பெற்றோர், பழைய மாணவர்கள் உட் பட மாணவ சமுதாயத்தினர் நேற்று வியாழக்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு ள்ளனர்.

இது குறித்து கனக சபாபதி சுபாஜிதன் கூறுகையில்;

நான் அதிபராகக் கடமையாற்றித் தற் போது இட மாற்றம் பெற்றுள்ளமை யைக் கண்டித்து ஆர்ப்பா ட்டம் மேற்கொள் ளப்பட்டது. இடமாற் றத்துக்கு தகுந்த காரணங்கள் இல்லா ததால் கணக்கு சரியாக சமர்ப்பிக்கப்பட வில்லை எனப் புதிய அதிபர் கூறியுள்ளார் - என்றார்.

இதற்குப் பதிலளித்த முல்லைத்தீவு கல்விப் பணிப்பாளர் மாணிக்கவாசகம் இராஜகுமாரன், '' என்னைப் பொறுத்தவரை அப்ப டியான ஆர்ப்பாட்டங்கள் எதுவும் நடைபெற வில்லை. எனக்கு இது குறித்து அறி யத்தரப்படவில்லை- என்றார்.

'உதயன்' பத்திரிகை செய்திகளை உறுதிப்படுத்தாமல் பிரசுரிக் கின்றது. இது குறித்து எனது திருப்தியின்மையை தெரிவிக்கின்றேன். இந்தப் பத்திரிகை உருவாக்கப்பட்ட செய்திகளால் பிரச்சினையை உருவாக்குகின்றது என்று அவர் மேலும் கூறினார். (த-ரி)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி கந்தையா

(முன்னாள் ஊழியர் காங்கேசன் சிமெந்து கூட்டுத்தாபனம்)



தியேட்டர் லேன், இணுவில் கிழக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி கந்தையா நேற்று (30.05.2013) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - இலட்சுமி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான வன்னியர் -தங்கம் தம்பதியரின் அன்பு மருமகனும், தையல்நாயகியின் அன்புக் கணவரும், அருள்மொழி, அருள்நிதி, அருள்மதி ஆகியோரின் அன்புத் தந்தையும், அருமைநாயகம், தபேந்திரன், கேமன்யோசேப் ஆகியோரின் அன்பு மாமனும் டொறின் ஆனல்டா, ஜோய், பிரவீன், கவின், மினாடா, கெவின், கெய்டன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

தியேட்டர் லேன், இணுவில் கிழக்கு. (37840)(14.9.7) 0217200006

## கண்ணீர் அஞ்சலி



விநாயகப் பெருமானின் அதீத அன்புசால் அடியாராக விளங்கி எமது முத்து விநாயகப் பெருமான் ஆலய புனர் நிர்மாணத்துக்கும் மகா கும்பாபிஷேகத் துக்கும் பெரும் நிதி அன்பளிப்புச் செய்து ஆலய அடியார்களின் நன்மதிப்பை பெற்று திகழ்ந்த லண்டன் வாழ்

### கனகரத்தினம் செல்வராசா

அவர்கள் கடந்த 29.04.2013 அன்று இறைபதம் எய்திய செய்தி எம் எல்லோரையும் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தியது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய ஸ்ரீ முத்து விநாயக பொருமானின் திருவருளை வேண்டி நிற்கின்றோம்.

பரிபாலனசபை (37838)(14.9)

யா/அரியாலை கிழக்கு ஸ்ரீமுத்து விநாயகர் ஆலயம்.

## சிங்கப்பூர் மற்றும் மலேசியா நாட்டில் உடனடி வேலை வாய்ப்பு

அதி உயர் சம்பளம், தங்குமிடம் மருத்துவம் இலவசம்
மலேசியாவில் துறைமுகத்தில் வேலைவாய்ப்பு ஒரு வாரத்தில் பயணம்
சிங்கப் பூரில் ஏனையதுறைகளில் வேலை வாய்ப்பு

உடன் தொடர்புகொள்ளவும் LANKA VOICE 077 0584658

## கண்ணீர் அஞ்சலி

### திருமதி செல்லத்துரை பொன்னம்மா

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும் நெடுங்கேணியை நிரந்தர வதிவிடமாகவும் நெளுக்குளத்தை (வவுனியா) தற் போதைய வதிவிடமாகவும் கொண்ட காலஞ்சென்ற இராமலிங்கம் செல்லத்துரையின் அன்பு மனைவி பொன் னம்மா நேற்று (30.05.2013) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (31.5.2013) வவுனியாவில் நடைபெறும் வேளையில் எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

(37830)(6.7.11) தம்பையா தர்மலிங்கம் (குடும்பத்தினர்)

மாசிவன், நீர்வேலி.


## ஆசிரியர்களுக்கான செயலமர்வு

வடமராட்சி, மே 31

வடமராட்சி வலயப் பாடசாலைகள் தரம் 10, 11 வகுப்புகளில் தமிழ் மொழி கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று வெள்ளிக்கிழமையும், நாளை சனிக்கிழ மையும் புலோலி மெ.மி.பாடசாலை ஆசிரிய வள நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை கோட்ட ஆசிரியர்களுக்கும், நாளை சனிக் கிழமை கரவெட்டி கோட்ட ஆசிரியர்களுக்கும் இந்தச் செயலமர்வு இடம்பெறும். (ஒ-8)

## 'ஞான செளந்தரி' 8, 9 ஆம் திகதிகளில்

குருநகர், மே 31

யாழ். திருமறைக் கலாமன்றம் நாளையும் நாளைமறுதினமும் மேடையேற்றுவதற்காக அறிவித்திருந்த 'ஞானசெளந்தரி' இசை நாடகம் தவிர்க்கமுடியாத காரணங்களால் பிற்போடப்பட்டுள்ளது என யாழ். திருமறைக் கலாமன்றத்தின் செயலாளர் எம். நெல்சன் அறியத்தந்துள்ளார். 'ஞானசெளந்தரி' எதிர் வரும் ஜூன் 8 ஆம், 9 ஆம் திகதிகளில் யாழ். திருமறைக்கலாமன்ற அரங்கில் மேடையே றவுள்ளது என்றும் அவர் கூறினார். (ஒ-51)


## லேத்மேன் தேவை (LATHE MAN)

யாழ். நகரை அண்மித்த பகுதியில் புதி தாக ஆரம்பிக்கப்படவுள்ள இன்ஜினிய ரிங் கம்பனி ஒன்றுக்கு கடைச்சல் இயந்திர தொழிலாளர் தேவை.

தொடர்புகளுக்கு:0773168650

## காணி விற்பனைக்கு

283/8, புகையிரத நிலைய வீதி, கந்தர்மடம் யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 1¾ (ஒரு பரப்பு 9குழி) காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகொள்ள வேண்டிய (37836) தொலைபேசி இலக்கம்:- 077 6114924

## வீடு வாடகைக்கு தேவை

யாழ்ப்பாணம், கொக்குவில், கோண்டாவில், திருநெல்வேலி, தாவடி, நல்லூர் ஆகிய பிரதேசங்களில் சகல வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு- 0757370899 (37832)(14.9)

## பொதுக்கூட்டம்

### யா/புனித பொஸ்கோ வித்தியாலயம்

காலம்: 16.06.2013 (ஞாயிற்றுக்கிழமை)
இடம்: பாடசாலை மண்டபம்
நேரம்: மு.ப. 9.30 மணி

பெற்றோர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

அருட்சகோதரி எம். ஜீவந்தி, தலைவர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.
இ. சுரேந்திரநாதன், செயலாளர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்.

## மரண அறிவித்தல்

### கணபதிப்பிள்ளை சூரியகுமார்



நவாலி வடக்கைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக் கட்டுவன் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட கண பதிப்பிள்ளை சூரியகுமார் 29.05.2013 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப் பிள்ளை - சகுந்தலா தம்பதியரின் பாசமிகு மகனும் இராசரத்தினம் நல்லம்மா தம்பதியரின் மருமகனும் இராசேஸ்வரியின் அன் புக் கணவரும் சுதர்சன் (கனடா), சசீதரன் (ஆசிரியர், மெய்கண்டான் ம.வி. பண்ணாகம்), மயூரன் (கனடா), சுகன்யா (கனடா) ஆகியோரின் அன்புத் தந் தையும் நளினி (கனடா), பத்மினி (ஆசிரியர், கலாநிதி ஆ.தியாகராசா ம.ம.வி. காரைநகர்) ஆகியோரின் மாமனும் சயனன் (கனடா), சனோபன், பொன்சியா ஆகியோரின் பேரனும் இராசலட்சுமி, ஜெயக்குமார், சந்திரகுமார், சறோஜா ஆகியோரின் சகோதரனும், வைத்தீஸ்வரன், றஞ்சன் (ஜேர்மனி), றஞ்சினி (ஜேர்மனி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 31.05.2013 வெள்ளிக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரது இல்லத்தில் (புன்னாலைக்கட்டுவன் வடக்கு) நடைபெற்று தகனக்கிரியை ஈவினை இந்து மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.

நிலாவரை வீதி, புன்னாலைக் கட்டுவன் வடக்கு, சுன்னாகம். (37841) (23-14) 0773480026

## 2015 BIOLOGY EXAM MARKS LIST-

| | | | |
|---|---|---|---|
| 01. | யாழினி சாள்ஸ் | 93 | J. V. G. H. S |
| 02. | நவநீதா சிவநேசநாதன் | 92 | J. V. G. H. S |
| 03. | சுலக்சனா முருகதாஸ் | 91 | J. V. G. H. S |
| 04. | தனுசியா கருணாகரன் | 90 | J. V. G. H. S |
| 05. | டியீர்த்தனா ஜெயநந்தராசா | 89 | J. H. L. C |
| 06. | பிரியங்கா ஜெயசாந்தன் | 89 | J. V. G. H. S |
| 07. | மாதுரி முத்துக்கிருஸ்ணன் | 85 | J. C. G. C |
| 08. | பிரணவி.S | 84 | J. U. G. C |
| 09. | சிறிபாலன் தேவதர்சன் | 84 | ST. P. C |
| 10. | தர்மிளா.K | 81 | J. V. G. H. S |
| 11. | தனஞ்சிகா சின்ராசா | 80 | MU. P. C. C |
| 12. | சரண்ஜா நடேசகாந்தன் | 80 | J. V. G. H. S |
| 13. | அபிராமி சின்ராசா | 78 | U. G. C |
| 14. | சற்குணம் ஸ்ரீகணன் | 78 | ST. P. C |
| 15. | தமயந்தி இரங்கநாதன் | 78 | J. H. L. C |
| 16. | அக்ஷானி சந்திரராசா | 77 | J. V. G. H. S |
| 17. | மிதுசா சண்முகானந்தன் | 77 | C. G. C |
| 18. | சிந்துஜா சந்திரன் | 75 | J. V. G. H. S |
| 19. | பீற்றர் பேதுருஷன் | 75 | S. P. C |
| 20. | தனுசியா மகேந்திரன் | 74 | J. V. G. H. S |
| 21. | கஜவாணி நகுலேஸ்வரன் | 74 | C. G. C |
| 22. | கருணானந்தன் அனோபன் | 73 | J. H. C |
| 23. | ஆனந்தராஜா யதுர்சன் | 73 | J. H. C |
| 24. | இராமச்சந்திரன் தனேஸ் | 73 | ST. J. C |
| 25. | பெலேமின்அக்னேஸ்வரன் | 73 | MU. P. C. C |

சு. பொன்திவாகரன்
Science Corner

## பட்டதாரிகளுக்கான மாநாடு



யாழ். மாவட்ட அமைப்பாளர் **திரு அங்கஜன் இராமநாதன்** தலைமையில் யாழ். மாவட்ட ஸ்ரீ லங்கா சுதந்திர பட்டதாரிகள் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு அதனூடாக யாழ் மாவட்டத்தில் உள்ள அனைத்து பட்டதாரிகளுக்கும் பட்டதாரி பயிலுநர்கள் நியமனம் வழங்கப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக **திரு.அங்கஜனின்** ஏற்பாட்டில் யாழ். மண்ணில் **கௌரவ நாமல் ராஜபக்ஷ** தலைமையில் பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் **02.06.2013** ஞாயிற்றுக்கிழமை காலை **9.00** மணிக்கு யாழ். [illegible] நடைபெறவுள்ளது.

எனவே இந்தக் கலந்துரையாடலில் பட்டதாரிகள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.



**அங்கஜன் இராமநாதன், ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி, யாழ் மாவட்ட பிரதான அமைப்பாளர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி.தென்மேற்கு பிரதேச சபை கூட்டத்தில் தொடர்ந்து சர்ச்சை

## அறிக்கைகளை அங்கீகரிப்பதில் சிக்கல்

வலி.தென்மேற்கு, மே 31

வலி.தென்மேற்கு பிரதேச சபை கடந்த காலங்களில் நடைபெற்ற ஆறு கூட்டங்களின் அறிக்கைகளை அங்கீகரிப்பதற்காக மட்டும் விசேட கூட்டத்தை கூட்டி பிரதேச சபையின் வரலாற்றில் சாதனை நிலை நாட்டியுள்ள அதே நேரம் ஆளுங்கட்சி உறுப்பினர்கள் இடைநடுவில் சபையை விட்டு வெளியேறியதால் அறிக்கைகள் அங்கீகரிக்கப்படாமல் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

பிரதேச சபையின் முதலாவது கூட்டம் 2011ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் முதலாம் திகதி தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் 48 மாதகால ஆட்சியில் இதுவரை 20 மாதங்கள் முடிவடைந்துவிட்டன. இந்தக் காலப் பகுதியில் 46 கூட்டங்கள் நடைபெற்றுள்ளதுடன் 250 இற்கும் மேற்பட்ட தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டுள்ளன. இவற்றில் கடந்த வருட கூட்ட அறிக்கை உட்பட ஆறு கூட்டங்களுக்கான அறிக்கைகள் சபையினால் அங்கீகரிக்கப்படவில்லை.

கடந்த மாதம் நடைபெற்ற மாதாந்தக் கூட்டத்தில் இது பற்றிச் சுட்டிக்காட்டிய ஆளுங் கட்சி உறுப்பினர், சபையின் அங்கீகாரத்துக்காக எதிர்வரும் கூட்டத்தில் மேற்படி அறிக் கைகள் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென்றும் தவறும் பட்சத்தில் சபையிலிருந்து வெளியேறுவோமென்றும் தெரிவித்தனர். இதற்கு எதிர்க்கட்சி உறுப்பினர்களும் ஆதரவு வழங்கினர்.

இந்த நிலையில் அறிக்கைகளை அங்கீகரிப்பதற்கான விசேட கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை தவிசாளர் அ.ஜெபநேசன் தலைமையில் சபை மண்டபத்தில் ஆரம்பமானது.

வாசிக்கப்பட்ட ஒரு சில கூட்ட அறிக்கைகளில் கடந்த கால கூட்டங்களில் உறுப்பினர்களால் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள், தீர்மானங்கள் குறிப்பிடப்படவில்லை என்று சுட்டிக் காட்டிய ஆளுங்கட்சி உறுப்பினர்கள் சபையை விட்டு வெளியேறினர்.

இதனால் அறிக்கைகளை அங்கீகரிப்பதற்காக ஒழுங்கு செய்யப்பட்ட விசேட கூட்டமும் முடிவின்றி ஒத்திவைக்கப்பட்டது.

சபையின் நிலைப்பாடு குறித்துக் கவலையும் விசனமும் தெரிவித்துள்ள பொதுமக்கள் பிரதேசத்தின் அபிவிருத்திக்கு இது ஒரு முட்டுக்கட்டை என்று கூறியுள்ளனர். (த-115)

## மானிப்பாய் இந்துக் கல்லூரி நாடகப் போட்டியில் 2ஆம் இடம்



யாழ்ப்பாணம்,மே 31

கொழும்பு றோயல்கல்லூரி நடத்திய நாடகப் போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளதுடன் இரண்டு விருதுகளையும் பெற்றுக்கொண்டது.

கொழும்பு றோயல்கல்லூரியின் நாடக மன்றத்தினால் அகில இலங்கைப் பாடசாலைகளுக்கிடையில் வருடாந்தம் நடத்தப்பட்டு வருகின்ற நாடகப்போட்டியில் இந்த ஆண்டுக்கான மாவட்ட மட்டப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரியின் நாடக அணி இரண்டாமிடத்தைப் பெற்றுக் கொண்டதுடன் இரண்டுவிருதுகளையும் பெற்றுள்ளது.

கொழும்பு றோயல்கல்லூரியின் நாடக மன்றத்தின் நாடகப்போட்டி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற போதே, மேற்படி மானிப்பாய் இந்துக்கல்லூரியின் 'ஏற்றம்' எனும் நாடகம் வெற்றி பெற்றுள்ளது. இந்த நாடகம் சிறந்த நாடகப் பிரதி, சிறந்த துணை நடிகை ஆகிய இரண்டு விருதுகளைப் பெற்றுக் கொண்டுள்ளது.

சிறந்த எழுத்துருப்பிரதியாளராக ஜெயரூபன், சிறந்த துணை நடிகையாக விதுசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். நடிகர்களாக ஜெயரூபன், கலைக் சன், சாறுசன், குபேரன், ஜெயகோபன், தனுசன், கரீஸ், விதுசன், தாருஷன், தவேன்சன், அகிலன், சஞ்சீவன், சுஜீவன், சுஜீவ், குகதாஸ், ரிதுசன், திஸ்னுகன் ஆகியோர் நடித்துள்ளனர்.மேலும் தனி நடிப்புப்போட்டியில் மத்திய பிரிவில் ஜே.சானுஜன் முதலாமிடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (த)

## கவுணாவத்தை ஆலயத்தில் மிருக பலியை நிறுத்துங்கள்

### இந்து மாமன்றம் வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,மே 31

இளவாலை கவுணாவத்தை ஆலயத்தில் இந்த வருடமும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள மிருக பலியை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து மேலும் கூறப்பட்டுள்ளதாவது:-

இந்து ஆலயங்களில் மிருக பலி மேற்கொள்ள வேண்டாம் என்று அகில இலங்கை இந்து மாமன் றத்தால் பல தடவைகள் வேண்டு கோள் விடுக்கப்பட்டு வருகிறது. மிருக பலி கொடுப்பது இந்து சமயத்துக்கு ஒவ்வாததும் ஏற்றுக்கொள்ள முடியாததுமான செயலாக இருப்பது தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

மனிதர்களுக்காக மிருகங்களைப் பலியிடுவதும் ஆலயத் திருத்தலத்திலோ, சுற்றாடலிலோ எந்த ஓர் உயிரினத்துக்கும் கொடுமை செய்வதும் அனுமதிக்க முடியாதவை.

ஆனால் யாழ் .சிவபூமியில் கவுணாவத்தை ஆலயத்தில் இந்த வருடமும் மிருகபலி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. எனவே அதனை உடனடியாக நிறுத்துவதற்கு ஆலய நிர்வாகத்தினரும், பூசகர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

இந்து சமயத்தின் புனிதமான கோட்பாடுகளுக்கோ அல்லது வழிபாட்டுத் தலங்களின் புனிதத்துக்கோ களங்கம் ஏற்படுத்த வேண்டாம்–என்றுள் ளது.

இதேவேளை- மிருக பலியை நிறுத்துமாறு கோரிப் பல இடங்களில் துண்டுப் பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. உரும்பிராய், மல்லாகம், தெல்லிப்பழை, கீரிமலைஆகிய இடங்களில் இவை விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (த-14-86)

## வெள்ளை மாளிகையின் உயர் விருது ஈழத் தமிழருக்கு

ஈழத்தமிழரான பேராசிரியர் சிவலிங்கம் சிவானந்தன் அமெரிக்காவில் வெள்ளை மாளிகையினால் வழங்கப்படும் உயர்விருதான "Champion of Change" விருது வழங்கி கௌரவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 29ஆம் திகதி காலை வெள்ளை மாளிகையில் இந்த விருது வழங்கல் நிகழ்வு இடம்பெற்றது. புலம் பெயர்ந்து அமெரிக்காவில் வாழும் வேற்று நாட்டவர்களின் முன்னோடியான கண்டுபிடிப்புக்களுக்காக வழங்கப்படும் இந்த விருதைப் பெற்றவர்களுள் பேராசிரியர் எஸ். சிவானந்தன் ஒருவரே தமிழர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இவருடன் சேர்த்து 11 பேருக்கு விருதுகள் வழங்கப்பட்டன.



சிக்காக்கோ இலினோஸ் பல்கலைக்கழகத்தின் இயற்பியல் துறைப் பேராசிரியராகக் கடமையாற்றும் இவர், இயற்பியலில் பல கண்டுபிடிப்புக்களை வெளியிட்டுள்ளதுடன், பல ஆய்வுகளிலும் ஈடுபட்டுள்ளார். தனது முயற்சியினால் ''சிவானந்தன் ஆய்வு மையம்'' என்ற இயற்பியல் ஆய்வு கூடத்தை நிறுவி அதனூடாக பல ஆய்வு நடவடிக்கைகளுக்கு உதவி வருவதுடன், இலாபநோக்கற்ற பல ஆய்வு உதவிகளையும் மேற் கொண்டிருக்கிறார். இவரது அனுசரணையுடன் யாழ்ப்பாண பல்கலைக்கழக பௌதிகவியற்றுறையினரும் இலினோஸ் பல்கலைக் கழகத்துடன் பௌதிகத் துறையில் கூட்டு ஆய்வு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர்.

யாழ். சாவகச்சேரியைப் பிறப்பிடமாகக் கொண்ட பேராசிரியர் சிவானந்தன் யாழ். இந்துக்கல்லூரியின் பழைய மாணவர் ஆவார். (த)

## குற்றச் செயல்கள் இல்லாத சமுதாயத்தை உருவாக்குவோம்

### கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி உரை

யாழ்ப்பாணம், மே 31

எதிர்காலத்தில் ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து உறுதியுடன் உழைப்போம் என கோப்பாய் பொலிஸ் பொறுப்பதிகாரி ஸ்ரீ நிகாப் சஞ்சீவ ஜெயக்கொடி கூறினார்.



“குற்றச் செயலற்ற பகுதியாக ஒவ்வொரு பிரதேசமும் அமைய வேண்டும் என்பதே எனது விருப்பம்.

நாயன்மார்கட்டு பாரதி சனசமூக நிலையத்தின் நூலகவார கட்டட விஸ்தரிப்புக்கான அடிக்கல் நடும் விழாவைத் தொடக்கி வைத்து உரையாற்றிய போதே பொலிஸ் பொறுப்பதிகாரி ஜெயக்கொடி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பகுதி மக்கள் தமக்குத் தேவையான ஒரு முக்கிய நிகழ்வை இன்று நடத்தியுள்ளனர். நான் விடிந்ததும் முதலில் பத்திரிகைகளைப் பார்ப்பது வழமை. அதன் மூலம் குற்றச் செயல்கள் நிகழும் தகவல்களைத் தெரிந்து கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க என்னால் முடிகின்றது. குற்றச் செயலற்ற பகுதியாக ஒவ்வொரு பிரதேசமும் அமைய வேண்டும் என்பதே எனது விருப்பம். அதற்காக நல்ல அதிகாரிகளின் வழிமுறைகளைப் பின்பற்றி ஒரு நல்ல சமுதாயத்தை உருவாக்க வேண்டும் என்பதில் நான் உறுதியாக இருக்கின்றேன்.

மக்கள் பத்திரிகைகளைப் படிப்பதன் ஊடாகவும், புத்தகங்களை வாசிப்பதன் மூலமும் நல்லொழுக்கமும் அறிவும் சார்ந்த பிரஜைகளாகத் தம்மை உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இந்த நிலையம் அதற்காகச் செய்து வரும் சேவையை நான் பாராட்டுகிறேன்.- என்றார். (த-7)

## பிரதேச சபையின் காணியை எல்லைப்படுத்தக் கோரிக்கை

வலி.தென்மேற்கு, மே 31



கல்லுண்டாய்ப் பகுதியில் அடையாளம் காணப்படாமலிருக் கும் வலி. தென்மேற்குப் பிரதேச சபைக்குச் சொந்தமான 5 பரப்புக் காணியைப் பாதுகாப்புப் படையினர் சுவீகரிக்க முன்பு அந்தக் காணியில் மக் களைக் குடியமர்த்துவதற்கு வசதியாகக் காணியை அளந்து விரைவாக எல்லை போட்டு அடையாளப்படுத்துமாறு பிர தேச சபை உறுப்பினர் கே.நடராசா தவிசாளரைக் கோரியுள்ளார்.

கல்லுண்டாய் வைரவர் ஆல யத்துக்கு வடக்குப் பக்கமாக நவாலி தெற்கு ஜே/136 கிராம உத்தியோகத்தர் பிரிவில் பல வருடங்களுக்கு முன் கிராம சபையால் கட்டிக் கொடுக்கப்பட்ட 16 வீட்டுத் திட்டம் போர்காலச் சூழ்நிலையாலும் இடர்களாலும் சேதத்துக்குள்ளானது.

16 குடும்பங்கள் வாழ்ந்து வந்த இந்த வீட்டுத்திட்டத்தில் தற்பொழுது 8 குடும்பங்கள் மட்டும் வசதியீனங்கள் மத்தியில் வாழ்ந்து வருகின்றன. ஏனைய குடும்பங்கள் வீடுகள் பலத்த சேதமானதால் வேறு இடங்களில் வாழ்ந்து வருகின்றன.

இந்த நிலையில் மேற்படி வீட்டுத் திட்டத்துக்கு அருகில் கிராம சபைக்குச் சொந்தமான 5 பரப்புக் காணி அடையாளம் காணப்படாமல் இருப்பதாக அங்குள்ள மக்கள் தெரிவித்த தகவலையடுத்து பிரதேச சபை உறுப்பினர் கே.நடராசா எடுத்துக் கொண்ட நடவடிக்கையினால் காணி இருப்பது குறித்து பிரதேச செயலகத்தினால் உறுதிப்படுத் தப்பட்டுள்ளது.

இதையடுத்து மேற்படி காணியில் குடும்பங்களைக் குடியமர்த்த நடவடிக்கை மேற் கொண்டுள்ள உறுப்பினர், இது சம்பந்தமான சகல விவரங்களையும் பிரதேச சபைக்கு எழுத்து மூலம் தெரிவித்துள்ளதுடன் இந்தக் காணியைப் பாதுகாப்புப் படையினர் சுவீகரிக்க முன்பு காணியை அளந்து அடையாளப்படுத்துமாறும் கோரியுள்ளார். (த-115)

முறைப்பாடுகளை அடுத்து அதிரடிச் சோதனை:

## சாவகச்சேரியில் விடுதியை உடன் மூடுமாறு உத்தரவு

தென்மராட்சி, மே 31

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் அனுமதிப் பத்திரமின்றி இயங்கிய விடுதியை மூடுமாறு நகரசபைத் தலைவர் உத்தரவிட்டுள்ளார்.

இந்த விடுதியில் கலாசார சீரழிவுகள் இடம்பெறுவதாக பொதுமக்கள் நகர சபையினருக்கு அறிவித்ததையடுத்து நகர சபையினரும் பொலிஸாரும் இணைந்து விடுதியை முற்றுகையிட்டு சோதனையிட்டனர்.

இந்தவேளையில் அங்கு இரண்டு 'ஜோடி'கள் தங்கியிருந்தமை கண்டு பிடிக்கப்பட்ட்து. நகரசபைத் தலைவர் மற்றும் பொது சுகாதார பரிசோதகர் ஆகியோரை விடுதி நடத்துபவர் தாக்க முற்பட்டுள்ளார்.

விடுதியை நடத்துபவரையும் உதவியாளரையும் பொலிஸார் அழைத்துச் சென்றனர். அதையடுத்து விடுதியை நடத்துவதற்குரிய அனுமதி பெறும் வரை அதனை மூடுமாறு நகரசபைத் தலைவர் உத்தரவிட்டார்.

இந்த விடுதி தொடர்பாக பல முறைப்பாடுகள் நகரசபைக்கு கிடைத்த போதிலும் விடுதி நடத்துபவருக்கு பல தடவை கள் நகர சபையால் எச்சரிக்கை செய்யப்பட்டு ஆறு மாதங்களுக்கு விடுதி நடத்துவதற்கான உரிமம் வழங்குவது நிறுத்தப்பட்டிருந்தது.தலைவர் நேற்று நேரடியாகச் சென்று கலாசார சீரழிவு தொடர்பாக கண்டு பிடித்ததையடுத்து உரிமம் வழங்கும் வரை விடுதியை மூடுமாறு உத்தர விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### அமெ. தாக்குதல்

## தலிபான்களின் முக்கிய தலைவர் உயிரிழப்பு



இஸ்லாமாபாத், மே 31

பாகிஸ்தானின் வட பகுதியில் உள்ள மிரான்ஷா பகுதியில் அமெரிக்க ஆளில்லா விமானங்கள் நடத்திய ஏவுகணைத் தாக்குதலில் பாகிஸ்தானின் முக்கிய தலி பான் தலைவரான வலி- யுர்-ரஹ்மான் உயிரிழந்துள்ளார் என்று பாகிஸ்தான் உளவுத் துறைத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலை அடுத்து இந்தத் தாக்குதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தாக்குதல் நடைபெற்ற வீடு முற்றாக இடிந்து சேதமடைந்துள்ளது என்றும் அந்த வீட்டில் தங்கியிருந்த 6 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் தகவல்கள் கூறுகின்றன.

தெஹ்ரிக் - இ - தலிபான் அமைப்பின் தலைவரான ஹக்கீமுல்லா மெஹ்பூத்துக்கு அடுத்த பதவி நிலையில் வலி- யுர்-ரஹ்மான் இருந் தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற)

**எல்லை தாண்டிய ஆளில்லா விமானத் தாக்குதல்களுக்கு பாகிஸ்தான் தொடர்ச்சியாகக் கண்டனம் தெரிவித்து வருகின்றது. பாகிஸ்தான் பொதுத் தேர்தல் நடைபெற்ற பின்னர் இதுவே அமெரிக்கா நடத்திய முதலாவது தாக்குதலாகும்.**

# ஐ.நா. சபையில் மாற்றம் தேவை

## இணைந்து வலியுறுத்துகின்றன இந்தியாவும் ஜப்பானும்

டோக்கியோ, மே 31

சமகால யாதார்த்தங்களுக்கு ஏற்ப ஐ.நா.சபையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்று இந்தியாவும் ஜப்பானும் கூட்டாக வலியுறுத்தியுள்ளன.

ஜப்பானுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்குக்கும், ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபேக்கும் இடையே இடம்பெற்ற கலந்துரையாடலை அடுத்தே இவ்வாறு கூட்டாகக் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் விடுத்துள்ள கூட்டறிக்கையில்,

''ஐ.நா. பாதுகாப்புச் சபையில்மாற்றங்கள் ஏற்படுத்துவது அவசியமாகின்றது. அந்த மாற்றங்கள் சமகால யாதார்த்தங்களுக்கு ஏற்புடையவையாக இருக்க வேண்டும். அவ்வாறான மாற்றங்கள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று இந்தியா, ஜப்பான் ஆகிய இருநாடுகளும் வலியுறுத்துகின்றன.



பாதுகாப்புச் சபையில் முக்கியமான நாடுகளுக்கு மேலும் பிரதிநிதித்துவம் அளிக்கவும், அந்த அமைப்பை மேலும் நம்பகத்தன்மை வாய்ந்ததாக மாற்றவும் அவ்வாறான சீர்திருத்தங்கள் அவசியம்.


ஐ.நா. சபையில் மேற்கொள்ள வேண்டிய சீர்திருத்தங்கள் தொடர்பாக இரு நாடுகளுக்கும் இடையேயான ஒத்துழைப்பு அதிகரிக்கப்படும். அதற்காக இரு தரப்பும் ஆண்டுக்கு இரு முறை கலந்தாலோசனை செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

'ஜி-4' நாடுகள் அமைப்பு ஊடாக இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள இருநாடுகளும் தீர்மானித்துள்ளன'' என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

### பாதுகாப்பு ஒப்பந்தங்கள்


**இந்தியப் பிரதமரின் ஜப்பான் பயணத்தின்போது இருதரப்புக்கும் இடையே பாதுகாப்புத் தொடர்பான ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.**

**பிராந்தியப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு இருநாடுகளும் இணைந்து பணியாற்ற சம்மதம் தெரிவித்துள்ளதுடன், அணு சக்தி தொடர்பான கூட்டு ஒப்பந்தத்திலும் கைச்சாத்திட்டுள்ளமை குறிப்பிடத்தது. இந்தச் செயற்பாடுகள் சீனாவுக்கு அதிருப்தியை ஏற்படுத்தக் கூடும் என்று கூறப்படுகிறது.**



மியன்மாரின் பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கு இடையே பெரும் மதக் கலவரம் மூண்டுள்ளது. முஸ்லிம் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் மீது பௌத்தர்கள் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். மியன்மாரின் வடக்கு மாகாணத்தில் உள்ள லாசியோ நகரில் நூற்றுக்கும் மேற்பட்ட பௌத்த மதத்தவர்கள் நேற்றுமுன்தினம் வன்முறைகளில் ஈடுபட்டனர். (ற)

## செவ்வாயில் எ[illegible]



நியூயோர்க், மே 31

செவ்வாய்க் கிரகத்தை ஆராய்வதற்காக அனுப்பப்பட்டுள்ள 'கியூரியோசிட்டி' ரோவர் கலம் அனுப்பியிருந்த படங்களை ஆராய்ந்து கொண்டிருந்த விஞ்ஞானிகளுக்கு ஆனந்த அதிர்ச்சி. செவ்வாயில் எலிகளைப் போன்ற உயிரினங்கள் படங்களில் தென்பட்டன.

ஆனந்தத்தில் துள்ளிக் குதித்த அவர்கள் அவற்றை நுணுக்கமாக ஆராய்ந்தனர். ஆராய்[illegible]யின் முடிவில் அவர்களு[illegible] ஏமாற்றமே எஞ்சியது. ஏனெனில் எலிகள் போன்று தோற்றமளித்தவை அங்கிருந்த சிறு பாறைத் துண்டுகளே.(ற)

# தவறுதலாக நடந்த விபத்தாம்

## கழிப்பறைக் குழாயில் இருந்து மீட்கப்பட்ட குழந்தையின் தாய் கூறுகிறார்

பீஜிங், மே 31

கடந்த சனிக்கிழமை சீனாவின் ஜோஜியாங் பகுதியில் கழிப்பறைக் குழாயில் இருந்து மீட்கப்பட்ட குழந்தைக்கு யாரும் உரிமைகோராத நிலையில், குழந்தையின் தாய் என்று கருதப்படும் யுவதி ஒருவரை இனங்கண்டுள்ளதாகப் பொலிஸார் கூறுகின்றனர்.

''குழந்தை மீட்கப்பட்டு இரண்டு நாள்கள் ஆன பின்னரும் யாரும் உரிமைகோராத நிலையில் நாங்கள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டோம். தீவிர விசாரணைகளின் அடிப்படையில் திருமணமாகாத 22 வயதுடைய யுவதி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் கொடுத்த



தகவலின்படி குழந்தையின் தந்தை என்று கருதப்படும் ஒருவரும் விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.'' என்று கூறுகின்றார் ஜோஜியாங் மாகாண தலைமைப் பொலிஸ் அதிகாரி.

''விசாரணைகளின் போது முதலில் குழந்தை தன்னுடையது அல்ல என்று மறுத்து வந்த அந்தப் பெண்ணில் கொஞ்ச நேரத்தில் மாற்றம் தெரிந்தது. மெதுவாக உண்மையைச் சொல்லத் தொடங்கினார்.

22 வயதுடைய அந்தப் பெண் கர்ப்பமானவுடன் அச்சம் காரணமாக அதை மறைத்து விட்டார். அயலவர்களுக்குத் தெரியாமல் இருப்பதற்காக வேறொரு இடத்தில் வாடகை வீட்டில் வசித்து வந்தார். கடந்த சனிக்கிழமை அங்குள்ள ஓய்வறையில் குழந்தை பிறந்தது. குழந்தை தவறுதலாக நழுவி கழிப்பறைக் குழாய்க்குள் விழுந்துள்ளது. அச்சம் காரணமாக அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் அந்தப் பெண்'' என்று மேலும் விவரித்தார் அந்த அதிகாரி.

''இந்தச் சம்பவம் தற்செயலாக நடந்து ஒரு விபத்து என்ற கோணத்தில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதுடன், குறித்த பெண்ணின் மீது இதுவரை எந்த குற்றச்சாட்டும் பதிவுசெய்யாது அவருடன் பேசி வருகின்றோம்'' என்று குறிப்பிட்ட அந்த அதிகாரியிடம்,

குறித்த பெண்ணால் இனங்காட்டப்பட்ட குழந்தையின் தந்தை என்று கூறப்படும் நபர் குறித்துக் கேட்டபோது,





''மரபணுச் சோதனை ஒன்றுக்கு கோரிக்கை விடுத்துள்ள அந்த நபர், அந்தக் குழந்தை தன்னுடையது என்பது சோதனைகள் மூலம் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில், குழந்தைக்கு ஆதரவு வழங்குவது குறித்து தான் அந்தப் பெண்ணுடன் கலந்தாலோசிக்கத் தயராக உள்ளார் என்று கூறியுள்ளார்,'' என்று தெரிவித்தார் அவர்.

இந்தச் சம்பவம் குறித்துக் கடும் கண்டனத்தை வெளியிட்டுள்ள சீன ஊடகங்கள், இவ்வாறான திருமணத்துக்கு முன்னர் கர்ப்பமாகும் சம்பவங்கள், சீனாவில் பாலியல் கல்வி தொடர்பான விழிப்புணர்வு மட்டம் குறித்த கேள்வியை எழுப்புகின்றன என்றும் குற்றஞ் சுமத்தியுள்ளன. (ற)



**குழந்தை மீட்கப்பட்ட குழாய் 10 சென்றிமீற்றர் விட்டம் மட்டுமே கொண்ட 'எல்' வடிவக் குழாயாகும். இரண்டரை மணி நேரப் போராட்டத்தின் பின்னர் காப்பற்றப்பட்ட குழந்தையின் கால் மற்றும் கைகளில் சிராய்ப்புக் காயங்கள் காணப்படுகின்றன. 2.8 கி.கி. எடையுடைய குழந்தை தற்போது நலமாக உள்ளது.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொத்தடிமைகள் 40 பேர் 10 வருடங்களின் பின் மீட்பு



புதுக்கோட்டை மாவட்டத்தில் 10 ஆண்டு களுக்கு மேலாக கொத்தடி மைகளாக வேலை செய்து வந்த 40 இற்கும் மேற்பட்டோர் மீட்கப்பட்டு அவர்களது சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

சிறையில் இருந்து மீண்டு வந்தது போன்ற உணர்வு ஏற்பட்டுள்ளதாக, மீட்கப்பட்டவர்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

விழுப்புரம் மாவட் டத்தைச் சேர்ந்த பழங்குடியினர் பலர், கடந்த சில ஆண்டுகளுக்கு முன் தோட்ட வேலைக்காக புதுக் கோட்டைக்குச் சென்றுள்ளனர். ஆலங்குடி அருகே பணியாற்றிய அவர்கள், கொத்தடிமைகளாக நடத்தப்பட் டதாக வருவாய் துறை ஆட்சியாளருக்கு தகவல் கிடைத்தது.

அதன் பேரில் சம்பவ இடத்துக்குச் சென்ற அதி காரிகள், 43 பழங்குடியின மக்களை மீட்டனர். அவர்களுக்கு தலா ஆயிரம் ரூபா நிவாரணத் தொகையும் வழங்கப்பட்டது.

மீட்கப்பட்ட 43 பேரும், புதுக் கோட்டையில் இருந்து தனி பஸ் மூலம் சொந்த இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கஷ்டப்பட்டு செய்த வேலைக்கு உரிய சம்பளத்தை வழங்கவில்லை என விடுவிக்கப் பட்டவர்கள் குற்றம் சாட்டினார். உடல் நலம் பாதிக்கப் பட்ட போது, மருத்துவச் செலவுக்குக்கூடப் பணம் கொடுக்கவில்லை என்றும், கர்ப்பிணி என்று கூட பார்க் காமல் வேலை செய்ய துன்பு றுத்தியதாகவும் வேதனை தெரிவித்தனர் பாதிக் கப்பட்ட பழங்குடியின மக்கள்.

பாதிக்கப்பட்டவர்களின் முறைப்பாட்டின் பேரில், கொத்தடி மைகளாக நடத்தி யவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாக புதுக் கோட்டை மாவட்ட ஆட்சியாளர் தெரிவித்தார். (வ)

## அணு உலை போராட்டக்காரர் இடையே கைகலப்பு

இடிந்தகரை, மே.31

கூடங்குளத்தை சுற்றியுள்ள மீனவ கிராமங்களில் இடிந்த கரை மீனவர்களுக்கும், கூடங்குளம் அணு மின் நிலையத்துக்கு எதிரான போராட்டக் குழுவினருக்கும் இடையில் கலவரம், கைகலப்பு மூண்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடிந்தகரை வடக்குத் தெருவைச் சேர்ந்த மீனவரான பிரதாப் என்பவருக்கும், அதே பகுதியைச் சேர்ந்த வின்செண்ட் என்கிற மீனவருக்கும் முதலில் கடற்கரையில் படுத்துத் தூங்கு வதில் ஏற்பட்ட தகராறு முற்றி, கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டத்தில் பிரதாப் பங்கேற்கவில்லை என்பதுவரை முடிந்து, இரு தரப்பினருக்கும் இடையே பெரும் கலவரம் மூண்டுள்ளதாகவும் தெரிய வருகிறது.

கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்டத்தில் பங்கேற்கவில்லை என்று பிரதாப்பை ஒரு கும்பல் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாகவும், கூடங்குளம் அணு உலைக்கு எதிரான போராட்ட குழுவில் உள்ள உதயகுமார், புஷ்பராயன் உள்ளிட்டவர்களின் தூண்டுதல் பேரிலேயே தன் மீது இந்த தாக்குதல் நடைபெற்றுள்ளது என்றும், பிரதாப், பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு அளித்துள்ளார். வழக்கைப் பதிவு செய்து கொண்ட பொலிஸார் உதய குமார், புஷ்பராயன் உள்ளிட்ட 42 பேர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர் என்றும் தெரிய வருகிறது. (வ)



# ‘செய் அல்லது செத்து மடி’

## விஞ்ஞானிகளைக் கடிந்த அந்தோனி

டில்லி, மே.31

‘செய் அல்லது செத்துமடி’ என்று பாதுகாப்பு ஆராய்ச்சி விஞ்ஞானிகளை பாதுகாப்புத்துறை அமைச்சர் ஏ.கே.அந்தோனி கடிந்து கொண்டார் .

இராணுவத் திட்டங்கள் பலவற்றை நிறைவேற்றுவதில் ஏற்படும் காலவிரயம் தொடர்பாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துக்கு (டி.ஆர்.டி.ஓ.) அவர் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் புது டில்லியில் நேற்று முன்தினம் நடைபெற்ற பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்தின் விருது வழங்கும் விழாவில் தெரிவித்ததாவது:-

> இலகு ரக தேஜஸ் போர் விமானத்தை பொறுத்த வரையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு நிறுவனம் ஒரு திகதியை நிர்ணயித்துள்ளது. அது இறுதித் திகதியாக இருக்க வேண்டும்.

இலகு ரக தேஜஸ் விமானத் தயாரிப்பு உட்பட பல்வேறு முக்கியத்துவம் வாய்ந்த இராணுவத் திட்டங்களில் ஏற்பட்டு வரும் கால விரயம் குறித்து அதி ருப்தி ஏற்படுகிறது. கால விரயம் ஏற்படுவதற்கும் ஒரு அளவு உண்டு. மத்திய இராணுவ ஆராய்ச்சி மையத்தினர் உடனே செயற்பட வேண்டும் அல்லது விலகி விட வேண்டும்.

முப்பது ஆண்டு களானாலும் தேஜஸ் போர் விமானத் தயாரிப்பு பணி முடிவடையவில்லை. அந்தப்போர் விமானம் செயற்படுவதை நேரில் பார்க்க நான் காத்திருக்கிறேன். உலகம் முழுவதும் இராணுவ ஆயுத உற்பத்தியில் ஈடுபடுவடு மிகவும் சிரமமான பணியாகும். இலகு ரக விமான தயாரிப்பு எளிதான காரியம் இல்லைத் தான். இலக்கை அடைய நிர்ணயிக்கப்பட்ட காலக்கெடுவை எத்தனை முறை நீட்டிப்பது? இனி மேலும் பொறுப்பதற்கில்லை. செய் அல்லது செத்து மடி என்று தான் கூற வேண்டியுள்ளது என, கோபமாகத் தெரிவித்தார்.

இலகு ரக தேஜஸ் போர் விமானத்தை பொறுத்த வரையில் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு நிறுவனம் ஒரு திகதியை நிர்ணயித்துள்ளது. அது இறுதித் திகதியாக இருக்க வேண்டும். தேஜஸ் விமானம் பறப்பதற்கான இரண்டாம் கட்ட அங்கீகாரத்தைப் பெற வேண்டும். எச்.ஏ.எல், பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு நிறுவனம், இந்திய விமானப்படை உள்ளிட் டவை இணைந்து செயற்பட வேண்டும். தேஜஸ் விமா னத்துக்கான இறுதிக் கட்ட அங்கீகாரத்தை அடுத்த ஆண்டு இறுதியில் பெற வேண்டும் - என்றார்.(வ)



டில்லியில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ராணுவ ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு கழக. விருதுகள் வழங்கும் விழாவில் விஞ்ஞானியான ஈஸ்வர பகீரத ராவுக்கு . இராணுவ ஆராய்ச்சி சாதனையாளர் விருதை பாதுகாப்பு அமைச்சர் அந்தோனி வழங்கினார்.

## ஆளில்லா விமானங்கள் மூலம் நக்சல்களை கண்காணிக்க முடிவு

ஆளில்லா உளவு விமா னங்கள் மூலம் நக்ச லைட்டுகளின் நடமாட் டத்தை கண்காணிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த வாரம் சதீஸ்கர் மாநிலத்தில் காங்கிரஸார் மீது நக்சல்கள் நடத்திய பயங்கர தாக்குதலில் 30 பேர் உயிரிழந்தனர். இதையடுத்து நக்சல் களை ஒடுக்குவதில் மத்திய அரசு தீவிரம் காட்டி வரு கிறது.

நக்சல் பாதிப்பு அதிகம் உள்ள அந்த மாநிலத்திற்கு, கூடுதலாக 2,000 துணை இராணுவப் படையினர் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து மத்திய அரச வட்டாரங்கள் கூறுகையில், ஆந்திராவிலிருந்து, சதீஸ்கர் வரையிலான அடர்ந்த வனப் பகுதி தான் நக்சலைட்டுகளின் கோட் டையாக விளங்குகிறது. இந்தப் பகுதிக்குள் பாது காப்புப் படையினரின் தேடுதல் வேட்டை சவா லான விடயமாக உள்ளது.

> ஆந்திராவின் பெர்காம் பூர் விமான நிலையத்திலிருந்து புறப்படும், இந்த விமானங்கள் அடர்ந்த வனப் பகுதிக்குள் 500 கி.மீ. வரை பறந்து சென்று கண்காணிக்கும்.

எனவே வனப்பகுதிக்குள் நக்சலைட்டுகள் நடமாட்டத்தைக் கண்காணிக்க, ஆளில்லா உளவு விமானங்களைப் பயன்படுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆந்திராவின் பெர்காம் பூர் விமான நிலையத்திலிருந்து புறப்படும், இந்த விமானங்கள் அடர்ந்த வனப் பகுதிக்குள் 500 கி.மீ. வரை பறந்து சென்று கண்காணிக்கும்.

தொடர்ச்சியாக மூன்று மணி நேரம் பறந்து நக்சல்கள் நடமாட்டம் பற்றிய தகவல்களைக் கட்டுப்பாட்டு அறைக்கு அனுப்பும் வகையிலான வசதிகள் அந்த விமானங்களில் ஏற்படுத்தப்படும். இதுகுறித்த பயிற்சி பாதுகாப்புப் படையினருக்கு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## சதீஸ்கரில் நக்சலைட்டுகள் மூவர் கைது

ராய்ப்பூர், மே 31

மாவோயிஸ்டுகள் அதிகம் நடமாட்டம் உள்ள பிஜப்பூர் மாவட்ட கனோரா பகுதியில் மாவட்ட பொலிஸார் நேற்று முன்தினம் ரோந்து பணி மேற்கொண் டனர். அப்போது சந்தேகத்துக்கு இடமான வகையில் தென்பட்ட ஒரு பெண் உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் நடத்திய விசாரணையில் இருவர் மாவோயிஸ்ட் இயக்கத் துடன் சேர்ந்து செயற்பட்டது உறுதி செய்யப்பட்டது. மேலும் ஒருவர் கொலை, கொள்ளை, கலகம் போன்ற செயல்களில் ஈடுபட்டவராக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதுகுறித்து மேலும் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (வ)

## இந்திய அமைதிப் படையினருக்கு உணவு விநியோகத்தில் முறைகேடு

### அதிகாரிகள் இருவருக்குச் சிறை

டில்லி, மே.31

இலங்கையில் இந்திய அமைதி காக்கும் படையினர் தங்கி இருந்த போது, அவர்களுக்கு தரம் குறைந்த மற்றும் அனுமதி அற்ற உணவுகளை விநியோகித்த முன்னாள் இந்திய இராணுவ அதிகாரிகள் இருவருக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இராணுவ ஓய்வு பெற்ற அதிகாரி ஜெனரல் குப்தா மற்றும் ஓய்வு பெற்ற அதிகாரி கடியான் ஆகிய இருவருக் குமே இந்தத் தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

1987-88களில், இலங் கையில் நிலைகொண்டி ருந்த இந்திய அமைதி காக்கும் படையினருக்கான உணவு இருப்பு இருந்த போதும், எம்.எஸ். கொஸ்டா எண்ட் கம்பனி என்ற நிறுவ னத்திடம் இருந்து பொதி செய்யப்பட்ட உணவுகளை அவர்கள் இருவரும் விநியோகித்துள்ளனர்.

இதுதொடர்பில் அரசிடம் உரிய அனுமதி பெற்றிருக் கவில்லை. இது இராணுவ சட்டத்தின் படி குற்றமாகும்.

இந்திய மத்திய புலனாய்வுத் துறை நீதிமன்றத்தில் கடந்த 25 ஆண்டுகளாக இந்த வழக்கு விசாரணையில் இருந்த நிலையில், நேற்று முன்தினம் இதற்கான தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி குறித்த இரண்டு அதிகாரிகளுக்கும் இரண்டரை ஆண்டுகள் சிறைத் தண்டனையும், ஆயிரம் ரூபா நட்ட ஈடும் அறவிட்டு உத்தரவிப்பட்டது.

குறித்த உணவுகளை விநியோகித்திருந்த நிறுவனத்திடம் 30 ஆயிரம் ரூபா தண்டபணம் அறவிட உத்தரவிடப்பட்டது. (வ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொடிகாமம் வைத்தியசாலைக்கு அம்புலன்ஸ் வழங்கக் கோரிக்கை

தென்மராட்சி, மே 31

தென்மராட்சி கிழக்குப் பிரதேச மக்களுக்கான கொடிகாமம் பிரதேச வைத்தியசாலைக்கு புதிய அம்புலன்ஸ் வழங்குமாறு பிரதேச பொது அமைப்புக்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கோரியுள்ளன.

பிரதேச வைத்தியசாலையின் அம்புலன்ஸ் வாகனம் கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் பழுதடைந்த நிலையில் யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்டு இன்னமும் திருத்தப்படாத நிலையில் உள்ளதால் புதிய அம்புலன்ஸ் வழங்குமாறு கோரியுள்ளனர்.

தென்மராட்சி கிழக்குப் பிரதேசத்தில் அல்லாரை, வெள்ளாம்போக்கட்டி, கச்சாய், பாலாவி, கொடிகாமம் வடக்கு, மத்தி, தெற்கு, உசன், கரம்பகம், விடத்தற்பளை, கெற்பேலி, எழுதுமட்டுவாழ் தெற்கு, வடக்கு, மிருசுவில் வடக்கு, தெற்கு, குடமியன், நாவற்காடு ஆகிய 18 கிராம அலுவலர் பிரிவுகளில் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர்.

இதனைவிட கொடிகாமம் தொடங்கி எழுதுமட்டுவாழ், கிளாலி வரையான ஏ-9 வீதியில் வருவோரும் இந்த வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளர்கள் அம்புலன்ஸ் மூலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

கடந்த ஆறு மாதங்களுக்கு முன்னர் பழுது எனக் கூறி யாழ்ப்பாணம் கொண்டு செல்லப்பட்ட அம்புலன்ஸ் இதுவரை திருத்தப்பட்டு மீண்டும் வைத்தியசாலைக்கு வழங்கப்படவில்லை. இதனால் இந்த வைத்தியசாலைக்கு வரும் அவசர நோயாளர்களை தனியார் வாகனங்களில் அனுப்ப வேண்டிய நிலை ஏற்படுகிறது. இவற்றினைக் கருத்தில் கொண்டு பிரதேச வைத்தியசாலைக்குப் புதிய அம்புலன்ஸ் வழங்குமாறு பொது அமைப்புக்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைக் கோரியுள்ளன. (த-9-8)

## மாணவருக்கான கருத்தரங்கு

வலி.வடக்கு,மே 31

வலிகாமம் கல்வி வலயத்தின் ஏற்பாட்டில் 2013 ஆம் ஆண்டு ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் அளவையியல் பாட மாணவர்களுக்கான முன்னோடிக் கருத்தரங்கு நாளை சனிக்கிழமை மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் வளவாளர்களாக பேராதனைப் பல்கலைக்கழக அளவையியல் விரிவுரையாளர் கலாநிதி ஜமால்தீன், வலிகாமம் கல்வி வலய அளவையியல் பாட வளவாளர் எஸ்.சயந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்தக் கருத்தரங்கு சம்பந்தமான அறிவித்தல்கள் வலிகாமம் கல்வி வலய பாடசாலைகளுக்கு வலிகாமம் கல்வி வலயத்தினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (த-86)

## மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்

நல்வாழ்வுக்கு மனம் பிரதானமானது. ''போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'' எதிலும் ஓர் அளவு வேண்டும். அளவுக்கு மிஞ்சிய நினைப்பே பேராசையாகும். வாழ்வு என்பதனையும் இங்கு நினைவுகூரவேண்டும்.

வாழ்வும், தாழ்வும் எங்களில்தான் இருக் கிறது. எங்கள் செயற்பாட்டின் பிழையே தாழ்வு. இது தீராத துன்பத்தைத் தரும். எங்கள் செயற்பாட்டுத் திறனே எங் களுக்கு நல்ல வாழ்க்கையை அமைத்துத் தருகின்றது. நாம் வாழ்ந்தால் போதும் என்று நினைப்பது தவறு. பிறரும் வாழ்வதோடு நாடும் நலம் பெற்றுச் சிறக்க வேண்டும்.

ஏழுநிலை மாடியில் மனைவி மக்களுடன் கூடிச் செல்வந்தராய் வாழ்தல் நல்ல வண்ணம் வாழ்தல் எனக் கருதக்கூடாது. சிறு குடிசையாயினும் மாண்புடைய மனைவியுடன், பண்பான மக்களும் பெற்று அன்புடன் வாழ்வதே சிறந்த வாழ்க்கை.

ஞானக்கதிர்

இதில் அன்பு, பண்பு ஆதரவு பொலிகிறது. ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி உப்பிலாக் கூழ் இட்டாலும் உண்பது அமிர்தமாகும். இது உள்ளத்தில் கள்ளமில்லா வாழ்க்கை. பண்பான வாழ்க்கையே சிறந்தது.




### சிவஸ்ரீ பொன்.விநாயகமூர்த்திக் குருக்கள்
(முன்னாள் C.T.B ஊழியர்)
27 ஆம் நாள் புனர்தின குருபூசை அழைப்பும்
உளமார்ந்த நன்றி நவிலலும்

05.05.2013 அன்று எங்கள் குடும்பத் தலைவர்
**சிவஸ்ரீ பொன்.விநாயகமூர்த்திக் குருக்கள்**
சிவபதம் எய்தியமையினைஅறிந்ததும் ஓடோடி வந்து உதவிகள் பல புரிந்தும் அனுதாபம் தெரிவித்தும் துணைநின்ற உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், ஆலயபரிபாலகர்கள், கலவியியற்கல்லூரிச் சமூகத்தினர், இந்துமன்றத்தினர் ஆகியோருக்கும் தொலைபேசி, துண்டுப் பிரசுரம், பத்திரிகை என்பன மூலம் அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் வவுனியா வைத்தியசாலை ஊழியர்களுக்கும் வவுனியா வாழ் நண்பர்களுக்கும் குருக்களின் இறுதிக் கிரியைகளிலும் ஊர்வலத்திலும் பங்குகொண்டவர்களுக்கும் எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம். 02.06.2013 ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு எமது ''அன்னை'' இல்லத்தில் நடைபெறும் புனர்தின குருபூசையிலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்பாகக் கேட்டுக்கொள்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.**

அன்னை இல்லம், கண்ணகை அம்மன் கோயிலடி, இராமநாதன் ஒழுங்கை, கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

சிவஸ்ரீ பொன்.விநாயகமூர்த்திக்குருக்கள் குடும்பத்தினர். T.P.0776848645

(37759)(2.6)


## மோட்டார் சைக்கிள் மோதியது இளைஞர், யுவதி காயம்

தென்மராட்சி,மே 31

சாவகச்சேரி நீதிமன்றுக்கு வெளியே வீதியோரத்தில் நின்ற யுவதியை வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் மோதியது. சம்பவத்தில் யுவதி காயமடைந்ததுடன் மோட்டார் சைக்கிளை செலுத்தியவருக்குக் கை முறிந்தது.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம்பெற்றது. குறித்த யுவதி உறவினரின் வழக்கைப் பார்வையிட நீதிமன்றுக்கு வருகை தந்த பின்னர் உறவினர்களுடன் வீதியோரத்தில் நின்றிருந்தார். அந்தவேளையில் வேகமாக வந்த மோட்டார் சைக்கிள் வீதியோரத்தில் நின்ற யுவதியை மோதியதாகத் தெரிவிக்கப்பட்டது. காயமடைந்த கச்சாய் வடக்கைச் சேர்ந்த செல்லத்துரை டிலானி (வயது-23) என்பவரும் மோட்டார் சைக்கிளோட்டியான மீசாலை வடக்கைச் சேர்ந்த யோகேஸ்வரன் சஞ்சீவன் (வயது-22) என்பவரும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். சஞ்ஜீவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.(ந-9)

## சமய சந்நிதிகளில்

வடமராட்சி, மே 31

பொலிகண்டி, மருதாம்புலம் ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய வருடாந்த கும்பாபிஷேக தின விழாவும், மணவாளக் கோலத் திருவிழாவும் இன்று வெள்ளிக்கிழமை நடைபெறும். காலை 7 மணிக்கு காவடி, கரகம், பாற்செம்பு எடுக்கும் நிகழ்வுகளுடன் காலை 9 மணிக்கு சங்காபிஷேகக் கிரியைகள் ஆரம்பமாகி முற்பகல் 11 மணிக்கு சங்காபிஷேகம் இடம்பெறும். ''அற்புதங்கள்புரிவாள்அம்பிகை'' என்னும் தலைப்பில் சைவப் புலவர் பொன்.சுகந்தனின் சிறப்புச் சொற் பொழிவும் நடைபெறும். (வ-8)

★ ★ ★

நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் புதிதாக வடக்கு வாசலில் அமைக்கப்பட்ட இராஜ கோபுரத்துக்கான கும்பாபிஷேகம் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது. நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை விசேட பூசைகள் ஆரம்பமாகும் எனவும் அறங்காவல் சபைத் தலைவர் க.பரமலிங்கம் தெரிவித்தார். (வ-7)


### TVகள் மலிவு விற்பனை

மலிவு விலையில் Sony Wega Flat TV கள் 21" - 12,000/= முதல், 25" 13,000/=, 29" - 16,000/=, பனசோனிக் (Panasonic) 29" 15,000/=, DTS அம்பளிபயர், Box வகைகள்,DVD - 3,000/=,

**தொடர்பு: 077 044 0570**

சோனி ரேடீயோ சென்றர் (கொமர்சல் வங்கிக்கு முன்பாக) 56, K.K.S. றோட், சுன்னாகம்.

(37790)(45.6)



### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த கனடாவில் நிரந்தர வசிப்பிடம் உள்ள பரணி நட்சத்திரம், வயது 24 உடைய (கிரகபாவம் 3½) மணமகனுக்கு பொருத்தமான அழகிய படித்த மணமகள் தேவை.

தொடர்பு: 077 766 9306 (37790)(45.6)


# மரண அறிவித்தல்

## திருமதி மீனாட்சிப்பிள்ளை ஆழ்வாப்பிள்ளை
### (மனோன்மணி)



புலோலி மேற்கு, பருத்தித்துறையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி மீனாட்சிப்பிள்ளை (மனோன்மணி) ஆழ்வாப்பிள்ளை (26.05.2013) ஞாயிற்றுக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் ஆழ்வாப்பிள்ளை (ஓய்வுபெற்ற தபால் அதிபர்) அவர்களின் அன்புத் துணைவியும், காலஞ்சென்றவர்களான வேலர் - காந்தி தம்பதியரின் அருந்தவப் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தையர் - தங்கம்மா தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்றவர்களான கணேஸ், செல்வராசா, ஐயாத்துரை மற்றும் குணரத்தினம் (இலங்கை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், செல்வராணி (பிரான்ஸ்), தங்கராணி, பாஸ்கரன், பீர்த்திகரன், கிருபாகரன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும், துரைசிங்கம், றஞ்சநாதன், சுடர்னி, லசோனா, காயத்திரி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்ற மகேஸ்வரி மற்றும் பவளம், பரமேஸ்வரி (இலங்கை), தவமணி (கனடா) ஆகியோரின் மைத்துனியும், நிருபன், நிதாசன், நீபூர்ணா, நிதுசன், நிற்சனா, தினேசன், திவ்யா, தருண், துசாந், வசீதன், கவிசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (01.06.2013) சனிக்கிழமை கனடாவில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளு மாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தொடர்புகளுக்கு
பாஸ்கரன் 141 641 69151403/ 146472821724

தகவல்: குடும்பத்தினர்.

(2.6)(37802)

# மரண அறிவித்தல்

## வைத்திலிங்கம் சங்கரப்பிள்ளை
### (ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர், சுன்னாகம்)



சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் சங்கரப்பிள்ளை 27.05.2013 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார், காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், ராஜபூபதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற செல்லையாவின் அன்புச் சகோதரனும் விஜயகுமார், ராஜகுமார், காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் சிவகுமார், விஜயராணி, ஜெயராணி ஆகியோரின் பாசமிகு தந்தையும், செல்வராணி, கவிதா, ரதி, பிரேமலா, புஸ்பராஜா, இராசேந்திரம் ஆகியோரின் பாசமிகு மாமனும், பவித்திரா, சுஜித்திரா, நிஜித்திரா, கஜேந்தினி, சோபி, தனு, ஜெசிதா, லக்ஷனா, வினித்குமார், அஜித்குமார், சுவேதா, துவாரகேஷ் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (31.05.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

''இயற்கை வாசா'', புகையிரத நிலைய வீதி, சுன்னாகம். 021 320 2633

தகவல்: குடும்பத்தினர்.

(2.6)(37803)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாவகச்சேரி வைத்தியசாலையில் சிகிச்சை பெறுவோர் அதிகரிப்பு

தென்மராட்சி, மே 31
சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.
மேற்படி வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு வழங்கப்படும் சுட்டி அடிப்படை சேவைகளின் பயனாக தென்மராட்சி, பச்சிலைப்பள்ளி, வடமராட்சி கிழக்கு, பூநகரி உள்ளிட்ட பிரதேசங்களைச் சேர்ந்த நோயாளர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.
கடந்த ஏப்ரல் மாதம் சுமார் 14 ஆயிரம் நோயாளர்கள் வெளி நோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்றுள்ளனர் என்று புள்ளி விவரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.
(வ-9)

# வர்த்தகர்களுக்கு அபராதம்

### அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடாததால்

தென்மராட்சி,மே 31
அளவை, நிலுவை உபகரணங்களுக்கு இந்த வருடத்துக்கான முத்திரையிடாமல் பயன்படுத்திய சாவகச்சேரி பிரதேசத்தைச் சேர்ந்த எட்டு வர்த்தகர்களுக்கு நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் அபராதம் விதிக்கப்பட்டது.
கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் யாழ். மாவட்ட அளவீட்டுச் சேவைகள் உபாயங்கள் திணைக்களத்தால் சாவகச்சேரி நகரசபை சாவகச்சேரி பிரதேச சபையின் கொடிகாமம், கைதடி அலுவலகங்களில் வியாபார, வர்த்தக நிலையங்களில் பயன்படுத்தும் அளவை, நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணிகள் இடம்பெற்றன.
அப்போது தமது அளவை நிறுவை உபகரணங்களுக்கு முத்திரையிடாமல் பயன்படுத்தியவர்கள் இந்த மாத முற்பகுதியில் திணைக்கள உத்தியோகத்தர்கள் பரிசோதனை நடத்தியபோது பிடிக்கப்பட்டனர்.
இந்த வர்த்தகர்களுக்கு எதிராக சாவகச்சேரி நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் நேற்றுமுன்தினம் விசாரணைக்கு எடுக்கப்பட்டன.
வர்த்தகர்கள் குற்றத்தை ஒப்புக் கொண்டதையடுத்து இருவருக்கும் தலா 2 ,யிரத்து 500 ரூபா வீத்மும் 6 பேருக்கு தலா 1,000 ரூபா வீதமும் அபராதம் விதிக்கப்பட்டது.
(வ-9)

# நடமாடும் சேவைகள்


### கோப்பாய், சங்கானை பகுதிகளில்

யாழ்ப்பாணம்,மே 31
யாழ்.மாவட்ட பதிவாளர் அலுவலகத்தால் பிறப்பு, இறப்பு, திருமண பதிவுகள் மற்றும் தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் ஜுன் மாதம் 6 ஆம் திகதி வலி.மேற்கு சங்கானை பிரதேச செயலகத்தில் நடைபெறவுள்ளது.
வலி.மேற்கு சங்கானைப் பிரதேச செயலக பிரிவுக்கு உட்பட்டவர்கள் அந்தந்தப் பிரிவு கிராம அலுவலர்களுடன் தொடர்பு கொண்டு குறித்த நடமாடும் சேவையில் பயன் பெறலாம்.
இதற்கென தேசிய அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள் தமது பிரிவுக்குட்பட்ட பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்து அதன் முறைப்பாட்டுப் பிரதியையும், பிறப்புச் சான்றிதழ் இல்லாதவர்கள் மற்றும் பதிவை மேற்கொள்ளாதவர்கள் சமாதான நீதிவான் ஒருவரின் உறுதிப்படுத்தல் கடிதத்தையும், திருமணமான பெண்கள் தமது கணவரது பெயரில் தேசிய அடையாள அட்டையை மாற்றம் செய்ய பிறப்புச் சான்றிதழ் மற்றும் திருமணச் சான்றிதழ் ஆகியவற்றையும் ஆவணங்களாகச் சமர்ப்பிக்க வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ-14-29)

★ ★ ★

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குள் வசிக்கும் இதுவரை தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக்கொள்ளாமலுள்ள 16 வயதை நிறைவு செய்தவர்களுக்கான தேசிய அடையாள அட்டை பெறுவதற்கான நடமாடும் சேவை எதிர்வரும் ஜுன் 3 ஆம் திகதி திங்கட்கிழமையும், மறுநாள் 4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமையும் நடைபெற உள்ளதாக கோப்பாய் பிரதேச செயலகம் அறிவித்துள்ளது.
பவ்ரல் அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள இந்த நடமாடும் சேவை ஜுன் 3 ஆம் திகதி வலிகாமம் கிழக்கு கோப்பாய் பிரதேச செயலகத்திலும் மறுநாள் 4 ஆம் திகதி கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட ஆவரங்கால் சிவசக்தி மணிமண்டபத்திலும் நடைபெற உள்ளது.
இந்த நாடமாடும் சேவை இந்த இரு தினங்களிலும் காலை 8.30 மணி தொடக்கம் நடைபெற உள்ளது. நடமாடும் சேவையில் கொழும்பு ஆள்பதிவு திணைக்கள அதிகாரிகள் கலந்துகொள்ள உள்ளனர். பொலிஸ் அறிக்கையை வழங்குவதற்காக அச்சுவேலி மற்றும் கோப்பாய் பொலிஸ் நிலையங்களைச் சேர்ந்த அதிகாரிகளும் கலந்துகொள்வர். மேற்படி நடமாடும் சேவையில் தேசிய அடையாள அட்டையை வழங்குவதற்கான புகைப்படம், முத்திரை ஆகியவற்றை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.
(வ-51)

# துர்நாற்றத்தின் மத்தியில் கிராம சேவகர் பிரிவு



யாழ்ப்பாணம், மே 31
யாழ். நகர் கஸ்தூரியார் வீதியில் பெரியகடை ஜே/80 கிராமசேவகர் பிரிவு அமைந்திருக்கும் உள்ளக வீதியில் அமைந்துள்ள வாய்க்காலில் கழிவு நீர் தேங்கி நிற்பதால் துர்நாற்றம் வீசுகிறது.
இதன் காரணமாக கிராம சேவகர் பிரிவுக்கு வருகை தரும் பொது மக்களும், அருகில் உள்ள குடியிருப்பாளர்களும் துர்நாற்றமான காற்றினை சுவாசிக்க நேரிட்டுள்ளது.
குறித்த வாய்க்காலில் குப்பை கூழங்கள், மிருகங்களினது கழிவுகள், உடைந்த போத்தல்கள், ரின்கள் போன்றன வீசப்பட்டு வாய்க்கால் நிரப்பப்பட்டுள்ளது.
வாய்க்காலில் நீர் வழிந்தோடக் கூடிய வழிமுறைகள் இல்லாத காரணத்தால் கழிவு நீர் தேங்கி நின்று நுளம்புப் பெருக்கம் அதிகரிக்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது. இதனால் அருகில் உள்ள குடியிருப்பாளர்கள் மாலை நேரங்களில் நுளம்புக்கடிக்கு உள்ளாக வேண்டியுமுள்ளது.
இதனைவிட கிராம சேவையாளர் பிரிவுக்கு தற்போது வாக்காளர் பதிவு நடவடிக்கைகளுக்காக பொதுமக்கள் அதிகம் வருவதால் துர்நாற்றமான சுவாசத்தை அனுபவிக்க வேண்டியுள்ளது.
மணிக்கூட்டுக் கோபுரத்துக்கு வெள்ளை அடிக்கும் மாநகர சபை இதனைக் கண்டு கொள்ளாதது ஏன் என மக்கள் கேள்வி எழுப்புகின்றனர்.
(வ-14-ரி)

## புகைத்தல் தினத்தையொட்டி மாணவரிடையே போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 31
சமுர்த்தி அதிகார சபையின் நல்லூர் வடக்கு சமுர்த்தி செயலணி சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை முன்னிட்டு நல்லூர் வடக்கு பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பாடசாலை மாணவர்கள் இடையே பொது அறிவுப் போட்டிகளை நடத்தவுள்ளது.
போட்டிகளில் அனைத்து வினாக்களுக்கும் சரியான விடையளிக்கும் மாணவர்களில் குலுக்கல் முறையில் தெரிவு செய்யப்படும் 5 மாணவர்களுக்குப் பெறுமதி மிக்க பரிசில்களை வழங்கவுள்ளதாக நல்லூர் பிரதேச வடக்கு சமுர்த்திச் செயலணி அறிவித்துள்ளது.
மேற்படி போட்டிகள் நாளை மறுதினம் சனிக்கிழமை முதல் எதிர்வரும் 10 ஆம் திகதி திங்கட்கிழமை வரை நடைபெறும். (வ-7)



## வருவார்களா திறக்க...



யாழ். பழைய பூங்கா வளாகத்தில் அரச ஊழியர்களுக்கான பயிற்சிகளை வழங்கும் நோக்கில் அமைக்கப்பட்டுள்ள கட்டடத் தொகுதியொன்று நிர்மாணிப்புப் பணிகள் நிறைவுற்ற நிலையில் திறப்பு விழாவுக்கு பிரதம அதிதிகளின் வருகையை எதிர்நோக்கிக் காத்திருக்கின்றது.
அரச ஊழியர்களுக்கு கணினி மற்றும் அலுவலக நிர்வாக பயிற்சிகளை மேற்கொள்ள இந்தப் பயிற்சி நிலைய மாடிக்கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டு கணினி மற்றும் உபகரண வசதிகள் கிடைக்கப்பெற்ற நிலையில் திறப்பு விழா நடைபெறும் நாளை எதிர்பார்த்திருக்கிறது. (வ-135)

### குடாநாட்டு தனியார் கல்வி நிறுவனங்களில்

## வெள்ளிக்கிழமைகளில் 4 மணியுடன் கற்றல் செயற்பாடுகளை நிறுத்த முடிபு

யாழ்ப்பாணம், மே 31
குடாநாட்டில் இயங்கும் தனியார் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 4 மணியுடன் மூடப்பட வேண்டும் என்று இந்து சமய அமைப்புகள் கூட்டாக இணைந்து தீர்மானம் நிறைவேற்றியுள்ளன.
பாடசாலை மாணவர்களிடையே இந்து சமயப் பண்புகளை வளர்க்கும் நோக்குடன் தனியார் கல்வி நிலையங்களை மாலை 4 மணியுடன் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மூட வேண்டும் எனும் கோரிக்கைக்கு அமைவாக இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.
இந்து சமய, சிவில் சமூக அமைப்புகளுடனான கலந்துரையாடல் ஒன்று அண்மையில் வேதாந்த மடத்தில் இடம்பெற்றது. யாழ்.சின்மயா மிஷனைச் சேர்ந்த பிரம்மச்சாரி ஜாக்கிரத் சைத்தன்ய தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலின் போது இந்து சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகளின் கருத்துக்களுக்கு அமைவாக வெள்ளிக்கிழமைகளில் அறநெறிப் பாடசாலைகள் மாலை நேரம் நடத்தப்பட வேண்டி இருப்பதால் தனியார் கல்வி நிறுவனங்களை மாலை 4 மணியுடன் மூடவேண்டும்.
பிரதி வெள்ளிக்கிழமை தோறும் மாலை 4 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை அறநெறி வகுப்புக்களும், மாலை 5.30 தொடக்கம் மாலை 6.30 மணிவரை பஜனை, கூட்டுப் பிரார்த்தனையும், மாலை 6 மணி தொடக்கம் மாலை 6.30 மணி வரை இந்து ஆலயங்களில் பூசை வழிபாடும், மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 7 மணி வரை ஆன்மிக அருளுரைகளும் நடத்தப்பட வேண்டும் எனத் தீர்மனிக்கப்பட்டுள்ளது.
இதற்கமைவாக இந்து சமய ஆசிரியர்கள் மற்றும் குருமார்கள், சமய ஆர்வலர்கள் ஒத்துழைப்பு வழங்கி மாணவர் இடையே அறநெறிச் சிந்தனைகளைக் கொண்டு வர வேண்டும் எனவும் தெரிவித்தார். (வ-14-86)



## அனுமதிப்பத்திரமின்றி பனைமரம் ஏற்றியவர் கைது

அனுமதிப்பத்திரம் இன்றி பனை மரம் ஏற்றிச் சென்ற இருவர் இளவாலைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தலைமையில் சென்ற பொலிஸ் குழுவினரால் கடந்த செவ்வாய்க்கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளனர்.
மாதகல் பகுதியில் இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சிந்திக்க பண்டாரா தலைமையிலான பொலிஸ் குழுவினர் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தனர்.
வீதியால் பனைமரங்களுடன் வந்த உழவு இயந்திரத்தை மறித்து வழி அனுமதிப்பத்திரம் மற்றும் பனை தறித்தமைக்கான அனுமதிப் பத்திரங்களைக் கோரியபோது இத்தகைய அனுமதிப் பத்திரங்கள் எவையும் இன்றி குறிப்பிட்ட 23 பனை மரங்கள் தறிக்கப்பட்டு எடுத்துச் செல்லப்படுவதைக் கண்டுபிடித்துள்ளனர். (வ-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் - புங்கங்குளம் வில்லவயடி ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் ஆலய வருடாந்த

# பொங்கல் விழாச் சிறப்புமலர் - 31.05.2013

## வில்லவயம்பதியில் வீற்றிருந்தே வினை தீர்க்கும் அன்னை

### அம்பாளின் அருட் பார்வை

யாழ். குடாநாட்டில் புங்கங்குளம் பகுதியில் தோன்றி அருள்பாலிக்கும் அம்மன் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மனின் அருளாட்சியே ஆகும். ஆனால், இந்தப் புங்கங்குள அம்மனின் அருட் தோற்றம் நாட்டின் நிலையினால் ஏற்பட்ட தொன்றன்று. இன்றைக்கு சுமார் 47 வருடங்களுக்கு முன்னரே அம்பாளின் அருட் பார்வை இவ் விடத்தில் தோன்றியிருப்பதை அடியார்கள் அறிந்துகொள்வார்கள்.

### அம்பிகையின் தெய்வீகப் புதுமை

இந்த ஆலயத்துக்குள் பிரவேசித்ததும் அடியார்களுக்கு ஏற்படுகின்ற உணர்ச்சிப் பரவச நிலை, அம்பாளைத் தரிசிக்க வரும் போது காணக்கூடிய அற்புதக் காட்சிகள், அம்பாளுக்குப் பூசைக்காக அடியார்கள் கொண்டுவந்து வைக்கின்ற பால், பழங்கள், மலர்கள் மறைந்து விடுகின்ற தன்மை, அடியார்களின் நடமாட்டம் இல்லாதபோது இங்கு நடக்கிறதோர் இனம் தெரியாத தெய்வீக நடமாட்டம் அம்பாளுக்குச் செய்கின்ற நேர்த்திக் கடன்களினால் நோய், பிணி, தோஷங்கள் நீங்கிடும் தன்மை, அத் தனைக்கும் மேலாக அம்பாளுக்கு முன் னால் வளர்க்கப்பட்டிருக்கும் தீக் குழம் பின்மேல் அடியார்கள் ஆரவாரமின்றி அமைதியாக நடந்து செல்லும் தெய்வீகம் என்பன அம்பாள் இந்த ஆலயத்தில் விரும்பி உறைகின்ற தன்மையையே வெளிப்படுத்து கின்றன.

### அம்பிகையின் அருட்தோற்றம்

அழகிய பெருந்தெரு அதனை அண்டியிருக்கும் ஒரு புனிதமான குச்சொழுங்கை. அறிவும், ஆற்ற லும், தெய்வீகமும் நிறைந்திருக்கும் மக்கள் சூழ்ந்த அயல். இத்தனைக்கும் நடுவிலே அமைந்திருக்கும் அற்புத மரத் தோப்புக்கள். இதிலே உயர்ந்து ஓங்கி வளர்ந்து நிற்கிறது அம்மனுக்குப் பிடித்தமான ஒரு வில்வமரம். இந்த மரத்தின் அடியிலேதான் அம்பாளின் வதிவிடம் தென்படலாயிற்று. அக்காலத்தில் ஆலய வளவுக்குள் குடியிருந்த அடியார்கள் அம்மனின் அருளையும் அருட்தோற்றத் தையும் தெய்வீக மேலீட்டினால் பல தடவைகள் கண்டு வியந்து அந்த இடத்தில் சிறியதோர் ஆலயத்தை அமைத்து ஆராதிக்க முற்படலாயினர். காலப்போக்கில் அயலவர்களும் அண்டி வாழ்பவர்களும் அம்பாளின் அற்புதங்களினால் அம்பாள் அடியார்கள் ஆயினர். யாழ். நகரில் புங்கங்குளப் பகுதியில் வில்வ மரத்தடியில் அம்பாளின் வதிவிடம் மிகச் சிறியதானாலும் அம்பாளின் அற்புதங்களினாலும் இந்த ஆலயம் தெய்வீக நிலையினால் மிக மிக மேலோங்கியுள்ளமை குறிப்பிடத்தக்க விடயம்.

### நம்பியே கை தொழுவோம் நாம்

அம்பாளின் வருடாந்தப் பொங்கல் தினம் இன்று வெள்ளிக்கிழமை ஆகும். அடியார்கள் அனைவரும் யாழ். நகரில் புங்கங்குளம் பகுதி வில்லை அடியிலே அமர்ந்து அருள்பாலிக்கும் நயினை ஸ்ரீ நாகபூஷணி அம்பாளின் அருட் பெரும் தோற்றத்தை அணுகி பேரருள் பெற்று உயர்வார்களாக.

***"மேன்மை கொள் சைவ நீதி***
***விளங்குக உலகமெல்லாம்"***

அம்பிகையைச் சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாமே.
நம்பியே கைதொழுவோருக்குப் பிணி நீங்கிடுமே

- கே. வைத்திலிங்கம்



வில்லை மரத்தானை வெவ்வினைகள் களைவானை
அல்லும் பகலுமெங்கள் தொல்லையற அருள்வானை
பொல்லா வினையகல புங்கங்குளத்தார் புகுந்து
கல்லும் கசிந்துருக பாவிகள் நாம் பணிந்திடுவோம்.



## பொங்கல் விழாச் சிறப்புறப் பிரார்த்திப்போரும், விளம்பர அனுசரணையாளர்களும்

கட்டடப் பொருள்கள், உழவு இயந்திரம், லான்ட்மாஸ்ரர் உதிரிப்பாகங்கள் விநியோகஸ்தர்
**நந்தினி என்ரபிறைஸ்**
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

**இளவரசி**
**சேலைச் சோலை**
(பட்டுப் புடைவைகளின் சாம்ராஜ்யம்)
நவீனசந்தை யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 2222 503

கோயிலுக்குத் தேவையான பட்டு சரிகைத் துணிகள், பட்டு வேட்டிகள், சால்வைகள் மற்றும் நவீன சாறி வகைகள் முதலியவற்றுக்கு நாடுங்கள்
**அஜந்தாஸ் ரெக்ஸ்ரைல்ஸ்**
25, 4 ஆம் குறுக் குத்தெரு,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

நவநாகரிக நங்கையர் விரும்பும் அசல் 22 கரட் தங்க நகைகளுக்கு உத்தரவாதம் மிக்க நம்பிக்கையான ஸ்தாபனம்
**சிறிநதியா நகைமாடம்**
டிஜிற்றல் கலர் லாப், வீடியோ அன் ஸ்ரூடியோ
20, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

வில்லையடி
**ஸ்ரீ நாகபூஷணி அம்பாள்**
கச்சான் பிஸ்கட்
தயாரிப்பு: T.S. நாதன்
இல. 96/1, சுச்சமோட்டை வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 2491

தரமான நல்ல பொருள்களை நீங்கள் நயமாக வாங்கிக்கொள்ள நாடுங்கள்
**வேல் முருகன் வணிக நிலையம்**
(முருகன் றேடர்ஸ்)
56 A, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

எல்லா அளவுகளிலும் நல்ல தரமான மரங்களை எந்நேரமும் சகாய விலைகளில் பெற்றிட நாணயம் மிக்க நிறுவனம்
**அன்னை மரக்காலை**
உரிமையாளர்: க. முருகேந்திரன்
176, ஆரியகுளத்தடி,
பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

அழகுக்கு அழகூட்டும் தங்க ஆபரணங்களுக்கு நீங்கள் நாடவேண்டிய இடம்
**அலங்கார் நகை மாளிகை**
21/7, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 2920

பவுண், பொன், வெள்ளி வாங்கவும் விற்கவும் நம்பிக்கையான ஸ்தாபனம்
**தம்பிப்பிள்ளையும் மைந்தரும் நகைமாடம்**
191 (543), கே.கே.எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**சாந்தன் ஸ்ரோர்ஸ்**
173, கொழும்புத்துறை வீதி,
யாழ்ப்பாணம்

தரமான குளிர்பான வகைகளுக்கும் ஐஸ்கிறீம் வகைகளுக்கும் நாடவேண்டிய இடம்
**ஐடியல் கிறீம் ஹவுஸ்**
158, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

புதுப்புது டிசைன்களில் ஒளிரும் நகைகளை ஓடருக்குப் பெற்றுக்கொள்ள நாடுங்கள்
**சாணுகா நகைமாடம்**
200 G, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே. 3700

பிஸ்கட் மற்றும் சொக்லேட் வகைகளில் மொத்த விற்பனையாளர்
**நிஷோ ரேடர்ஸ்**
இல. 05, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன வடிவமைப்புகளில் நவநாகரிக முறையில் அழகிய தங்க நகைகளை குறித்த தவணையில் செய்துபெற்றுக்கொள்ள
**பூரணி நகைமடம்**
1/4, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே. 3121

அழகுக்கு மெருகூட்டும் அழகிய நகைகளுக்கு நம்பிக்கை வாய்ந்த நல்ல இடம்
**சோபனா நகைமாளிகை**
116 V, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**கொனிக்கா கலர் லாப்**
**சிறிராம் ஜூவெல்லர்ஸ்**
193, கஸ்தூரியார் வீதி,
தொ.பே.
021 222 8334

உங்கள் இளமைக்கு மேலும் மெருகூட்டும் கண்கவர் 22 கரட் தங்க நகைகளைப் பெற்றிட சிறந்த ஸ்தாபனம்
**உதயா ஜூவெல்லர்ஸ்**
தங்கப்பவுண் நகை வியாபாரம்
81, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

நவீன டிசைன்களில் நாகரிகத்திற்கேற்ப தங்கப்பவுண் நகைகளை நயமாகச் செய்துகொள்ள
**சிறி மீனாட்சி ஜூவெல்லர்ஸ்**
கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

**சபேஸ்**
போட்டோ
103, புங்கங்குளம் அரியாலை,
யாழ்ப்பாணம்.
077 7877 760

**இராஜேஸ்வரி ரெக்ஸ்ரைல்**
இல.105,
மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.
021 222 6953


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வடக்குத் தேர்தல் களத்தில் 17 கட்சிகள்

எதிர்வரும் செம்ரெம்பர் மாதத்தில் நடத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள வடக்கு மாகாண சபைக்கான தேர்தலில் சுயேச்சைக் குழுக்கள், அரசியல் கட்சிகள் உட்பட 17 அமைப்புக்கள் வரையில் போட்டியிடக்கூடும் என்று அரசியல் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஸ்ரீ ரெலோ குழு, மக்கள் விடுதலை முன்னணி, தமிழ்த் தேசிய மக்கள் கூட்டமைப்பு, 3 இடதுசாரிக்கட்சிகள், 6 சுயேச்சைக் குழுக்கள், புனர்வாழ்வு பெற்றுள்ள விடுதலைப்புலி உறுப்பினர்கள் கொண்ட வேட்பாளர்கள் குழு எனப் பல கட்சிகள் போட்டியிடவுள்ளன என்று கூறப்படுகிறது.

இந்த மாகாண சபைத் தேர்தலில் பிரதான அரசியல் கட்சிகளுக்கு இடையில் கடும் போட்டிகள் தலைதூக்கும் அறிகுறிகளும் தென்படுகின்றன.

வடக்கு மாகாண சபைக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், வவுனியா ஆகிய மாவட்டங்களில் இருந்து 36 உறுப்பினர்கள் தேர்தல் மூலம் தெரிவு



செய்யப்படவுள்ளதோடு, இரண்டு போனஸ் ஆசனங்கள் உள்ளடங்கலாக முழுமையான உறுப்பினர்களின் எண்ணிக்கை 38 ஆகும்.

இந்த மாகாண சபைத் தேர்தலின்போது 1983 ஆம் ஆண்டுக்கு முன்னர் வடக்கில் வசித்து தற்போது வேறு பிரதசங்களில் குடியிருக்கும் இலங்கையருக்கும் வக்களிப்புஉரிமை கிடைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-22)

# குண்டு துளைக்காத வாகனம் எனக்கு வழங்கியமை ஏன்?

## சுவிஸ் அரசிடம் சுகாதார அமைச்சர் கேள்வி

கொழும்பு,மே 31

மாநாட்டில் கலந்து கொள்வதற்காக ஜெனிவாவில் தங்கியிருந்தபோது எனக்கு குண்டு துளைக்காத வாகனம் வழங்கப்பட்டமை ஏன் என்று சுவிஸ் சர்லாந்து அரசிடம் கேள்வி எழுப்பவுள்ளேன்.

இவ்வாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

இதுதொடர்பாக சுவிஸ்சர்லாந்து அரசுக்கு இலங்கை வெளி விவகார அமைச்சின் ஊடாக கடிதம் ஒன்றை அனுப்பி வைக்கவுள்ளேன் என்று அவர் கூறினார்.

ஜெனிவாவில் எனக்கு சிறப்புப் பாதுகாப்பு வழங்கப்பட்டமை எதற்காக என்று சுவிஸ் அதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளேன்.

அதற்கு அவர்கள் உயர்மட்ட உத்தரவு என்று பதிலளித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளுடன் போர் நடந்து கொண்டிருந்த போது, அவர்கள் எம்மை இலக்கு வைத்து இலங்கையில் குண்டுத் தாக்குதலை நடத்தியிருந்த சூழலில் ஜெனிவா மாநாட்டுக்குச் சென்ற எமக்கு அத்தகைய பாதுகாப்பு ஏதும் வழங்கப்படவில்லை.

ஆனால், போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகள் கழித்து இத்தகைய பாதுகாப்பு வழங்கப்பட்டமை கவலைக்குரியது.-என்றார். (ச)



**போர் முடிவுக்குக் கொண்டு வரப்பட்டு நான்கு ஆண்டுகள் கழித்து இத்தகைய பாதுகாப்பு வழங்கப்பட்டமை கவலைக்குரியது.**

# வரி செலுத்தாதோரின் சொத்துக்கள் முடக்கம்

## கொழும்பு மாநகர சபை ஆணையாளர் தகவல்


கொழும்பு,மே 31

வருமான வரி செலுத்தாத 200 பேரின் சொத்துக்களை முடக்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கொழும்பு மாநகர சபை ஆணையாளர் பத்ராணி ஜயவர்தன தெரிவித்தார்.

இதுதொடர்பில் உரியவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று அவர் குறிப்பிட்டார்.

வருமான வரி செலுத்தாமை தொடர்பில் அவர்களுக்கு பல்வேறு சந்தர்ப்பங்களில் தெரியப்படுத்திய போதிலும் அவர்கள் உரிய முறையில் பதிலளிக்காமையால் இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று அவர் கூறினார்.

இதுவரையில் மாநகர சபையில் 1500 மில்லியன் ரூபா வருமான வரி நிலுவையிலுள்ளது என்று அவர் சுட்டிக்காட்டினார். வருமான வரி உரிய முறையில் செலுத்தப்படாமையால் மாநகர சபையின் சில அபிவிருத்தி நடவடிக்கைகள் தாமதமடைகின்றன என்று அவர் கூறினார். (ச)



பீஜிங்கிலுள்ள சீன மக்கள் பெரு மண்டபத்துக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ வருகைதந்தபோது அளிக்கப்பட்ட இராணுவ மரியாதையை ஜனாதிபதி ஏற்றுக் கொள்கிறார்.

# வனவிலங்கு பூங்காவில் இரகசியக் 'கமெராக்கள்'

கொழும்பு,மே 31

வனவிலங்கு பூங்காக்களை பார்வையிட வருவோரின் நடத்தையைக் கண்காணிக்க இரகசிய கமெராக்கள் பொருத்தப்படவுள்ளன என்று வனவிலங்கு அமைச்சு கூறியுள்ளது.

வனவிலங்கு பூங்காக்களுக்கு வருகைதருவோரும், சேவை வழங்குநர்களும் நல்லொழுக்க நியமங்களுக்கு மாறாக நடந்துகொள்வதாக ஆய்வொன்று சுட்டிக்காட்டியுள்ளது. அதனால் இந்த நடவடிக்கையையை அமைச்சு எடுத்துள்ளது என்று வனவிலங்குபிரதி அமைச்சர் எஸ்.எம். சந்திரசேன கூறினார்.

# 'ஹஜ்' காலத்தில் குழப்பத்துக்கு தூபமிடும் தீக்குளிப்புச் சம்பவம்

## அமைச்சர் ஹக்கீம் முன்னெச்சரிக்கை

கொழும்பு,மே 31

கண்டியில் அண்மையில் நடைபெற்ற பிக்கு தீக்குளிப்புச் சம்பவத்தால் புனித நோன்பு, ஹஜ் பெருநாள் கடமைகளில் தாக்கங்கள் ஏற்பட்டுவிடக்கூடாது. அதில் அரசு அக்கறை செலுத்த வேண்டும். ஒவ்வொரு முறையும் ஹஜ் காலத்தில்தான் குழப்பங்களை ஏற்படுத்தும் வகையில் இவ்வாறான துரதிஸ்ட சம்பவங்கள் நடைபெற்று வருகின்றன.

- இவ்வாறு நீதியமைச்சரும் மு.கா. தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.



பௌத்த மேலாதிக்கவாதிகளின் அண்மைக்கால செயற்பாடுகள் மீண்டும் தலைதூக்கியிருப்பதன் பின்னணி குறித்து அரசு கூடுதல் கவனம் செலுத்தவேண்டிய தேவை இருக்கிறது என்று அவர் சுட்டிக்காட்டினார்.

கண்டியில் பிக்கு ஒருவர் தீக்குளித்த சம்பவத்தையடுத்து பௌத்த பிக்குகள் ஒருசிலரால், முஸ்லிம் பிரதேசங்கள் பலவற்றிலுள்ள இறைச்சிக் கடைகளுக்கு விடுக்கப்படும் அச்சுறுத்தல்கள் குறித்து அவர் கருத்துத் தெரிவித்தபோதே இவ்வாறு கூறினார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது:-

அரசை நெருக்கடிக்குள் தள்ளுவதற்காக இப்போது எடுக்கப்படும் பல முயற்சிகளில் ஒன்றாகத்தான் கண்டியில் நடைபெற்ற சம்பவத்தைப் பார்க்கவேண்டியுள்ளது.

ஒவ்வொரு முறையும் ஹஜ் காலத்தில் இவ்வாறான பிரச்சினைகள் வந்தவண்ணம் உள்ளன.எனினும் நாங்கள் மிகவும் நிதானமாக இந்த விடயங்களைக் கையாளவேண்டியுள்ளது.

ஹஜ் பெருநாள் காலத்தில் முஸ்லிம்கள் உழ்ஹிய்யா கொடுப்பது தொடர்பில் நாங்கள் கவனத்தைச் செலுத்தியுள்ளோம். அதில் எதுவித பாதிப்புகளும் ஏற்படாத வகையில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டியுள்ளது. இது குறித்து உயர்மட்டத் தரப்புகளின் கவனத்துக்கு கொண்டு செல்கிறோம் - என்றார் .(ச)

# வெளிநாடு செல்லும் தாய்மார் குறித்து தகவல் வழங்குங்கள்

## வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகம் கோரிக்கை

கொழும்பு,மே 31

குழந்தைகளை நிர்க்கதியாக்கி தொழிலுக்காக வெளிநாடு செல்லத் தயாராகும் தாய்மார் தொடர்பில் தகவல்களை வழங்குமாறு வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதனூடாக, தாய்மார் வெளிநாடு செல்வதனை தற்காலிகமாக தடைசெய்ய முடியும் என்று வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தின் ஊடகப் பேச்சாளர் மங்கள ரன்தெனிய குறிப்பிட்டார்.

மனைவிமார் இரகசியமான முறையில் வெளிநாடு சென்றுள்ளதாக ஒரு சிலர் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர் என்றும் அவர் கூறினார்.

குழந்தைகளைப் பராமரிக்க முடியாதுள்ள காரணத்தால் வெளிநாடு சென்றுள்ள தமது மனைவிமாரை மீண்டும் நாட்டுக்குத் திருப்பியழைக்குமாறு அவர்களது கணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-ரி)

**வெளிநாடு சென்றுள்ள தமது மனைவிமாரை மீண்டும் நாட்டுக்குத் திருப்பியழைக்குமாறு அவர்களது கணவர்கள் கோருகின்றனர்.**

# திருட்டில் ஈடுபட்ட மூன்று பேர் கைது



மட்டக்களப்பு,மே 31

மட்டக்களப்பு, சேத்துக்குடாப் பிரதேசத்தில் வீடொன்றை உடைத்து பொருள்களைத் திருடியமை தொடர்பில் சந்தேகநபர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டிருந்த பெண் ஒருவரிடம் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கு அமைய ஏனைய சந்தேகநபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று மட்டக்களப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

சந்கேநபர்கள் திருப்பெருந்துறை, இருதயபுரம் பிரதேசத்தில் வசித்து வருபவர்கள் என்று பொலிஸார் குறிப்பிட்டனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்** தொடர்புகளுக்கு

**வன்னிப் பணிமனை:**
ஏ-9 வீதி, கரடிப்போக்கு, கிளிநொச்சி (புனித திரேசா வித்தி. முன்பாக)
தொலைபேசி: 021 228 0065
தொலைநகல்: 021 228 0066
**நெல்லியடிக் கிளை:**
பிரதான வீதி, நெல்லியடி (HNB அருகே)
தொலைபேசி: 021 2262789, 021 226 2395
**சாவகச்சேரிக் கிளை:**
புதிய சந்தை மேல்மாடி, சாவகச்சேரி
தொலைபேசி: 021 227 0323

விநியோகஸ்தர்கள்: 'சதா ஏஜென்ஸ்' மாலுசந்தி, அல்வாய்: 0212263206. 'நெல்லியடி மொடேர்ன் ஸ்ரோர்ஸ்' பஸ்நிலையம், நெல்லியடி: 0214901519. 'ஜோதி புக் சென்ரர்' மன்னார்: 0232222052 'மீசாலை கஜானன்' கண்டி வீதி, மீசாலை தெற்கு: 021 227 0399. 'மன்னார் சிவசாந்தி' தாழ்வுபாடு வீதி, மன்னார்: 0752824478. 'கொடிகாமம் அருள்ஜோதி' பஸ்நிலையம், கொடிகாமம்: 0774937585. 'கோரி ஏஜென்சிற்றி' முல்லைத்தீவு நகர்: 0779598917. 'அன்புசன்' சிவன் கோயிலடி, ஒட்டுசுட்டான்: 0775035571.

# தொடரும் வேட்டைகள்

சிறுமி மீதான வன்புணர்வில் ஈடுபட்டவருக்கு 7 வருடங்களின் பின்னர் 17 வருட கடூழியச் சிறைத் தண்டனை வழங்கப்பட்டதன் மூலம் இனிமேலாவது இத்தகைய மிருகங்களின் வேட்டை அடங்குமா என்ற ஏக்கம் நேற்று இதே பத்தியில் வெளியிடப்பட்டிருந்தது.

ஆனால் அந்த ஏக்கத்துக்கு ''மிருகங்களின் வேட்டை தொடரும்'' என்ற பதில் உடனடியாகவே கிடைத்துள்ளது. பதில் கிடைத்த இடம் வவுனியாவில் உள்ள சாந்தசோலை. இங்கு 13 வயதுச் சிறுமி ஒருத்தி அவளுடைய மூத்த சகோதரியின் கணவரால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருக்கிறாள்.

சிறுமியின் குடும்பத்தில் வறுமையின் ஆட்சி. தாய் வேலைக்குச் செல்ல வீட்டு வேலைகளை கவனிப்பது இந்த 13 வயது சிறுமிதான். அவளின் தனிமையே விபரீதத்துக்கு வழி கோலிவிட்டது. உறவுகள் மீதான நம்பிக்கையை தகர்த்தெறிந்து விட்டு தன் இச்சையை சிறுமி மீது அக்காவின் கணவர் தீர்த்திருக்கிறார். அவருடைய அக்காவின் கணவர் என்பதால் குறித்த நபர் சிறுமி தனியாக இருக்கும் போது வந்து போனதை அயலில் உள்ளவர்கள் பெரிதாக எடுத்துக்கொள்ளவில்லை. ஆனால் அதுவே அந்த மிருகத்துக்கு வாய்ப்பாகப் போய்விட்டது. தான் தன்னுடைய அத்தானால் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டதாக சிறுமி வேலையால் வந்த தாயிடம் சொல்லியிருக்கிறாள். ஆயினும் தாய் அதனை நம்பவில்லை. கடைசியில் அயலவர்களின் உதவியுடனேயே அந்தச் சிறுமி தனக்கு நேர்ந்த கொடுமையை பொலிஸ் நிலையம் கொண்டு செல்ல முடிந்தது.

நமது உறவுகள் கெடுதியான எதனையும் செய்யப் போவதில்லை என்ற அதீத நம்பிக்கையே சிறுமியின் வாழ்வு சீரழிந்து போனமைக்கு முக்கிய காரணம். எங்களை காக்கும் வேலிகளாக இருக்க வேண்டிய உறவுகளே பயிரை மேயும் கதை சாந்த சோலையிலும் தொடர்ந்துள்ளது.

ஏற்கனவே நெடுங்கேணியில் பள்ளிக்குச் சென்ற மாணவியை பாலியல்துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியவர்களை கைது செய்து விசாரிக்குமாறு அண்மையில் தான் ஓர் ஆர்ப்பாட்டம் நடைபெற்றிருந்தது. இந்த ஆர்ப்பாட்டத்தின் விளைவாக சிறுமியை வேட்டையாடிய சீருடை மிருகம் ஒன்றின் வேடம் கலையப்பட்டு கைதாகி இப்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றது. அந்தச் சம்பவத்தின் தகிப்பு அடங்குவதற்கிடையில் சாந்தசோலையில் இன்னொரு நிகழ்வு அரங்கேறியிருக்கிறது. நெடுங்கேணியில் முன்பின் தெரியாத ஒரு சீருடை மிருகம் மாணவியை தன் இச்சைக்கு உட்படுத்திருயிருந்தது. ஆனால் சாந்த சோலையில் மிகப் பரிச்சயமான, நெருங்கிய உறவுக்காரரால் சிறுமி தன் வாழ்வின் இருண்ட பக்கங்களை சந்திக்க நேர்ந்துள்ளது.

''இவங்களை எல்லாம் விடக்கூடாது. நடுச் சந்தியில் வைத்து நாயைச் சுடுகிறமாதிரிச் சுட வேணும்'' என்று இந்தச் செய்தியைப் படித்த பலர் சொல்லிக்கொண்டார்கள். அவர்களின் ஆதங்கம் உணர்வு பூர்வமானது. எந்தவொரு குற்றத்துக்கும் மரணம் தண்டனையாக முடியாது தான். என்னதான் கடுமையான சிறைத் தண்டனைகள் வழங்கினாலும் சட்டதிருந்தாமல், உடல் இச்சையை மட்டுமே மையமாகக் கொண்டு ஏதுமறியா சிறுமிகளை தொடர்ந்து இரையாக்கும் வெறிபிடித்த மிருகங்களை வேட்டையாடுதலே ஒரே வழி என்பதே மக்களின் நினைப்பு. நடப்பதை எல்லாம் பார்க்கும் போது அவர்களின் நினைப்பு சரிபோலவே படுகிறது. ஆனாலும் வேட்டைக் காரர்களை இழந்துவிட்டு மிருகங்களின் அட்டகாசத்தை மட்டுமே புலம்பித் தீர்த்துக்கொண்டிருக்கிறோம்.

# தொடர்பாடலை முகாமை செய்தல் ஒரு சவாலா..?

நவே. சுதபாலன்
அதிபர், யா/கொழும்புத்துறை
துரையப்பா வித்தியாலயம்.

தொடர்பாடல் என்பது மனித நடத்தையின் அடிப்படை அம்சமாகும். இன்றைய தகவல் தொழில்நுட்ப யுகமானது மனிதனது தகவல் பரிமாற்ற எண்ணிக்கையினை அதிகரிக்கச் செய்துள்ளது. எனினும் வினைத்திறனான தொடர்பாடலே சரியான முறையில் தகவல்களை பரிமாறுவதில் பங்காற்றுவதாகவுள்ளது என்பது எம்மால் நோக்கப்பட வேண்டிய தொன்றாகும். வினைத்திறனான தொடர்பாடலானது தகவலுக்குப் பின்னாலுள்ள மனவெழுச்சிகள் தொடர்பிலும் புரிந்துணர்வினை ஏற்படுத்துவதாகவும் இருக்கும். வாய்மொழியற்ற சைகை, பார்வைப் புலம் ,குரலோசை, உடற் பதட்டம் ,சுவாசிப்பு நிலை என்பன வார்த்தையிலும் பார்க்க பரந்தளவிலான பிரதிபலிப்பினைத் தொடர்பாடலில் வெளிப்படுத்துவதாக இருக்கும். பொருத்தமற்ற தொடர்பாடலானது உறவுகளின் முறிவுக்குக்காரணமாக அமைகிறது. சிறந்த தொடர்பாடல் உத்திகளைக் கையாளுவதன் மூலம் சிறந்த தொடர்பாடற் கோலத்தினைக் கட்டியெழுப்பவும் முடிகின்றது. இந்த வகையில் பின்வரும் செயற்பாடுகள் சிறந்த தொடர்பாடலுக்குப் பங்காற்றுவதாக இருக்கும்.

1. உரையாடலின் போது செவி மடுத்தலினை ஆர்வத்துடன் மேற்கொள்ளல்.
2. கேட்டலில் ஆர்வத்தினை வெளிப்படுத்துதல்.
3. மற்றவர்களுடன் வெளிப்படையான முறையில் மனந்திறந்து உரையாடல்.
4. வார்த்தைகளற்ற சைகைகள் தொடர்பில் அதிக கவனம் செலுத்துதல்.
5. மனவெழுச்சி நிலைமைகளைக் குறைத்துக் கொள்ளல்.

இந்த நிலையில் வன்முறையற்ற தொடர்பாடல் தொடர்பிலும் எமது கவனம் திசை திருப்பப்படல் வேண்டும். நாளாந்தம் வீடுகளில், பாடசாலைகளில், வேலை நிலையங்களில், சமூகத்தில் முரண்பாடுகளை எதிர்கொண்டவர்களாவே பலருள்ளனர். இதனைத் தவிர்க்கக் கூடிய பல சந்தர்ப்பங்கள் காணப்பட்ட போதிலும் இதனை நாம் கருத்திற் கொள்வதில்லை. வன்முறையற்ற தொடர்பாடலானது திருமண பந்தங்களுக்கு வலுவூட்டுகின்றது. பிள்ளைகள் தொடர்பாக எழும் பிரச்சினைகளுக்கு பெற்றோருக்கு வழி காட்டுகின்றது. நிறுவனங்களின் செயற்பாடுகளைச் சிறப்புடையதாக்குகின்றது. வன்முறையற்ற தொடர்பாடலின் அடிப்படையாக பின்வருவனவுள்ளன.


1. ஒவ்வொருவரும் தமது சொந்த வாழ்முறைக்குத் தாமே பொறுப்படையவர். ஒருவரது சொற்பிரயோகம், செயற்பாடுகள் ,உணர்வுகள் என்பவற்றுக்கு அவர்களே பொறுப்பானவர்களாகும்.
2. ஏனையவர்களின் உணர்வுகளுக்கு பொறுப்பேற்க வேண்டிய அவசியமற்ற நிலை. ஒருவர் எம்மீது அதிருப்தியுற்று இருந்தால் அது அவர்களது மனப் பாங்கின் விளைவு, அது எமக்குரியதல்ல.
3. ஒருவர் தமது எண்ணங்கள், விருப்புக்கள், செயற்பாடுகளுக்கு இசையும்படியாக மற்றவர்களை நிர்ப்பந்திக்க முடியாது.
4. ஒவ்வொருவரும் தமது உணர்வுகள் அடிப்படையிலான தனியாள் தேவைகளைக் கொண்டவர்களாகவே ஏனையோர்களுடன் தொடர்பு கொள்கின்றார்கள்.

வெற்றிகரமான தொடர்பாடல் நுட்பங்களாக பின்வருவனவற்றினைக் கருதிக் கொள்ளலாம். தொடர்பாடலில் பங்கு கொள்வோரின் நிலையினை கணிப்புக்கு உட்படுத்துதல், பொருத்தமான தொடர்பாடல் முறையினைக் கையாளல், தொடர்பாடல் தடைகளை நீக்குதல், பொருத்தமான உடல் மொழி சத்தம் என்பவற்றினைக் கையாளுதல் ,உயர்ந்த பட்ச புரிதலினை வழங்கக்கூடிய சொல்லினைக் கையாளல் என்பனவாகும்.

வினைத்திறனான தொடர்பாடல் மூலம் ஊக்குவிப்புச் செயன்முறையினை முன்னெடுக்க முடியும். வேலைத் தலத்திலே சிறந்த தொடர்பாடலானது சிறந்த நண்பனாகவும், பொருத்தமற்ற தொடர்பாடலானது எதிரியாகவும் விளங்க முடியும். தொடர்பாடலானது வேலைத்தலக் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதில் சிறந்த பங்காற்றுவதாயுள்ளது. அது மட்டுமன்றி சிறந்த தொடர்பாடலானது பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான தடைகளையும் அகற்றுவதோடு வெளியீட்டின் தரத்தினையும் உயர்ந்ததாக்குகின்றது. பலவீனமான தொடர்பாடலானது பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தோற்றுவிப்பதாயுள்ளது. விளைதிறனான தொடர்பாடலானது நீடித்த வகையிலான ஊக்கலினை ஊழியரிடையே வழங்குவதாயுள்ளது. சிறந்த முறையில் தாபிக்கப்பட்ட நிறுவனமொன்றில் தொடர்பாடல் சிறப்பான முறையில் அமையுமாயின் அங்கு ஊழியரிடையேயான தொடர்பாடலானது சிறப்பானதாக அமைந்திருக்குமாயின் அது நிறுவன வளர்ச்சியில் பங்காற்றுவதாக இருக்கும். அங்கு செயற்பாடுகள் நிதானமாக முன்னெடுக்கப்படும் என்பதோடு நிறுவனத்தின் இலக்குகள் சரியாகப் புரிந்து கொள்ளப்படுவதோடு நேருக்கு நேரான இடையீட்டு உறவும் கட்டியெழுப்பப்படும்.

சிறந்த தொடர்பாடற் கோலமானது நேர முகாமைத்துவத்தினைப் பேணுவதற்குப் பங்காற்றுவதாகவும் இருக்கும். இங்கு நிறுவன ஊழியர்களை குறித்த நேரத்திலேயே செயலாற்றக்கூடிய நிலைக்கு இட்டுச் செல்லும். தொடர்பாடற் செயலொழுங்கானது உற்பத்திக்கான பல முனைகளைத் திறந்து விடுவதாகவும் இருக்கும். ஊழியரிடையே நேருக்கு நேரான உரையாடல் இடம் பெறுதலானது அவர்களது முக்கியத்துவத்தினை அவர்களுக்கு உணர்த்துவதுடன் அவர்களது கருத்துக்களையும் வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பளிப்பதாயுள்ளது. இதனை நிறுவன முகாமையாளர்கள் உணர்ந்து கொள்வதோடு இதனைக் கட்டியெழுப்புவதில் தடையாகவுள்ள விடயங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்துதல் வேண்டும்.

தொடர்பாடலில் புலக்காட்சி நிலையும் தாக்கத்தினை உண்டு பண்ணுகின்றது. நிறுவன ஊழியர்கள் ஒவ்வொருவரும் குறித்த நிகழ்வு தொடர்பில் வேறுபாடான புலக் காட்சியினைக் கொண்டவர்களாகவுள்ளனர். இதன் காரணமாக எடுக்கும் நிலைப்பாடும் அபிப்பிராயங்களும் வேறுபாடானதாக அமைகின்றது. இந்த நிலையில் வினைத்திறனான தொடர்பாடலானது ஊழியரிடையேயான ஒருமித்த கருத்தினை எட்டுவதற்குப் பங்காற்றுவதாகவுள்ளது. தொடர்பாடலானது அளவுக்கு மீறியதாகவோ பரந்ததாகவோ அமையும் போது அது கூற வேண்டியதைக் கூறாது தவிர்க்கும் நிலை உருவாகும். சிறந்த தொடர்பாடற்றிறன் நிறுவனத்தில் காணப்படும் போது தகவல்கள் எளிமையாகவும், தெளிவாகவும் பரிமாறிக் கொள்ளப்படும். இதன் மூலம் புதிய சூழலில் பொருத்திக் கொள்ள முடியும். சிறந்த தொடர்பாடற்றிறன் உள்ள ஒருவர் தன்னையொத்த நிலையினை ஏனையவர்கள் தொடர்பில் உணர்பவராக விளங்குவார். இதன் மூலம் தனது உரையாடலை மற்றவர்கள் எத்தகைய புரிந்து கொள்ளலுக்கு உட்படுத்துவார்கள் என்ற தெளிவு உடையவராக விளங்குவார். தொடர்பாடல் என்பது இருவழிப் பாதையாகும். எனவே செவிமடுத்தல் என்பதும் தொடர்பாடலுக்கு இன்றியமையாததாகும். சவால்களை வெற்றி கொள்ளக்கூடிய சிறந்த தொடர்பாடலானது எளிமையானதும், மிக அவசியமானதுமான வெற்றியின் கருவியாகும். எனவே நாம் அனைவரும் பொருத்தமான மொழி நடையினை பொருத்தமான வழிமுறைகளில் கையாள்வதன் மூலம் சிறந்த உரையாடல் உலகினைக் கட்டியெழுப்ப முடியும் என்பதோடு சமூக நிலை பேற்றுக்கும் பங்காற்ற முடியும்.




நாம் அனைவரும் பொருத்தமான மொழிநடையினை பொருத்தமான வழிமுறைகளில் கையாள்வதன் மூலம் சிறந்த உரையாடல் உலகினைக் கட்டியெழுப்ப முடியும் என்பதோடு சமூக நிலைபேற்றுக்கும் பங்காற்ற முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகையைப் பகைப்போம்




புகையைக் கூட புகையாய் ஊதித் தள்ளிவிடும் மனிதன் இந்தப் புகை என்னும் பகையை பகைக்க முடியாமல் திணறுகிறான். உண்மையில் புகைத்தலை ஏன் பலரால் நிறுத்த முடியாமல் இருக்கிறது? புகைத்தலினால் உடலில் என்ன மாற்றம் ஏற்படுகின்றது? இந்த விடத்தில் சிறிதேனும் ஆராய்தல் வேண்டும். புகைப்பவர்கள் புகையை உள்ளுக்குள் இழுக்கும் ஒவ்வொரு வேளையும் நிக்கோட்டின் மின்னல் வேகத்தில் மூளையைச் சென்றடைகிறது. புகையிலையில் நிக்கோடின் எனும் நச்சுப் பொருளுடன் வேறும் 700 வகையான இரசாயனக் கூட்டுப்பொருள்கள் சேர்ந்துள்ளன என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. இவற்றுள் சில மனித குலத்துக்கு பேராபத்தை ஏற்படுத்தக்கூடிய அதி சக்தி வாய்ந்த நச்சுப் பொருட்களாகும். இவற்றைத் தான் புகை அபிமானிகள் வாயினுள் உறுஞ்சி நெஞ்சார அனுபவிக்கின்றனர். மூளையில் மனநிலையை மாற்றும் செல்லுக்கு நிக்கோட்டின் செல்வதால் புகைப்பவர்கள் ஒரு ஆறுதலான நிலையை அடைகிறார்கள் என்ற மாயையைத் தோற்றுவிக்கின்றது. இந்த மாயையினால் புகைப்பவர்களுக்கு அழுத்தங்கள் பிரச்சினைகள் எல்லாம் குறைந்த மாதிரித் தோன்றும். அதனால் மற்றைய நேரங்களை விட புகைக்கும் நேரங்களில் கூடிய விடயங்களில் கவனம் செலுத்தக்கூடிய ஒருநிலையில்தாங்கள் இருப்பதாக அவர்கள் எண்ணுவார்கள்.

இதனால் புகைப்பவர்கள் மனத்தாலும் உடலாலும் நிக்கோட்டினில் தங்கியிருக்கும் ஒரு வேண்டாத பழக்கத்துக்கு ஆளாகின்றனர். இந்தப் பழக்கத்தால் இரத்தத்தில் சிறிதளவு நிக்கோட்டின் குறைந்தவுடனேயே அவர்களுக்கு புகைக்க வேண்டும் என்ற ஆவல் ஏற்படுகின்றது. இதன் காரணமாகவே பலர் பணமும் விரயமாகி ஆரோக்கியமும் கெடுகின்றது எனத்தெரிந்தும் புகைத்தலைக் கைவிட முடியாமல் இருக்கின்றனர். ஆனாலும் புகைத்தலை நிறுத்துவது அவசியமானது. புகைத்தலை நிறுத்துவதால் இதயத்தில் வரும் நோய்கள் தடுக்கப்படுகின்றன: புற்றுநோய் வருவதற்கான காரணங்கள் குறைக்கப்படுகின்றன. மூச்சு வாங்கல் இருமல் வாய்மணம் போன்றவை இல்லாமல் போகின்றன. பற்கள் பழுப்பு நிறங்கள் நீங்கி வெண்மையாகின்றன. புகைப்பதை நிறுத்தினால் ஒரு காலகட்டத்தில் உடலும் மனநிலையும் வாழ்நாளில் ஒரு நாளும் புகைக்காதவர்களின் உடல் மனநிலைக்கு வருகின்றது என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

புகையிலை பாவனையால் பலவிதமான நோய்களுக்கு உள்ளாக நேரிடும். அவற்றில் கண்களில் வெள்ளை படருதல், நியூமோனியா, வயிற்று புற்றுநோய், சதையீ புற்றுநோய், சிறுநீரக புற்றுநோய், கழுத்து புற்றுநோய், மூத்திரபையில் கட்டி, நுரையீரல் புற்றுநோய், சுவாசத் தொகுதிப் பாதிப்புக்கள், உணவுக் குழாயில் புற்றுநோய், குரல் வளையின் மேற்பகுதியில் பாதிப்பு, வாய்ப் புற்றுநோய், வாயிலும், தொண்டையிலும், பாதிப்பு, இருமல், சளி, பாரிசவாதம், இருதய அழுத்தம், இதய நோய்கள் போன்றன குறிப்பிடத்தக்கவை.

அத்தோடு புகையிலை பாவனை காரணமாக இனவிருத்தி ஆரோக்கியமும் பெரிதும் பாதிக்கப்படும். குறிப்பாக புகையிலை பாவிக்கும் ஆண்கள் மத்தியில் பாலியல் பலவீனத்தை அதிகரிக்க உதவலாம். அதேநேரம் நிறை குறைந்த குழந்தை பிறப்பும், குறை மாதக் குழந்தை பிறப்பும், கர்ப்பப் பையினுள்ளே சிசு இறந்து பிறப்பதும் புகையிலைப் பாவனையாளர்கள் மத்தியில் அதிகரித்து காணப்படும். இதேவேளை புகைபிடிப்போர் வெளியிடுகின்ற புகையை புகைபிடிக்காதோர் தொடர்ச்சியாக சுவாசிப்பதால் ஆஸ்துமா, இருதய நோய்கள், காச நோய், காதுகளில் தொற்று, சுவாசத் தொகுதி நோய்கள், திடீர் சிசு மரணம் போன்றவாறான பாதிப்புக்களுக்கும் உள்ளாக நேரிடும். அவுஸ்திரேலிய சிட்னி பல்கலைக்கழக மருத்துவக் கல்லூரியினால் மேற்கொள்ளப்பட்ட ஓர் ஆய்வு முடிவின்படி, புகைப் பழக்கமுடையவர்கள் முதுமைப் பருவத்தை அடையும்போது சிலருடைய பார்வை முழுமையாகவே இழக்கப்படுகிறது. மற்றும் சிலருடைய பார்வை குறைந்தவிடுகிறது. தற்போது வெளியாகியிருக்கும் புதிய ஆராய்ச்சி ஒன்று புகையை சுவாசிக்க நேரிடும் குழந்தைகளுக்கு குணாதிசயங்களில் எதிர்மறை விளைவுகள் ஏற்படலாம் என எச்சரித்திருக்கிறது. புகைப்பதை நிறுத்துவதற்கு புகைப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் புகைப்பதை நிறுத்துவதற்கான விருப்பமும் உறுதியும் வேண்டும். இன்றைய விஞ்ஞான உலகில் எந்த சிரமமும் இன்றி ஹிப்னோற்டிக் (Hypnotic) முறைமூலமும் அக்கு பஞ்சர் (Axupuncture) முறை மூலமும் புகைத்தலை நிறுத்த முடியும் எனக் கூறப்படுகிறது. ஆயினும் சிறிது காலத்தின் பின் இச்சிகிச்சை பெற்றவர் பிரச்சினைகள் அல்லது வேறு காரணங்களால் புகைத்தலை மீண்டும் நாடக் கூடும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகிறார்கள். ஆகவே மனதில் உறுதியுடன் ஒருவர் தானே நினைத்துப் புகைப்பதை நிறுத்துவதே 100 வீதமான வெற்றியைத் தரும். படிப்படியாக ஒருவர் புகைப்பதை நிறுத்துவதாகக் கூறி பின் மீண்டும் பழைய நிலைக்கு வரக் கூடிய சாத்தியங்கள் உண்டு.

புகைத்தலுக்கு எதிராக நீண்டகாலமாக அறிவுறுத்தலும் பிரசாரமும் செய்யப்பட்டு வந்தபோதிலும் ஆக்கபூர்வமான பயன் பெரியளவில் ஏற்படவில்லை என்றே கூற வேண்டும். உலக சுகாதார நிறுவனத்தின் அறிவுறுத்தலுக்கமைய அநேகமான நாடுகள் புகை பிடிப்பவர்களை எச்சரிப்பதற்காக சிகரெட் பெட்டிகளில் அபாய எச்சரிக்கை வாசகங்களை அச்சிட்டு வருகின்றன. சில நாடுகளில் புகைத்தலை தடுப்பதற்காக சிறுவர்களுக்கு சிகரெட் விற்பனை செய்ய முடியாது. பொது இடங்களில் புகைத்தல் முடியாது என்றெல்லாம் சட்டமியற்றப்பட்டுள்ளன. அதேநேரம் பொது இடங்களில் புகைபிடித்தால் தண்டப் பணம் செலுத்த வேண்டும் என்றும் விதிக்கப்பட்டுள்ளது. மறுபுறமாக சில நாடுகள் புகைத்தல் தொடர்பான விளம்பரங்களையும் தடை செய்துள்ளன.

இவ்வாறான நடவடிக்கைகள் மூலம் சுகாதாரப் பகுதி புகைப்பாவனையால் வரும் தீங்குகளைப் பிரச்சாரம் செய்யும் அதேவேளை, சிலநாடுகளில் புகையிலையும், மதுபானமும் அரசுக்கு வருமானம் ஈட்டித்தரும் துறைகளாக அமைந்துள்ளன. இந்த முரண் போக்கே இந்நிலை நீடிப்பதற்குக் காரணமாக இருந்தது. குறிப்பாக புகைத்தலின் தீங்குகளைப் பற்றி பிரசாரம் செய்யும் சுகாதாரப் பகுதியினர் அல்லது நிறுவனங்கள் புகைத்தல் தொடர்பான உற்பத்திகளை தடைசெய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளாதிருப்பது வேதனைக்குரியதே. இவற்றால் புகையிலை உற்பத்திகளை தடுக்க முடியாது. ஏனெனில், புகையிலை உற்பத்திகள் மூலமாக பெருமளவுக்கு வருமான வரியை ஈட்டுகின்றன.

1988இல் பின்லாந்தும், 1994இல் பிரான்ஸும் மதுபான, புகைத்தல் விளம்பரங்களைக் கட்டுப்படுத்தின. ஐக்கிய ஐரோப்பா, நியூஸிலாந்து போன்றவையும் நாட்டில் மதுபான, சிகரட் பாவனையைக் குறைக்க நடவடிக் கைகளை மேற்கொண்டுள்ளன. அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளும் இந்நிலையை துரிதப்படுத்துகின்றன. எவ்வாறிருந்தபோதிலும் பாவனையாளர் தாமாகவே உணர்ந்து செயல்படுவதே வெற்றிக்கு வழிவகுக்கும் என்பது மாத்திரமே உண்மை.

# மீன் கொடுப்பதை விட மீன் பிடிப்பதைக் கற்றுக் கொடு

'உன் நண்பன் யாரென்று சொல். நீ யாரென்று சொல்கிறேன்' என்று சொல்வார்கள். அதனால் உங்கள் குழந்தைகள் எப்படிப்பட்ட நண்பர்களுடன் பழகுகிறார்கள் என்பதை கவனித்துக் கொள்ளுங்கள். அவர்கள் போக்கு தவறாக இருந்தால் அவர்களுக்குப் புரியும் வகையில் பக்குவமான முறையில் எடுத்துச் சொல்லுங்கள்.

முக்கியமாக, தம் பிள்ளைகளை மற்றவர்கள் முன்னிலையில் குறை சொல்வதைத் தவிர்க்க வேண்டும். நமது குழந்தைகளை மேதைகளாக ஆக்க முடியாவிட்டாலும், குடிபோதை, போதைமருந்து, புகை, சிகரெட் போன்ற கெட்ட பழக்க வழக்கங்களுக்கு அடிமை ஆகிவிடாதவாறு பெற்றோர் கவனமாக குழந்தைகளை வளர்க்க வேண்டும். பெரும்பாலான வீடுகளில் பிள்ளைகள் பெற்றோர்களிடம் வெளிப்படையாக பேசுவதே இல்லை. பெற்றோர்களும் அவர்களிடம் எதையும் கேட்பதே இல்லை. இதனால் தான் அவர்களுக்குள் அடிக்கடி பிரச்சினைகள் உருவாகின்றன. இந்த வயதில்

**உங்கள் குழந்தைகளுக்கு எந்த துறையில் அதிக ஆர்வம் உள்ளதோ, அந்த துறையில் அவர்கள் திறன் வளர ஊக்கப்படுத்துங்கள்.**

உள்ளவர்களை பெற்றோர்கள் தங்கள் நண்பர்களாக பாவித்து வளர்க்க வேண்டும். அப்போது தான் அவர்களுக்குள் ஒரு சுமுக உறவு ஏற்படும். 'மீன் கொடுப்பதை விட, மீன் பிடிக்கக் கற்றுக் கொடுக்க வேண்டும்' என்



பதைப் புரிந்து கொள்ளுங்கள். உங்கள் குழந்தைகளுக்கு அது போல் எந்த ஒரு விஷயத்தையும் அடிப்படையிலிருந்து தெளிவாக கற்றுக் கொடுங்கள். அவர்களுக்கு [illegible] துறையில் அவர்கள் திறன் வளர ஊக்கப்படுத்துங்கள். படிப்பிலும் சரி, விளையாட்டுக்களிலும் சரி உங்கள் குழந்தைகளுக்கு அவ்வப்போது உற்சாகம் ஊட்டுங்கள். கை கொடுத்துக் கொண்டே இருங்கள்.

தாய் என்பவள் அன்பு காட்டுபவளாக மட்டும் இல்லாமல், அறிவூட்டுபவளாகவும் இருக்க வேண்டும். தொலைக்காட்சி பார்ப்பது, தோழிகளுடன் அரட்டை போன்ற பொழுது போக்குகளை கொஞ்சம் உங்கள் குழந்தைகளுக்காகதியாகம் பண்ணுங்கள். தாய்மையின் பெருமையை உணருங்கள். இயற்கை ஆணைவிட பெண்ணுக்கே அதிக பொறுப்பை கொடுத்திருக்கிறது. குடும்பத்தை பராமரிப்பதுதான் அந்த பொறுப்பு. அதனால்தான் மாதா, பிதா, குரு, தெய்வம் என்று அன்னைக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. 'சொர்க்கம்' எங்கே இருக்கிறது என்று தேடுபவனிடம் 'உன்னைப் பெற்ற தாயின் காலடியில்' என்று சொல்கிறது ஒரு பழமொழி. அதிக தவறுகளைத் தெரிந்தும், தெரியாமலும் செய்து விட்டு, அதற்கான பாவங்களை கழுவ கோவில், குளம் என்று செல்வதில் பயன் ஒன்றுமில்லை. ஒவ்வொருவரும் அவரவர் மனசாட்சிப் படி நேர்மையாக நடந்து கொண்டால் போதும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குரு பெயர்ச்சிப் பலன்கள்

■ [illegible] எம்.பி.ராமன்



## கும்பம்

(அவிட்டம் 3,4 பாதங்கள், சதயம், பூரட்டாதி, 1, 2, 3)

**பொதுப்பலன்**

குருபகவான் 27.5.2013 முதல் சனி பகவானை அதிபதியாகக் கொண்ட உங்கள் கும்பராசிக்கு ஐந்தாம் இடமாக விளங்கும் மிதுனராசியில் சஞ்சரிக்கிறார். ஆகையால் உங்களுக்கு பல நன்மைகளையும், உயர்வுகளையும் கொடுக்கப் போகிறார். யாரிடமும் கைகட்டி வேலை பார்க்க வேண்டாம் என்று ஆசைப் படாத இந்த கும்பராசிக்காரர்கள், முதலாளியாகவும், செல்வந்தர்களாகவும் குறைந்தது இரண்டு பேரை வைத்து வேலை வாங்குபவராக வேனும் இருப்பார்கள்.

அப்போது தான் சந்தித்த நபராக இருந்தாலும் அவர்களின் குணநலன்களை அலசி ஆராய்ந்து சொல்லி விடும் திறமைமிக்கவர்களாக இருப்பார்கள்.

குடும்பத்தை கண்ணும் கருத்துமாகப் பார்த்துக் கொள்வார்கள். மனைவி மற்றும் பிள்ளைகள் எது கேட்டாலும் வாங்கிக் கொடுப்பார்கள். அரசியல், இலக்கியம், கவிஞர்கள், அரச உத்தியோகம் பார்ப்பவர்கள், சுயதொழில் செய்பவராக, பொதுச் சேவையில் ஈடுபாடு கொண்டவர்களாக இருப்பார்கள். எளிதில் ஒரு காரியத்தில் இறங்க மாட்டார்கள். இறங்கினால் அது வெற்றி பெறும் வரை ஓய மாட்டார்கள்

உடல் நலத்தில் அக்கறை எடுத்துக் கொள்ள மாட்டார்கள். எந்த நோய்க்கும் மருத்துவமனைக்கு செல்ல மாட்டார்கள். நண்பர்கள் அதிகமாக இருப்பார்கள். அவர்களுக்கும் சேர்த்து செலவு செய்வதோடு, நண்பர்களின் குடும்பங்களுக்கும் அவ்வப்போது பணம், பொருளுதவி செய்வார்கள். அதிகம் படிப்பில் ஆர்வம் இல்லாவிட்டாலும், உலக விஷயங்களை, நாட்டு நடப்புக்களை தெரிந்து வைத்துக் கொள்வார்கள். தக்க நேரத்தில் அதை வெளிப்படுத்தி மற்றவர்களை அதிசயிக்க வைப்பார்கள். தன்னுடைய பிறந்தநாள், திருமண நாள்கள் மட்டுமல்லாமல் மனைவி மற்றும் பிள்ளைகளின் பிறந்த நாளின் போதும் முதியோர் இல்லங்களுக்கு சென்று இயன்ற அளவு உதவிகளை செய்துவிட்டு வருவார்கள்.

புதிய வீடு வாங்குவார்கள் அல்லது பழைய வீட்டை புதுப்பிப்பார்கள். பூர்வீக சொத்தில் இதுவரை இருந்து வந்த வில்லங்கம் மறைந்து திரும்ப இவர்கள் கைக்கே வந்துசேரும். தொழிலில் இன்னும் முதலீடு செய்வதும், புதிய கிளைகளைத்திறப்பதும் நல்ல ஆதாயம் கிடைக்கும். கொடுக்கல் வாங்கலில் இதுவரை இருந்து வந்த சின்னச் சின்ன குறைகள் இனி காணாமல் போகும்.

பெற்றோர்களின் ஆலோசனையும், அறிவுரையும் இதுவரை கேட்காமல், இந்தக் காதில் வாங்கி அந்த காதில் விட்டுவந்த நிலை நீடிக்காது. இழக்க இருந்த முதலீடு அவர்களின் ஆலோசனையில் காப்பாற்றப்படும் போது அதை உணர்ந்து கொள்வார்கள். பிள்ளைகளின் திருமணத்தை ஊரே பார்த்து ஆச்சரிப்படும் அளவுக்கு பிரம்மாண்டமான செலவில் செய்து வைப்பார்கள்.

உத்தியோகம் பார்ப்பவர்களுக்க எதிர்பார்த்த இடமாற்றம், பதவி உயர்வு ஏற்படும். மேலதிகாரிகளின் நம்பிக்கைக்குரியராக இருப்பதால் இன்னும் பலசலுகைகள் வந்து சேரும். பெற்றோர்களையும் குடும்பத்தினரையும் தெய்வ வழிபாட்டுத் தலங்களுக்கு சுற்றுலா அழைத்துச் சென்று வருவது மனதுக்கு புதுத் தெம்பையும், மன நிறைவையும் ஏற்படுத்தும். பிள்ளைகளின் மேற்படிப்புக்கும், வெளிநாட்டுப் பயணத்துக்கும் ஒதுக்கி வைத்திருந்த தொகைக்கு மேல் செலவாகும்.

குருபாகவன் அருளைப் பெற வியாழக்கிழமைகளில் விரதம் இருந்து, அவருக்குரிய காயத்ரி மந்திரத்தை உச்சரித்து பக்தியுடன் வணங்கி வர வேண்டும். முதலில் விநாயகப் பெருமானையும், பின் குரு பகவானையும், பிறகு உங்கள் ராசிக்கு அதிபதியான சனிபகவானையும்வணங்கவேண்டும்.

**பெண்களுக்கு**

பெண்களின் திறமைகள் வெளிப்படும். அதனால் அனைவரின் பாராட்டுக்களையும், ஆசிகளையும் பெறுவார்கள். அதிகார வர்க்கத்தில் இருக்கும் பெண்கள் சாதித்ததற்கான விருதைப் பெறுவார்கள். அதன் மூலம் தன்னம்பிக்கையும், உழைப்பும் கூடும். பொதுச் சேவைகளில் ஈடுபடுவதன் மூலம் மனநிறைவும், நிம்மதியும் பெறுவார்கள்.

# நன்மைகளையும் உயர்வுகளையும் அள்ளித் தரும் காலம்

**மாணவ-மாணவிகளுக்கு**

கல்வியில் சிறந்து விளங்குவதாலும், புதிய கண்டு பிடிப்புகளை அறிமுகம் செய்வதன் மூலமும் அனைவரின் பாராட்டைப் பெறுவார்கள். குடும்பத்தின் பிரச்சினைகளை பெற்றோர் பார்த்துக் கொள்வார்கள். நீங்கள் தலையிட்டு கவனத்தை சிதைக்க வேண்டாம். கல்விக் கடன் பெறுவதற்கு சிபாரிசுக்காக அலைய வேண்டியிருக்கும். வெளிநாட்டு வேலைக்கான மோகத்தைக் குறைத்துக் கொள்ளவும்.

**27.2.2013 முதல் 9.6.2013 வரை**

இப்போது குருபகவான் மிருக சீரிட நட்சத்திரம், மூன்றாம் பாதம், செவ்வாய் சாரத்தில், சஞ்சரிப்பதாலும் குரு பலம் உள்ளதாலும் நினைத்த காரியங்கள், செயல்கள் அனைத்திலும் வெற்றி கிட்டும். வெளியூர் பயணம் அலைச்சலை உண்டாக்கினாலும் அதற்கேற்ற ஆதாயம் உண்டு. நாலா பக்கத்திலிருந்தும் பணவரவு இருந்து கொண்டிருக்கும்.

தொழிலில் இருந்து வந்த மந்த நிலை விலகி, சுறுசுறுப்படையும். மறைமுகமாக சதிசெய்து கொண்டு தொழிலுக்கு முட்டுக்கட்டை போட்டவர்கள் தானாக விலகிப் போவார்கள். புதிய கிளைகளை தாராளமாகத் தொடங்கலாம். கொடுக்கல் வாங்கலில் பிரச்சினையும் இருக்காது.

**10.6.2013 முதல் 24.6.2013 வரை**

இப்போது குருபகவான் மிருக சீரிட நட்சத்திரம், நான்காம் பாதம், செவ்வாய் சாரத்தில் சஞ்சரிப்பதால் இந்தக் காலக்கட்டத்தில் வியாபாரத்தில் எந்தவித மாற்றமும் இன்றி வழக்கம் போல தொடரும்.

தொழிலாளர்கள் இன்னும் அதிகமாக உழைப்பார்கள். அதற்கேற்ற ஊதியத்துக்காக போராட வேண்டியிருக்கும். சிலர் சங்கத்தின் முக்கியப் பொறுப்புகளுக்கு வருவார்கள். முதலாளியுடனான விரோதப்போக்கு மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. உற்பத்தியில் சுணக்கம் காட்ட வேண்டாம். கணவன், மனைவி உறவு மேலும் மேம்படும். குடும்பத்தில் மகிழ்சியும், உற்சாகமும் ஏற்படும். உறவினர்கள் வருகையால் கலகலப்பு அதிகரிக்கும்.

**25.6.2013 முதல் 8.7.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், முதல் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் என்னென்ன நிகழ்த்தப் போகிறார் என்று பார்ப்போம். பழைய நண்பர்களின் சந்திப்பு நடக்கும். அவரின் மூலம் பல நல்ல செய்திகள் கேட்கப் பெறுவார்கள். பிள்ளைகளின் படிப்பில் அக்கறை காட்டுவீர்கள். அனுசரணையாக குற்றங்களை சுட்டிக்காட்டுங்கள். யார் மீதோ இருக்கும் கோபத்தை அவர்களிடம் காட்ட வேண்டாம். படிப்புக்குத் தேவையான புத்தகங்கள், உபகரணப் பொருள்கள் உடனுக்குடன் வாங்கிக் கொடுங்கள்.

பெற்றோரிடம் அன்பை புரியவையுங்கள். அவர்களுக்கு ஏற்படும் உடல் உபாதைகளுக்கு உதவுங்கள். அவர்களின் ஆசீர்வாதம் பல உயரங்களை தொடச் செய்யும் என்பதை மறந்து விடாதீர்கள்.

**9.7.2013 முதல் 23.7.2013 வரை**

இப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், இரண்டாம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் தொழில் சிறப்பாக இருக்கும். எதிர்பார்த்த அளவுக்கு மேல் வருவாய் வந்து சேரும். தொழிலாளர்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துவீர்கள். பெண்கள் பல்வேறு துறைகளில் சாதிப்பார்கள். அவர்களின் திறமை வெளியுலகத்துக்கு தெரிய வரும். அனைவரின் பாராட்டுக்களைப் பெறுவார்கள்.

**24.7.2013 முதல் 26.8.2013 வரை**

இபப்போது குருபகவான் திருவாதிரை நட்சத்திரம், மூன்றாம் பாதம், ராகு சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக் கட்டத்தில் உத்தியோகம் பார்ப்பவர்கள் மேலதிகாரிகளின் கோபத்துக்கு ஆளாக நேரிடும்.

பெற்றோர்களின் உடல்நிலை நல்ல முன்னேற்றம் காணப்படுவதால் மனதில் நிலவி வந்த சங்கடங்கள் விலகும். மருத்துவ செலவு கணிசமாகக் குறையும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். விளையாட்டு, புதிய ஆராய்ச்சி, கண்டு பிடிப்பு, அதிக மதிப் பெண்கள், ஒழுக்கம், வருகைப் பதிவேட்டில் முதன்மை போன்ற காரணங்களுக்காக பிள்ளைகள் பாராட்டுப் பெறுவார்கள்.

**27.8.2013 முதல் 16.9.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம், தனது சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இதன் மூலம் என்னென்ன நன்மைகள் தீமைகளைச் செய்யப் போகிறார் என்று பார்ப்போம். தொழில் போட்டி காரணமாக ஏற்பட்ட பகையால் தொடரப்பட்ட வழக்கு முடிவுக்கு வராமல் இன்னும் இழுத்தடித்துக் கொண்டே வரும்.

திடீர் பக்திப் பயணம் செல்ல வேண்டிய நிர்பந்தம் ஏற்படும். குடும்பத்துடன் உற்சாகமாக சென்று வருவதால் மனதுக்கு உற்சாகமும், நிறைவும் ஏற்படும். தொழிலாளர்களின் போராட்டங்கள், கோரிக்கைகள் வெற்றி பெறும். குடும்பத்தில் மகிழ்ச்சியும் உற்சாகமும் பெருகும்.

**17.9.2013 முதல் 18.10.2013 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், இரண்டாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் குடும்பத்தில் எப்போதும் போல குறைவில்லாத உற்சாகம், மகிழ்ச்சி தொடரும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு ஏற்பட்ட இன்னல்கள் விலகும்.

மாணவ, மாணவிகள் இன்னும் படிப்பில் கவனத்தை அதிகப்படுத்த வேண்டும். தொலைக்காட்சி, சினிமா, விளையாட்டுபோன்றவற்றில்நேரத்தை செலவிடுவதை குறைத்துக் கொள்ள வேண்டும். தொழில் சுமாராக இருக்கும். மனைவியிடம் ஏற்படும் மோதல் போக்கை சரிசெய்ய முயற்சியுங்கள். பெற்றோரிடமிருந்து நல்ல செய்திகள் வந்து சேரும்.

**19.10.2013முதல் 13.11.2013வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் பிள்ளைகள் உங்கள் பேச்சுக்கு மதிப்பளிக்க மாட்டார்கள். உங்கள் கடன் சுமைகளையும் குறைக்க சிரமப்படுவீர்கள். எதிர்பாராத செலவுகள் வந்து கொண்டே இருக்கும். மனைவி தாய் வழியில் உதவி வந்து சேரும்.

**14.11.2013 முதல் 1.12.2013வரை**

இப்போது குருபகவான் வக்கிர நிலையில் புனர்பூச நட்சத்திரம், மூன்றாம் பாதத்தில், சஞ்சரிக்கிறார். பொலிஸ், இராணுவத்தினர், துப்புரவுத் தொழிலாளர்கள், ஆசிரியர்கள், ஒப்பந்தத் தொழிலாளர்களுக்கு அரசின் சலுகைகள் கிடைக்கப் பெறுவார்கள். பிள்ளைகளின் கல்வித்தரம் உயரும். புது வீடு கட்டிக் குடியேறுதல், பழைய வீட்டை புதுப்பித்தல் போன்ற வேலைகளில் ஈடுபடுவார்கள். கொடுக்கல் வாங்கலில் வாக்குறுதியை நிறைவேற்ற முடியாது. வெளியூர் பயணம் அலைச்சலையும் உடல் சோர்வையும் ஏற்படுத்தும்.

**2.12.2013 முதல் 2.1.2014 வரை**

இப்போது குருபகவான் தன் வக்கிர நிலையிலேயே புனர்பூச நட்சத்திரம் இரண்டாம் பாதத்தில் சஞ்சரிக்கிறார். தொழிலாளர்களுக்கு உழைப்பு கடுமையாக இருக்கும். அதனால் உடல்சோர்வு, கைகால் மூட்டு வலிகளுக்கு ஆளாவார்கள்.

உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு மேலதிகாரியின் கருணைப் பார்வை பட்டு, ஊதிய உயர்வு, போனஸ், கேட்ட இடத்தில் இடமாற்றம் போன்றவற்றை பெறுவார்கள். பெற்றோர்களின் உடல்நிலை பாதிப்படையும். சுவாசக் கோளாறு, அஜீரணம், தலைவலி, கண்பார்வை மங்குதல் போன்ற உபாதைகளுக்கு ஆளாவார்கள். தாமதிக்காமல் மருத்துவரிடம் அழைத்துச் செல்லுங்கள்.

**3.1.2014 முதல் 26.1.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், முதலாம் பாதம் தொடர்ந்து வக்கிர நிலையிலேயே சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் வீண் மனக்குழப்பம், பயம், நடுக்கம் ஏற்படும். தொழில் அதிக ஈடுபாடு காட்ட மாட்டார்கள். எதன் மீதும் பிடிப்பு இருக்காது. அதிக நேரம் ஓய்விலேயே கழிப்பார்கள். வீட்டில் ஏற்படும் சுப நிகழ்ச்சிகளுக்காக கடனுக்கு மேல் கடன் வாங்க வேண்டியிருக்கும். கலைஞர்களுக்கு நல்ல எதிர்காலம் காத்திருக்கிறது. வருவதை ஆடம்பரமாக செலவு செய்யாமல் சேமித்து வைப்பது நல்லது. குடும்பத்தில் எதிர்பார்க்கும் அளவுக்கு மகிழ்ச்சி ஏற்படாது.

**27.1.2014 முதல் 11.3.2014 வரை**

இப்போது குருபகவான் வக்கிர நிவர்த்தி பெற்ற நிலையில் திருவாதிரை நட்சத்திரம், நான்காம் பாதத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக்காலக்கட்டத்தில் வெளியூர் செல்லும்போது வீட்டிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருள்களை பாதுகாப்பு செய்து விட்டு செல்லவும்.

தொழிலில் போட்டி அதிகமாக இருந்தாலும், உங்களுக்கான வருமானம் இருந்து கொண்டே இருக்கும். குடும்பத்தில் வழக்கம் போல் உற்சாகம் இருக்கும். பெற்றோரிடம் ஆலோசனை, ஆசிகள் வாங்கத் தவற வேண்டாம்.

**12.3.2014 முதல் 6.5.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம்முதலாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் மேலதிகாரிகள் உங்களின் உயர்பதவி பற்றி ஆலோசனை செய்வார்கள். அயராத உழைப்பும் நேர்மையும் துணை நிற்கப் போகிறது.

பெண்களின் சாதனைகளை உலகம் அறிந்து கொள்ளும் நேரமிது. விளையாட்டு, கலைப்பொருள்கள், கட்டடக்கலை, விஞ்ஞானம், ஆராய்ச்சி, உத்தரவிடும் பதவிகளிலும் ஜொலிப்பார்கள். குடும்பத்தில் ஏற்படும் மகிழ்ச்சிக்கு காரணமாவார்கள்.

தொழிலில் ஏற்பட்ட நஷ்டம் கொஞ்சம் கொஞ்சமாக சீர்படும். கெட்ட நண்பர்களைக் கண்டு கொண்டு அவர்களிடமிருந்து விலகுங்கள்.

**7.5.2014 முதல் 25.5.2014 வரை**

இப்போது குருபகவான் புனர்பூச நட்சத்திரம், இரண்டாம் பாதம், சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். மாணவ, மாணவிகள் மனப்பாடம் செய்வதில் குழப்பம் ஏற்படும். ஞாபகத்தில் வைத்தது மறந்து போகும். மனதை ஒரு முகப்படுத்த யோகா, தியானம் போன்றவற்றில் ஈடுபாடு காட்டுங்கள். குடும்பத்தில் உண்டாகும் சண்டை சச்சரவுகளுக்கு செவி கொடுக்காதீர்கள்.

தொழிலாளர்களில் யாரோ செய்த குற்றத்துக்காக நிர்வாகத்தின் கேள்விகளுக்கு நீங்கள் பதில் சொல்ல வேண்டியிருக்கும்.

**26.5.2014 முதல் 11.6.2014 வரை**

இப்போது குருபகவான் புனர் பூச நட்சத்திரம், மூன்றாம் பாதத்தில், தனது சொந்த சாரத்தில் சஞ்சரிக்கிறார். இந்தக் காலக்கட்டத்தில் நினைத்த காரியங்கள் நிறைவுடன் நடந்தேறும். கடன் தொல்லையிலிருந்து விடுபடுவீர்கள். எதிர்பார்த்த துறையில் பிள்ளைகள் பணியில் அமர்வார்கள். கூட்டுத்தொழில் நன்கு கைகொடுக்கும்.

வெளிநாட்டிலிருந்து புதிய தொழிலுக்கான முதலீடு வந்து சேரும். மற்ற போட்டியாளர்கள் வியந்து போகும் அளவுக்கு உங்களின் வளர்ச்சி அபரிமிதமாக இருக்கும். தொழிலாளர்களிடம் அனுசரணையாக நடந்து கொள்ளுங்கள். வீடு, நிலம் வாங்குவீர்கள். குடும்பத்தினருக்குத் தேவையான பொன்னாபரணம், ஆடை அணிமணிகள், வாகனம் போன்றவற்றை வாங்குவீர்கள்.

*(வளரும்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை வரத் தயங்கும் இந்திய சுற்றுலாப் பயணிகள்

கொழும்பு,மே 31
தமிழ்நாட்டில் இலங்கைக்கு எதிரான பரப்புரைகளின் காரணமாக இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகை இலங்கையில் வீழ்ச்சியடைந்துள்ளது.
இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை வெளியிட்டுள்ள பிந்திய புள்ளிவிவரங்களில் இருந்தே இது தெரியவந்துள்ளது.
கடந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களுடன் ஒப்பிடும்போது, இந்த ஆண்டின் முதல் நான்கு மாதங்களிலும் இந்திய சுற்றுலாப் பயணிகளின் வருகை 5.2 வீதத்தால் குறைவடைந்துள்ளது.
அதுபோன்று கனேடிய சுற்றுலாப் பயணிகளின் வருகையும் 1.3 வீதத்தால் குறைந்துள்ளது.
எனினும் இந்தக் காலப்பகுதியில் வடஅமெரிக்கா, மேற்கு ஐரோப்பா, கிழக்கு ஐரோப்பா, மத்திய கிழக்கு, தென்னாசிய நாடுகளில் இருந்து வரும் சுற்றுலாப் பயணிகளின் தொகை அதிகரித்துள்ளது.
கடந்த மாதத்தில் இலங்கைக்கு 79,829 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர். கடந்த நான்கு மாதங்களில் இலங்கை வந்த சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 368,627 என்பது குறிப்பிடத்தக்கது. (ச)



சேனையூர் நாகம்மாள் ஆலய வருடாந்த வைகாசிப் பொங்கல் விழா கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றபோது பக்தர்கள் தமது நேர்த்திக் கடனை நிறைவேற்றியபோது.... (40)

## கொள்ளையிட்ட ஒருவர் மாட்டினார்



கொழும்பு,மே 31
நபரொருவரைத் தாக்கிவிட்டு அவரிடம் இருந்த பணம் மற்றும் பொருள்களை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் தொடர்பில் ஒருவர் புத்தளம் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
கைது செய்யப்பட்டுள்ள சந்தேகநபர், புத்தளம் நாயக்காரவென பிரதேசத்தை சேர்ந்தவர் என்று தெரியவந்துள்ளது.
இந்த சம்பவம் குறித்த மேலுமொருவரை கைதுசெய்ய பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## தேங்காய் அளவு சிறிதாகியது

### லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிலையம் தகவல்



கொழும்பு,மே 31
தேங்காய்கள் சிறிய அளவினதாகக் காணப்படுகின்றமையால், தேங்காய் சார்ந்த உற்பத்திகளுக்கு இரண்டு மடங்கு தேங்காயைப் பயன்படுத்த வேண்டியுள்ளது என்று லுணுவில தெங்கு ஆராய்ச்சி நிலையம் குறிப்பிட்டுள்ளது.
கடந்தவருடம்நிலவியவறட்சிகாரணமாகதேங்காய்களின்அளவு சிறிதாகியுள்ளது என்று நிலையத்தின் பணிப்பாளர் ஜயந்த குணதிலக்க தெரிவித்தார்.
இந்த வருடம் வறட்சியால் 300 மில்லியன் தேங்காய்கள் குறைந்துள்ளன என்று அவர் சுட்டிக்காட்டினார். இந்த வருடம் 28,00 மில்லியன் தேங்காய்கள் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்பட்டது என்று தெங்கு ஆராய்ச்சி நிலையம் குறிப்பிட்டது.
கடந்த வருடம் நிலவிய வறட்சியால், தற்போது கிடைக்கும் 50 வீதமான தேங்காய்களின் அளவு சிறிதாகக் காணப்படுகிறது என்று நிலையத்தின் பணிப்பாளர் தெரிவித்தார்.
மழையுடனான காலநிலை தொடரும் பட்சத்தில் இதனால் ஏற்படும் பாதிப்புக்கள் குறையும் என்று அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# கிழக்கு ஆட்சியில் வலுக்கிறது முரண்

### முதல்வர் நிறுத்திய நிகழ்வை தொடக்கி வைத்தார் ஹக்கீம்

கொழும்பு,மே 31
கிழக்கு மாகாண சபை ஆட்சி அதிகாரத்தில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.
ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பே கிழக்கு மாகாண சபையில் ஆட்சி நடத்துகிறது.
கூட்டணி கட்சிகளுக்குள் நிலவரும் முரண்பாடே தற்போதைய குழப்ப நிலைமைக்குக் காரணம் என்று தெரிவிக்கப்படுகிறது.
கிழக்கு மாகாண முதலமைச்சருக்கும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்புடனே, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கிழக்கு மாகாணசபையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியது.**

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் கட்டுப்பாட்டில் உள்ள கல்முனை நகரசபைக்கு உட்பட்ட பிரதேசத்தில் அமைக்கப்பட்ட நூலக தொடக்க விழா தொடர்பில் இந்த முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.
குறித்த நூலகத்தின் தொடக்க விழாவை முதலமைச்சர் மஜீத் தடுத்து நிறுத்தியதாக முஸ்லிம் காங்கிரஸ் குற்றம் சுமத்தியுள்ளது.
தடை செய்யப்பட்ட மறுநாளே நீதிஅமைச்சரும், கட்சியின் தலைவருமான ரவூப் ஹக்கீம் குறித்த நூலகத்தை தொடக்கி வைத்தார்.
இதனால் இரு தரப்பினருக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டுள்ளது.
ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஒத்துழைப்புடனே, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு கிழக்கு மாகாண சபையில் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றியிருக்கிறது. (ச)

## சப்புகஸ்கந்த எரிபொருள் நிலைத்தை சவூதிக்கு விற்க இரகசிய நடவடிக்கை

### ஐக்கிய தேசிய கட்சி குற்றச்சாட்டு



கொழும்பு.மே 31
சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை சவூதி அரேபிய நிறுவனமொன்றுக்கு விற்பனை செய்வதற்கு இரகசியமான முறையில் அரசு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது என்று ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.
அரசு கொள்வனவு செய்த எண்ணெய்க் கப்பல் காணாமல் போன விவகாரத்தினூடாக இது அம்பலமானதுடன், அமைச்சரவையையும் தீப்பற்ற வைத்துள்ளது என்று தெரிவித்துள்ளது.
ஈரானிடமிருந்து எண்ணெய் கொள்வனவு செய்த விவகாரம் குறித்து அமெரிக்கத் தூதரக உயரதிகாரிகள் அரச உயரதிகாரிகளிடம் கேள்வி எழுப்பியுள்ளனர் என்று தெரிவித்த கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, கொழும்புத் துறைமுகத்தை மூடி அதன் நடவடிக்கைகளை அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு கொண்டுசெல்லவும் அரசு நடவடிக்கை எடுக்கிறது என்றும் தெரிவித்தார்.
கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:
ஈரானிடமிருந்து அரசு கொள்வனவு செய்த எண்ணெய்க் கப்பல் காணாமல்போன விவகாரம் குறித்து அண்மையில் நான் கூறியிருந்தேன். அதனால் அமைச்சரவை தீப்பற்றிக் கொண்டுள்ளது. கடந்த வாரம் இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் இது தொடர்பில் பெரும் சர்ச்சை ஏற்பட்டுள்ளது.
சப்புகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை மூடுவதற்காகவே அரசு கொள்வனவு செய்த எண்ணெய்க் கப்பல் காணாமல் போயுள்ளதாகக் கூறப்படுகிறது. ஆனால், இந்த எரிபொருள் சுத்திகரிப்பு நிலையத்தை சவூதி அரேபியாவின் எரம்கோ என்ற நிறுவனத்துக்கு விற்பதே அரசின் உள் [illegible] மாக ஈடுபட்டுவருகின்றது. - என்றார். (ச-ரி)

## உரமானியம் வழங்கவில்லை விவசாயிகள் திண்டாட்டம்



அம்பாறை.மே 31
இந்த முறை மஹிந்த சிந்தனையில் வழங்கப்படுகின்ற உரமானியம் இன்னும் உரிய காலப்பகுதியில் கிடைக்கப்பெறாததால் விவசாயிகள் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.
பணம் செலுத்தி இரண்டு மாதங்களாகியும் யூரியா, டி.எஸ்.பி ஆகிய பசளைகள் இன்னும் கிடைக்கப் பெறாததனாலும், நிர்ணயிக்கப்பட்ட விலை [illegible] விலை [illegible] பெறுவதனாலும் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று அம்பாறை மாவட்ட மக்கள் விடுதலை முன்னணியின் அமைப்பாளர் எம்.ஏ அபூசஹீட் தெரிவித்தார்.
அக்கரைப்பற்று மேற்கு, அக்கரைப்பற்று கிழக்கு போன்ற விவசாயப் பிரதேசங்களில் இன்னும் உரமானியம் கிடைக்கவில்லை என்று அவர் கூறினார்.
இதுகுறித்து பலதடவைகள் வேண்டுகோள் விடுத்தும் கமநலசேவை அதிகாரிகள் எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச)

## கடலில் குதித்த பெண்ணை மீட்டனர் மீனவர்கள்

மட்டக்களப்பு,மே 31
காத்தான்குடி கடலில் குதித்த பெண்ணொருவர் உயிருடன் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் செவ்வாய்க்கிழமை காலை இடம்பெற்றுள்ளது.
காத்தான்குடியை சேர்ந்த பெண்ணே இவ்வாறு கடலில் குதித்துள்ளார்.
அவர் கடலில் குதிப்பதை கண்ட மீனவர்கள் அவரை உயிருடன் மீட்டு காத்தான்குடி வைத்தியசாலையில் சேர்த்துள்ளனர்.
இந்தப் பெண் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

# இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?

**மேடார்:** பணம் தேவையான அளவு இருக்கும். நண்பர்களின் ஒத்துழைப்பால் சில காரியங்களை முடிப்பீர்கள். எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும்.

**இடபர்:** பணப்பற்றாக்குறை நீங்கும். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். தாய்வழி உறவினர்களின் ஆதரவு கிடைக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரி ஒத்துழைப்பார்.

**மிதுனர்:** செலவுகளைக் குறைக்க முடியாமல் திணறுவீர்கள். அவசரப்பட்டு அடுத்தவர்களை விமர்சிக்க வேண்டாம். நயமாகப் பேசுபவர் களை நம்பாதீர்கள். உத்தியோகத்தில் அதிகாரிகளால் அலைக்கழிக்கப்படுவீர்கள்.

**கடகர்:** நீண்ட நாளாக தள்ளிப் போன காரியங்கள் இன்று முடியும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும். பேச்சில் முதிர்ச்சி தெரியும். மனக்குழப்பங்கள் விலகும்.

**சிங்கர்:** எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். தெளிவான முடிவுகளால் தொல்லைகள் நீங்கும். பேச்சால் தடைப்பட்ட காரியங்களை முடிப்பீர்கள். இளவயது நண்பர்களைச் சந்திப்பீர்கள்.

**கன்னி:** திறமைகளை வெளிப்படுத்த நல்ல சந்தர்ப்பங்கள் அமையும். நட்பு வட்டாரம் விரிவடையும். குடும்பத்தினரின் எண்ணங்களைக் கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும்.

**நாளை**

வைகாசி-18 சனிக்கிழமை 01.06.2013
திதி: அட்டமி மா.05.49 வரை
நட்சத்திரம்: சதயம் பி.ப. 12.22 வரை
சுபநேரம்: 02.52 - 04.22 வரை
இராகுகாலம்: 08.52 - 10.22 வரை

**துலார்:** உடன்பிறந்தவர்களின் நீண்டநாள் ஆசைகளை நிறைவேற்றுவீர்கள். வெளிவட்டாரத் தொடர்பு அதிகரிக்கும். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். அரசியல்வாதிகளின் சந்திப்பு நிகழும்.

**விருச்சிகர்:** வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். ஆன்மிகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு. எதிர்பார்த்தபடி உதவிகள் கிடைக்கும்.

**தனுசு:** முடியாமல் போன சில காரியங்களை இன்று முடிப்பீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிட்டும். பழைய நண்பர்களின் சந்திப்பு நிகழும். பேச்சில் கம்பீரம் பிறக்கும்.

**மகரர்:** அதிக வேலைகளை இழுத்துப் போட்டு பார்க்க வேண்டி வரும். அடுத்தவர்கள் மனம் காயப்படும் படி பேசாதீர்கள். யாரை நம்புவது என்கிற குழப்பத்திற்கு ஆளாவீர்கள். உத்தியோகத்தில் மறதியால் பிரச்சினைகள் ஏற்படும்.

**கும்பர்:** விடாப்பிடியாகச் செயற்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். உறவினர்கள், நண்பர்களுடன் மனஸ்தாபங்கள் வந்து நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியுடன் விவாதம் வந்து நீங்கும்.

**மீனர்:** உங்களின் வெளிப்படையான பேச்சை அனைவரும் ரசிப்பார்கள். ஆன்மீகத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியிடம் அனுசரித்துப் போவீர்கள். புதிய எண்ணங்கள் மனதில் தோன்றும்.

# சுடோக்கு

### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 7 | | | | 3 | | | 8 |
| | | | | | | | 3 | 5 |
| | 6 | | | | | 4 | 2 | 7 |
| | 4 | 9 | 8 | | 5 | 7 | 1 | |
| | | | 6 | | 1 | | | |
| | 5 | 6 | 4 | | 2 | 8 | 9 | |
| 8 | 2 | 4 | | | | | 7 | |
| 5 | 3 | | | | | | | |
| 6 | | | 7 | | | | 4 | |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 7 | 2 | 5 | 4 | 3 | 1 | 6 | 8 |
| 4 | 1 | 8 | 2 | 6 | 7 | 9 | 3 | 5 |
| 3 | 6 | 5 | 1 | 8 | 9 | 4 | 2 | 7 |
| 2 | 4 | 9 | 8 | 3 | 5 | 7 | 1 | 6 |
| 7 | 8 | 3 | 6 | 9 | 1 | 2 | 5 | 4 |
| 1 | 5 | 6 | 4 | 7 | 2 | 8 | 9 | 3 |
| 8 | 2 | 4 | 3 | 1 | 6 | 5 | 7 | 9 |
| 5 | 3 | 7 | 9 | 2 | 4 | 6 | 8 | 1 |
| 6 | 7 | 1 | 7 | 5 | 8 | 3 | 4 | 2 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1 - 9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1 - 9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளேயும் அவ்வாறே 1 - 9 இலக்கங்கள் இரட்டிப்பாகாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# ரொக்கட் தொழில்நுட்பத்தில் செயற்கை இதயம் உருவாக்கம்



சீன மருத்துவர்கள் ரொக்கெட் தொழில்நுட்பத்தின் அடிப்படையில் இயங்கும் செயற்கை இதயத்தை உருவாக்கியுள்ளனர்.

டியான்ஜின் டொ இன்டர்நேஷனல் கார்டியாவாஸ்குலார் (Tianjin TEDA International Cardiovascular) மருத்துவமனை மருத்துவர்கள் இந்த செயற்கை இதயத்தை உருவாக்கியுள்ளனர்.

இந்த செயற்கை இதயம் செம்மறியாடு ஒன்றுக்கு 2 மாதங்களுக்கு முன்பு பொருத்தப்பட்ட நிலையில் அந்த ஆடு 62 நாள்களாக நல்ல ஆரோக்கியத்துடன் உள்ளது. இதனால் மற்ற கண்டுபிடிப்புகளுடன் ஒப்பிடுகையில் இந்த செயற்கை இதயம் சிறப்பான இடத்தைப் பிடித்துள்ளது.

இந்த செயற்கை இதயம் சிறியதாகவும், எடை குறைந்ததாகவும், அதிக பாதுகாப்புடனும் உருவாக்கப்பட்டுள்ளதாக மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

# மார்பகப் புற்றுநோயை அறிந்து கொள்ளும் அதிநவீன கருவி

பெண்களுக்கு ஏற்படும் மார்பகப் புற்று நோயை துல்லியமாக கண்டுபிடிக்கும் அதிநவீன 'அமுலெட்' கருவி இந்தியாவிலேயே முதன் முதலாக டில்லியில் செயற்பாட்டுக்கு வந்தது. கதிரியக்கத்தின் வாயிலாகக் கண்டுபிடிக்க முடியாத உள்ளார்ந்த புற்றின் வளர்ச்சியைக் கூட இந்த அமுலெட் கருவி வெகு துல்லியமாகக் கண்டுபிடித்து விடும்.

இந்தியாவில் சராசரியாக ஒரு லட்சம் பெண்களில் 30 பெண்கள் மார்பகப் புற்றுநோய் தாக்கத்தால் பாதிக்கப்படும் இன்றைய காலகட்டத்தில் இந்த நவீன கருவி மிகப்பெரிய வரப்பிரசாதமாகக் கருதப்படுகிறது.

50 மைக்ரான் அளவு கொண்ட துல்லியமான காட்சி தெளிவுடன் இந்தக் கருவி மார்பக புற்றுநோயை பரிசோதித்து தகவல் அளிக்கும்.

'பியூசி' நிறுவனம் தயாரித்துள்ள இந்த நவீன கருவியில் ஒருமுறை சோதனை செய்து கொள்ள ரூ.3 ஆயிரம் கட்டணம் வசூலிக்கப்படும்.


இந்த கருவியை புதுடில்லியில் நடைபெற்ற விழாவில் ஆரம்பித்து வைத்த நாடாளுமன்ற எதிர்கட்சித் தலைவர் சுஷ்மா சுவராஜ், ''பெருகி வரும் மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு எல்லா பெண்களுக்கும் ஏற்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புற்று நோயைக் கண்டுபிடிக்கவும், அதை எதிர்த்துப் போராடவும் எல்லா பெண்களும் இந்த நவீன பரிசோதனை செய்துக்கொள்ள வேண்டும்'' என்று கூறினார்.

# Outlook.com

## தரும் புத்தம் புதிய வசதி



மைக்ரோசொப்ட் நிறுவனத்தால் அண்மையில் அறிமுகப்படுத்தப்பட்ட மின்னஞ்சல் சேவையை வழங்கும் Outlook.com தளமானது தற்போது மேம்படுத்தப்பட்டுள்ளது.

இதன் அடிப்படையில் கூகுளின் ஜிமெயில் மின்னஞ்சல் கணக்குகளை பயன்படுத்துபவர்களுடன் நேரடியாகவே Outlook.com பயனர்களூடாக சட்டிங் செய்யக்கூடிய வசதி புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.

ஜிமெயில் சேவைக்கு போட்டியாக உருவாக்கப்பட்ட Outlook.com மின்னஞ்சல் சேவையில் எதிர்பாராத விதமாக தரப்பட்டுள்ள இப்புதிய வசதியானது தொழில்நுட்ப உலகில் ஆரோக்கியமான மாற்றம் எனவும், பயனர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெறும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

**கூகுளின் ஜிமெயில் மின்னஞ்சல் கணக்குகளை பயன்படுத்துபவர்களுடன் நேரடியாகவே Outlook.com பயனர்கள் சட்டிங் செய்யக்கூடிய வசதி புதிதாக உள்ளடக்கப்பட்டுள்ளது.**

## தரமற்ற பொருள்களால் முன்பள்ளிக் கட்டடம்

அக்கராயன், மே 31

துணுக்காய் பழைய முறிகண்டி கிராமத்தில் அமைக்கப்பட்டுவரும் முன்பள்ளிக் கட்டடத்தின் வேலைகள் தரமற்ற கட்டடப் பொருள்களைக் கொண்டு மேற்கொள்ளப்படுவதாக கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்தக் கட்டடத்துக்கு தரமில்லாத மரம், தடிகள் என்பன பயன்படுத்தப்படுவதன் காரணமாக எந்த நேரமும் இந்த முன்பள்ளி இடிந்து விழும் நிலை ஏற்படும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்தக் கட்டட வேலைகளைப் பார்வையிட்ட துணுக்காய் வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஒருவரும் தரமற்ற கட்டடப்பொருள்கள் பயன்படுத்தப்படுவதாகத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை பழைய முறிகண்டியில் தினமும் ஒரு தடவை மணலை ஏற்றுவதற்கு அனுமதிபெறும் உழவுஇயந்திர உரிமையாளர்கள் அனுமதிக்கப்பட்டதை விட அதிகளவு மணலைக் களவாக ஏற்றுவதாகவும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

(க-18)

## முள்ளியவளை ஹிஜ்ராபுரத்தில் பாடசாலையை அமைக்க கோரிக்கை

முள்ளியவளை, மே 31

முள்ளியவளை ஹிஜ்ராபுரம் பகுதியில் பாடசாலை ஒன்றை அமைக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

முள்ளியவளை, ஹிஜ்ராபுரம் பகுதியில் தற்போது 745 இற்கும் மேற்பட்ட குடும்பங்கள் மீளக்குடியமர்ந்துள்ளன. இங்குள்ள பாடசாலை செல்லும் மாணவர்கள் வேறு இடங்களில் அமைந்துள்ள பாடசாலைகளுக்குச் செல்ல வேண்டிய நிலை தற்போது காணப்படுகின்றது. இதனால் பல்வேறு சிரமங்களை இந்த மாணவர்கள் எதிர்கொள்கின்றனர்.

எனவே இந்தக் கிராமத்தில் பாடசாலை ஒன்றை அமைக்குமாறு இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்தக் கோரிக்கை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர், மாவட்ட அரச அதிபர், பிரதேச செயலாளர் ஆகியோரிடம் விடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வலயக் கல்வி அலுவலகத்தினர் கருத்துத் தெரிவிக்கையில்;

கிராமமட்ட அமைப்புக்கள் மற்றும் தொடர்புடைய அதிகாரிகளின் ஊடாக இந்தக் கோரிக்கை அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில் மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுமதியைப் பெற்று குறித்த பகுதியில் பாடசாலையொன்றை அமைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (க-6)

## போக்குவரத்துச் சிரமங்களுக்குள் துணுக்காய் பிரதேச மக்கள்

அக்கராயன்,மே 31

துணுக்காய் பிரதேச செயலர் பிரிவின் கீழ்வரும் கிராம மக்கள் தொடர்ந்து போக்குவரத்துச் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

மீள்குடியமர்வு இடம்பெற்று 4 ஆண்டுகளை நெருங்கும் நிலையிலும் இந்தக் கிராம மக்கள் பெரும் போக்குவரத்து இடர்களை எதிர்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த ஜனவரியிலிருந்து அரச மற்றும் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபடுமெனத் தெரிவிக்கப்பட்ட போதிலும் இதுவரை அது நடைமுறைப்படுத்தப்படாத நிலையே காணப்படுகின்றது.

இது தொடர்பாக துணுக்காய் பிரதேச செயலரிடம் கேட்ட போது; துணுக்காய் பிரதேச செயலர் பிரிவில் நிலவும் போக்குவரத்து நெருக்கடியைத் தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவித்தார். (க-18)

## வீதிப் புனரமைப்பு இல்லையேல் குழிகளையாவது மூடி விடவும்

### ஒட்டுசுட்டான் மக்கள் உருக்கமான வேண்டுகோள்

முல்லைத்தீவு, மே 31



ஒட்டுசுட்டான்– புதுக்குடியிருப்பு வீதியிலுள்ள குழிகளையாவது மூடி விடுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் உருக்கமான வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

தற்போது இந்த வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதால் இதில் பயணத்தை மேற்கொள்பவர்கள் சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

பாடசாலை மாணவர்கள் உட்பட பலர் தினமும் இந்த வீதியிலுள்ள குழிகளில் விழுந்து எழுவதைக் காண முடிகின்றது.

மேலும் வாகனங்கள் விலத்திச் செல்ல முடியாத அவல நிலையும் காணப்படுகின்றது.

மேலும் இந்த வீதியின் மோசமான நிலை காரணமாக வாகனங்கள் வீதியோரமாகப் பயணிப்பதால் விபத்துக்கள் ஏற்படக் கூடிய சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.

எனவே இந்த வீதியைப் புனரமைக்க முடியாது விட்டாலும் அதில் காணப்படுகின்ற குழிகளையாவது மூடிவிடுமாறு மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-500)

## அடிப்படை வசதிகள் கிடைக்காத ஆசிக்குளம் அ.த.க. பாடசாலை

அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில் வவுனியா ஆசிக்குளம் அ.த.க. பாடசாலை இயங்கி வருவது தொடர்பாக மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவித்துள்ளனர்.

இந்தப் பாடசாலைக்கு அருகிலுள்ள சில பாடசாலைகளுக்கு அரசின் உதவியுடன் அடிப்படை வசதிகள் கிடைத்து சிறப்பாக இயங்கி வருகின்றன.

ஆனால் இந்தப் பாடசாலை மாணவர்களுக்கு கணினி வசதிகள், ஆய்வுகூட வசதி, உட்பட எந்தவிதமான வசதிகளும் அரசினால் ஏற்படுத்தி கொடுக்கப்படவில்லை. இதனால் மாணவர்கள் தமது கற்றல் செயற்பாடுகளில் பின்தங்கிய நிலையில் உள்ளதாகவும் பெற்றோர் விசனம் தெரிவிக்கின்றனர்.

பொருளாதார ரீதியில் அடிமட்ட நிலையில் வாழ்ந்து வரும் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் தமது பிள்ளைகளுக்கு அப்பியாச கொப்பிகளைக் கூட வாங்கிக் கொடுக்க முடியாத நிலையில் உள்ளனர். இதனால் இந்தப் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சிக்கு உதவுமாறு அரச, அரச சார்பற்ற நிறுவனங்களிடம் பாடசாலை சமூகம் கோரிக்கை விடுத்துள்ளது.

மேலும் உரிய வசதிகளைப் பாடசாலைக்கும், மாணவர்களுக்கும் வழங்கும் போது பாடசாலையை விட்டு இடைவிலகியுள்ள மாணவர்கள் பலரை மீண்டும் பாடசாலையில் இணைத்துக்கொள்ள முடியும் எனவும் பாடசாலைச் சமூகத்தினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

## நானாட்டான் ம.வியில் சின்னம் சூட்டும் விழா

மன்னார்,மே 31

நானாட்டான் மகாவித்தியாலயத்தின் புதிய மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் இடம்பெற்றது.

அதே தினம் பழைய மாணவ தலைவர்களுக்கு பாராட்டு விழா, புதிய உயர்தர வகுப்புக்களின் ஆரம்பம், ஆசிரியர்களின் பாதுகாவலரும் டிலாசால் அருட் சகோதரர்களின் ஸ்தாபகரும் ஆகிய புனித ஜோன் பப்ரிஸ்ட் டிலாசால் அவர்களுக்கான விழா என்பன பாடசாலையில் இடம்பெற்றன.

இந்த நிகழ்வுக்கு இலங்கை டிலாசால் அருட் சகோதரர்களின் தலைவர் அருட் சகோதரர் டென்சில் பெரேரா, முருங்கன் வைத்திய அதிகாரி சாள்ஸ் ஒஸ்மன் ஆகியோர் முக்கிய விருந்தினர்களாக அழைக்கப்பட்டிருந்தனர்.

மேலும் இந்த நிகழ்வில் சமயத் தலைவர்கள், மாணவத் தலைவர்களின் பெற்றோர்கள், பாடசாலை அபிவிருத்தி சங்க மேம்பாட்டுக்குழுவினர், பழைய மாணவர் சங்கப் பிரதிநிதிகள், ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர். (க-12)

## திரும்ப ஒப்படைக்கப்பட்டது சனசமூக நிலையக் காணி

முல்லைத்தீவு, மே 31

இது வரை தமது பொறுப்பில் இருந்து வந்த விசுவமடு சனசமூக நிலையத்துக்குரிய காணியை விவசாயிகள் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் கையளித்துள்ளனர்.

புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட விசுவமடு மத்தி சனசமூக நிலையத்துக்குரிய காணி விசுவமடு விவசாயிகள் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் பாவனையில் இது வரை இருந்துள்ளது.

தமது நிலையத்துக்குரிய காணியைப் பெற்றுத் தருமாறு விசுவமடு மத்தி சனசமூக நிலைய நிர்வாகத்தினர் மாவட்ட அரச அதிபர், புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் ஆகியோரிடம் மனுக்களைக் கையளித்திருந்தனர்.

இதனைத் தொடர்ந்து குறித்த காணி பல நோக்கு கூட்டுறவுச் சங்க நிர்வாகத்திடம் இருந்து பெறப்பட்டு சனசமூக நிலையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. இந்தக் காணியில் நிலையத்தை இயக்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அதன் நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

(க-6)




நானாட்டான் மகாவித்தியாலயத்தின் புதிய மாணவத் தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் விழா அண்மையில் இடம்பெற்றபோது... (க-12)

## தமிழர் காணிகளைச் சுவீகரிக்க இராணுவம் நிலை கொள்ளவில்லை

### இப்படிக் கூறுகிறார் அமைச்சர் பஸில்

புதுக்குடியிருப்பு, மே 31

'' மக்களை பாதுகாப்பதற்கும் அவர்கள் எதிர்காலத்தில் சுபீட்சமாக வாழ்வதற்கும் வழிகாட்டுவதற்காகவே இராணுவத்தினர் இங்கு நிலை கொண்டுள்ளனர்; தமிழர்களின் காணிகளைச் சுவீகரிப்பதற்காக அல்ல'' என்றார் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

புதுக்குடியிருப்பில் செவ்வாய்க்கிழமை பிரதேச செயலகக் கட்டடத்தை திறந்து வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் நா. வேதநாயகன் தலைமயில் இடம்பெற்ற இந்தத் திறப்பு விழாவில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் நீண்ட காலமாக நிலவி வந்த வன்முறையை முடிவுக்கு கொண்டு வந்ததில் இராணுவத்தினரின் பங்களிப்பு மிகவும் இன்றியமையாதது.

தங்களுடைய குடும்பங்களை விட்டு இராணுவத்தினர் இங்கு இருக்கின்றனர். அவர்கள் தமிழர் பிரதேசங்களில் குடியேற்றங்களைச் செய்யவோ அன்றி காணிகளைச் சுவீகரிக்கவோ இங்கிருக்கவில்லை. இங்கு வாழும் மக்களைப் பாதுகாப்பதற்கே. அவர்களின் சுபீட்சமான வாழ்வுக்கு வழிகாட்டவுமே இருக்கின்றனர்.

[illegible] பாடுகள் இருக்கலாம் இதனைப்



பயன்படுத்தி சிலர் எமக்கெதிரான சூழ்ச்சிகளை மேற்கொண்டு வருகின்றனர். இவ்வாறான சூழ்ச்சிகளை முறியடிப்பதற்கு நீங்கள் எம்மோடு கைகோர்த்து [illegible]ார்.

[illegible] அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் புதிதாக அமைக்கப்பட்ட புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் மற்றும் புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை ஆகியவற்றை பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ செவ்வாய்க்கிழமை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

போரால் புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம், புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை என்பன முற்றாக அழிவடைந்தன.

இவ்விரு கட்டடங்களும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் நிதியுதவியுடன் புதிதாக நிர்மாணிக்கப்பட்டன. இதில் புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலை 26 மில்லியன் ரூபா செலவிலும் பிரதேச செயலகம் 56 மில்லியன் ரூபா செலவிலும் புதிதாக அமைக்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் தலைமையில் இடம்பெற்ற பிரதேச செயலகத் திறப்பு விழா இடம்பெற்றது.

இந்தத் திறப்பு விழாவில் உள்நாட்டு அலுவல்கள் பிரதியமைச்சர் விஜய தஹநாயக்கா, கைத்தொழில் வணிகத்துறை அமைச்சர் ரிஷாட் பதியுதீன், வட மாகாண ஆளுநர் ஜீ. ஏ. சந்திரசிறி, வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் உனைஸ் பாரூக் உட்பட திணைக்களத் தலைவர்கள், இராணுவ உயர் அதிகாரிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இதேவேளை புதுக்குடியிருப்பு பிரதேச வைத்தியசாலைத் திறப்பு விழா முல்லைத்தீவு சுகாதாரத் திணைக்கள பிராந்தியப் பணிப்பாளர் சு. திலீபன் தலைமையில் இடம்பெற்றது.

(உ-400-433)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போக்குவரத்து வீதிகளிலும் புகைபிடிப்பதற்குத் தடை

## சட்டத்தில் திருத்தம் கொண்டுவர ஆராய்கிறது சுகாதார அமைச்சு



புகைத்தலால் வாய்புற்றுநோய் ஏற்படும் அபாயம்

கொழும்பு, மே 31

போக்குவரத்து வீதிகளில் புகைபிடிப்பதற்குத் தடை விதிக்க சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. அது தொடர்பாக சட்டத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளன என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுமக்கள் நடமாடும் இடங்களில் புகைபிடிப்பதைத் தடை செய்யும் சட்டங்கள் காணப்படுகின்ற போதிலும் அந்தச் சட்டத்தில் போக்குவரத்து வீதிகள் உள்ளடக்கப்படவில்லை.

அதனால் போக்குவரத்து வீதிகளில் புகைபிடிக்கும் நபர்களுக்கு எதிரான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதுள்ளது என்று அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

இதேவேளை புகைப் பொருள்கள் உள்ளடக்கப்பட்டுள்ள பொதிகளின் மேற்புறத்தில் 80 வீதம் வரையில் காணத்தக்கதாக வாய்புற்றுநோய் அபாயத்தைக் குறித்துக் காட்டும் எச்சரிக்கைப் படங்களைக் காட்சிப்படுத்தும் சட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்படுவது உலக சுகாதார அமைப்பின் பாராட்டுக்கு உள்ளாகியுள்ளது. இந்தச் செயற்றிட்டம் நடைமுறைப்படுத்தப்படுவது தொடர்பாக சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேனவுக்கு விசேட விருதை வழங்குவதற்கும் உலக சுகாதார அமைப்பு தீர்மானித் துள்ளது.

பல்வேறு அச்சுறுத்தல்கள், தடைகளின் மத்தியிலும் அந்த செயற்றிட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன மேற்கொண்டுள்ள முயற்சியைப் பாராட்டி இந்த விருது வழங்கப்படவுள்ளது.

புகையிலை, மதுசாரத்தைக் கட்டுப்படுத்தல் சம்பந்தமாக ஒவ்வோர் ஆண்டிலும் உலக சுகாதார அமைப்பினால் நாடொன்று தெரிவு செய்யப்பட்டு அந்த நாட்டின் சுகாதாரத்துறை அமைச்சருக்கோ அல்லது அதன் தலைவருக்கோ விருது வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.(ச-22)

## சைக்கிளை 'நைஸாக' திருடிச் சென்ற பெண்

சங்கானை மே 31

சங்கானையில் உள்ள வங்கி ஒன்றில் அண்மையில் பெண்களுக்கான லுமாலா சைக்கிள் ஒன்று களவாடப்பட்டுள்ளது. வங்கியின் உட்புறத்தில் பூட்டி வைக்கப்பட்டிருந்த இந்தச் சைக்கிளை பெண்ணொருவர் களவாடிச் சென்றுள்ளார்.

வாடிக்கையாளர் ஒருவர் சைக்கிளை கொண்டு வந்து நிறுத்துவதும், அதே சைக்கிளை சேலை உடுத்த பெண்ணொருவர் எடுத்துச் செல்வதும் வங்கியில் பொருத்தப்பட்டுள்ள கண்காணிப்பு கமராவில் பதிவாகியுள்ளதாக வங்கி ஊழியர்கள் தெரிவிக்கின்றனர். சங்கானை மரக்கறி, மீன் சந்தை, வங்கிகளில் விடப்படும் சைக்கிள்கள் அடிக்கடி களவாடப்படுவது தெரிந்ததே.(ந-29)


## மக்கள் வங்கி அறிவித்தல்

மக்கள் வங்கியின் பின்வரும் கிளைகளிலும் சேவை நிலையங்களிலும் 31.03.2012 வரை அடகு வைத்து இதுவரை மீட்கப்படாத நகைகள், **2013.06.15(சனிக்கிழமை)** இலிருந்து பின்வரும் மக்கள் வங்கிக் கிளைகளில் காலை 8.30 மணி முதல் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| கிளைகள் | சேவை நிலையம் | ஏலம் விடப்படும் - திகதி | ஏலம் விடப்படும் - இடம் |
|---|---|---|---|
| யாழ். ஸ்ரான்லி வீதி | நாவலர் வீதி | 15.06.2013 முதல் காலை 8.30 மணி | மக்கள் வங்கி, சுன்னாகம். |
| | மானிப்பாய் | | |
| காங்கேசன்துறை | மல்லாகம் | | |
| யாழ். பிரதான வீதி | உரும்பிராய் | | |
| ஊர்காவற்றுறை | - | | |
| சங்கானை | பண்டத்தரிப்பு | | |
| சுன்னாகம் | கோப்பாய் | | |
| | அளவெட்டி | | |
| சாவகச்சேரி | கொடிகாமம் | | |
| யாழ்.பல்கலைக்கழகம் | திருநெல்வேலி | | |
| | கல்வியங்காடு | | |
| யாழ். கன்னாதிட்டி | இணுவில் | | |

| கிளைகள் | சேவை நிலையம் | ஏலம் விடப்படும் - திகதி | ஏலம் விடப்படும் - இடம் |
|---|---|---|---|
| நெல்லியடி | -- | 15.06.2013 முதல் காலை 8.30 மணி | மக்கள் வங்கி, பருத்தித்துறை. |
| அச்சுவேலி | புத்தூர் | | |
| வல்வெட்டித்துறை | உடுப்பிட்டி | | |
| பருத்தித்துறை | புலோலி | | |

அறிவித்தலின்றி திகதியை ஒத்திப் போடுவதற்கும் ஏலம் விடப்படும் இடத்தினை மாற்றுவதற்கும் உரிமை வங்கிக்கு உள்ளது.

பிராந்திய முகாமையாளர்,
மக்கள் வங்கி, பிரதேச காரியாலயம்,
கன்னாதிட்டி வீதி, யாழ்ப்பாணம்.


## புகைத்தல் எதிர்ப்பு கொடி தினம்

அச்சுவேலி,மே 31

சர்வதேச புகைத்தல் எதிர்ப்புத் தினத்தை ஒட்டிய கொடிதினம் இன்று தொடக்கம் ஜூன் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

குறித்த பதினொரு தினங்களும் கொடி விற்பனை மூலம் சமுர்த்தி சமூக அபிவிருத்தி மன்றங்கள் பொதுமக்களிடம் இருந்து நிதியை திரட்டும் பணியில் ஈடுபடும்.

கொடிதினம் மூலம் சேகரிக்கப்படும் நிதியை கொண்டு மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் பெண் தலைமைத்துவம் மற்றும் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவி மற்றும் மாணவர் களுக்கான சிப்தொறா புலமைப் பரிசில் என்பன ஆண்டு தோறும் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-11)

## விளம்பர வரியை செலுத்தத் தவறிய நிறுவனத்துக்கு எதிராக வழக்கு

வலி.தென்மேற்கு, மே 31

வர்த்தக விளம்பரம் செய்தமைக்கான வரிப்பணத்தைச் செலுத்தாமல் காலம் கடத்தி வந்த நிறுவனத்துக்கு எதிராக வலி.தென்மேற்கு பிரதேச சபையினால் மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குடாநாட்டில் சிமெந்து விற்பனை செய்யும் பிரபல்யமான நிறுவனமொன்று வலி.தென்மேற்கு பிரதேசத்திலுள்ள பல வீட்டுச் சுற்று மதில்களில் சிமெந்து பற்றி விளம்பரப்படுத்தி இருந்தது. ஒது சதுர அடிக்கு 50 ரூபா வீதம் பிரதேச சபைக்குச் செலுத்தவேண்டிய வரிப்பணத்தைச் செலுத்தாமல் மேற்படி நிறுவனம் காலம் கடத்தி வந்தது. அதை அடுத்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளினால் மேற்படி நிறுவனத்துக்கு எதிராக மல்லாகம் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.(ஒ-115)


## பயிற்சி நெறிக்கான கலந்துரையாடல்

சாவகச்சேரி,மே 31

சாவகச்சேரி தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால், இளைஞர், யுவதிகளுக்கான ஐந்து பயிற்சி நெறிகள் நடத்தப்படவுள்ளன. தையல், நடனக் கலை, கணினி மென்பொருள், வன்பொருள், தகவல் தொழில்நுட்பம் ஆகிய பயிற்சி நெறிகள் ஆரம்பிக்கப்படவுள்ள பயிற்சி நெறிகளாகும். இந்தப் பயிற்சி நெறிகள் எதிர்வரும் திங்கட்கிழமை கைதடி நுணாவில் அறவழி பயிற்சி நிலையத்தில் நடைபெறும்.

பயிற்சி நெறியில் கலந்து கொள்ளும் இளைஞர், யுவதிகளுக்கான கலந்துரையாடல் இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு அறவழி செயலகத்தில் இடம்பெறும். (ந-9)


## ஆலயங்களில் தேர்ப்பவனியின் போது...



திருநெல்வேலி ஸ்ரீ நீலாயதாக்ஷி சமேத ஸ்ரீ காயாரோகண சுவாமிகள் ஆலய தேர்த்திருவிழாவின்போது சுவாமி தேரில் வீதியுலா வருவதைக் காணலாம்.(ந-7)



கொழும்புத்துறை மேற்கு விநாயகர் ஆலய வருடாந்த தேர்த்திருவிழாவின்போது விநாயகர் வீதியுலா வந்து அருள்பாலிக்கிறார். (ஒ-135)



காரைநகர் பாலாவோடை முத்துமாரி அம்மன் ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை பக்தர்கள் புடை சூழ அம்பாள் தேரில் பவனி வந்து அடியார்களுக்கு அருட்காட்சி கொடுக்கிறார். (ஒ-250)

## நடமாடும் சிகிச்சை: தொடர்பு கொண்டு சேவையைப் பெறலாம்

வடமராட்சி, மே 31

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்தியக் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் தொற்றாத நோய் நடமாடும் சிகிச்சைப் பிரிவு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

பிரதி வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் நடத்தப்படும் நடமாடும் இவ் வைத்திய சேவையைப் பயன்படுத்த விரும்பும், குழுக்கள், சனசமூக நிலையங்கள், கிராம அபிவிருத்திச் சங்கங்கள் மற்றும் பொது சமூக அமைப்புகள் வைத்தியசாலை திட்டமிடல் பிரிவுடன் தொடர்பு கொண்டு சேவையைப் பெற்றுக்கொள்ள முடியும் என பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகர் டாக்டர் தா.வினோதன் தெரிவித்தார்.

நெல்லியடி வர்த்தகர் சங்கம், வடமராட்சி கல்வி வலயம், பருத்தித்துறை வேலாயுதம் மகா வித்தியாலயம், புற்றளை மகாவித்தியாலயம், பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றம் உள்ளிட்ட பல்வேறு நிறுவனங்களில் இச்சிகிச்சைப் பிரிவு இதுவரை காலமும் நடத்தப்பட்டு தொற்றாத நோயுள்ளோர் சிலர் இனங்காணப்பட்டு அவர்களுக்கு தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது.(ஒ-8)


**தவறிவிட்டது**

NP-HB-9141 இலக்கத்தகடு உரும்பிராய், கோண்டாவில் அன்னங்கை, இணுவில் [illegible] து. கண்டெடுத்துத் [illegible] சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு:077 599 2866

(37814)(6.11)



**கடை வாடகைக்கு**

228, சேர் பொன். இராமநாதன் வீதியிலுள்ள (பல்கலைக்கழகத்திற்கு முன்பாக) கடைத் தொகுதி இரண்டு கடைகள் குறைந்த வாடகைக்கு உண்டு. ஜூன் 5 ஆம் திகதிக்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.
(உணவகங்கள் தவிர்க்கப்படும்)

தொடர்பு: 077 783 3807

(37808)(6.11)


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org




கொமர்ஷல் வங்கியின் சேமிப்பு ஒளியில் இணைந்து இலங்கையின் மிகச்சிறந்த வங்கி வழங்கும் விசேட பிரதிலாபங்களுடன், பரிசுகளையும் பெற்றுக்கொள்ளுங்கள்.

நீங்களும் அண்மையிலுள்ள கொமர்ஷல் வங்கிக் கிளைக்கு வாருங்கள்.

COMMERCIAL BANK

தொடர்ந்து 15 வருடங்களாக இலங்கையின் மிகச்சிறந்த வங்கி - குளோபல் பினான்ஸ் USA

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

+94 11 2 353 333 www.combank.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீழ்ப்பிரிவு போட்டி; நேரத்தில் மாற்றம்

யாழ்ப்பாணம்,மே 31
தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ் மறை மாவட்டமும் இணைந்து நடத்தும் கவிதை கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் கீழ்ப்பிரிவு (தரம் 04, 05) மாணவர்களுக்கான பேச்சுப் போட்டிகள் மாத்திரம் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடம்பெறும் எனவும் ஏனைய போட்டிகள் முன்பு அறிவித்ததன் பிரகாரம் காலை 9 மணிக்கு இடம்பெறும் எனவும் போட்டிச் செயலர் அறிவித்துள்ளார்.
மாகாண மட்டத்தில் தரம் 05 புலமைப் பரிசில் பயிற்சித் தேர்வு இடம்பெறுவதாலேயே இம் மாற்றம் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ)

# கொடுப்பனவைப் பெறலாம்

யாழ்ப்பாணம், மே 31
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச செயலக பிரிவுக்குட் பட்ட கரணவாய் மத்தியைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை இராஜேஸ்வரி என்பருக்கு சுய உதவிக் கொடுப்பனவு கிடைக்கப்பெற்றுள்ளது. இந்தக் கொடுப்பனவு சமூக சேவைகள் திணைக்கள பிர தேச செயலகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (ந-9)

# 15,000 படையினரே வடக்கில்; அவர்கள் அபிவிருத்திப் பணிகளில்

## சீனாவில் பீரிஸ் அவிழ்த்துவிட்டார் 'கதை'

கொழும்பு,மே 31
வடக்கில் 15 ஆயிரம் இலங்கைப் படையினர் மட்டுமே நிலை கொண்டிருக்கின்றனர். அவர்களும் கூட அபிவிருத்திப் பணிகளையே மேற்கொண்டு வருகின்றனர்.
இவ்வாறு இலங்கை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் புதிய கதை ஒன்றை சீனாவில் அவிழ்த்துவிட்டுள்ளார்.
பெய்ஜிங்கில் செய்தியாளர் களிடம் பேசியபோதே அவர் இவ்வாறு கூறினார்.
அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-
விடுதலைப் புலிகளுக்கும் அரசபடைகளுக்கும் இடையில் நடந்த உள்நாட்டுப் போரினால் மோசமாகப் பாதிக் கப்பட்ட, தமிழர்கள் அதிகம் வாழும் வடக்குப் பகுதியை, வேண்டுமேன்றே இராணுவ மயப்படுத்தும் முயற்சிகள் ஏதும் இடம்பெறவில்லை.
போரின்போது வடக்கில் 65 ஆயிரம் இலங்கைப் படையினர் நிலை கொண்டிருந்தனர். தற்போது அங்கு 15 ஆயிரம் படையினர் மட்டுமே நிலை கொண்டிருக்கின்றனர்.
அவர்களும் கூட அபிவிருத்திப் பணிகளையே மேற்கொள்கின்றனர். அவர்கள் சமூகத்தில் முன்னு தாரணமாக திகழ்கின்றனர்.
போருக்குப் பிந்திய நிலைமைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளன. எனினும் ஒரே இரவில் சகல மாற்றங்களையும் செய்ய முடியாது.
இடம்பெயர்ந்தவர்கள் மீளக் குடியேற்றப்பட்டுள்ளனர். கண்ணிவெடி அகற்றும் பணிகள் நடக்கின்றன.
உள்நாட்டுப் போருக்குக் காரணமான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் அரசியல் தீர்வு உள்ளுக்குள் இருந்தே வர வேண்டும். இந்த ஆண்டு இறுதியில் வடக்கில் மாகாணசபைத் தேர்தல் நடத்தப்படவுள்ளது.-என்றார். (ச)

# பொங்கல் உற்சவம்

பளை,மே 31
பளை மாசார் கல்லடி வைரவர் ஆலய பொங்கல் உற்சவம் இன்று வெள்ளிக்கிழமை பகல் இரவு இடம்பெறும்.
அடியார்கள் தமது நேர்த்திக் கடனாக காவடிகள், பாற் செம்புகள் எடுக்கவுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ஒ-9)

# முல்லை மாவட்ட போட்டிகள்; நிலையம் இடம் மாற்றம்

தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் நூற்றாண்டு விழாவையொட்டி யாழ்ப்பாணத் தமிழ்ச் சங்கமும் யாழ் மறை மாவட்டமும் இணைந்து நடத்தும் கவிதை, கட்டுரை, பேச்சுப் போட்டிகளில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்த பாடசாலைகளுக்கான போட்டிகள் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயத்தில் நடைபெறா என்றும் அவை முல்லைத்தீவு மகா வித்தியாலயத்திலேயே நடைபெறும் என்றும் போட்டிச் செயலர் அறிவித்துள்ளார்.
இப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (ஒ)


இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர்
**சரா புவனேஸ்வரன் அவர்களின்**
**பொன்விழா நிகழ்வும்**
**சயன்ஸ் அக்கடமி மாணவர் கௌரவிப்பும்**
**வெற்றித்தேர்வு சுற்றாடல்சார் செயற்பாடுகள் நூல் வெளியீடும்**

காலம் : 01.06.2013 சனிக்கிழமை
நேரம் : காலை 9.00 மணி
இடம் : நல்லூர் சயன்ஸ் அக்கடமி வளாகம்

தலைமை
**திரு. எஸ். ஸ்ரனிஸ்லாஸ்**
தலைவர், சரா பொன்விழாச் சபை
பிரதம விருந்தினர்
**பேராசிரியர் க. தேவராஜா அவர்கள்**
முகாமைத்துவக் கற்கைகள் வணிகபீடம், யாழ். பல்கலைக்கழகம்.
சிறப்பு விருந்தினர்கள்
**உயர்திரு. கு. பிறேமகாந்தன் அவர்கள்**
மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர், வடமாகாணம்
**உயர்திரு. A. J. குருஸ் அவர்கள்**
வலயக்கல்விப்பணிப்பாளர், மடு கல்வி வலயம்.
**திருமதி சிவத்திரை சிவநாதன் அவர்கள்**
பிரதிக்கல்விப்பணிப்பாளர், தென்மராட்சிக் கல்வி வலயம்.
**Dr. லயன் வை. தியாகராஜா அவர்கள்**
மாவட்ட பிரதம இணைப்பாளர், சர்வதேச லயன்ஸ் கழகம்.
கௌரவ விருந்தினர்கள்
**உயர்திரு. V.T. சகாதேவராஜா அவர்கள்**
தலைவர், இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கம்.
**தொழிலதிபர் E.S.P. நாகரத்தினம் அவர்கள்**
முகாமைத்துவப் பணிப்பாளர், E.S.P கூட்டு நிறுவனம்.
(37822) - சரா பொன்விழாச் சபை



**25 ஆவது பிறந்தநாள் வாழ்த்து**



கனடா
**அன்ரன்கிறிஸ்ரி - சுபத்திரா**
தம்பதியரின் செல்வப் புதல்வன்
**அகிலன்** தனது 25 ஆவது பிறந்தநாளை கனடா ரொறன்ரோவில் இன்று (31.05.2013) வெள்ளிக்கிழமை விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.
அவரைச் சகல செல்வங்களும் பட்டங்களும் பெற்று நீடூழிவாழ வாழ்த்துவோர்.
அப்பா, அம்மா, சகோதரன், அம்மம்மா, அப்பம்மா, ஆவரங்கால் தாத்தா, அம்மம்மா, சித்தி, சித்தப்பா, மாமா, மாமி
**அருளம்பலம் செல்வராணி**
ஆவரங்கால்.
(C/9533)(2.6)



# அறிவித்தல்

பொதுமக்களுக்கும் சகல மதிப்பிற்குரிய செலிங்கோ VIP இன்சூரன்ஸ் பி.எல்.சி. வாடிக்கையாளர்களுக்குமானது



**நாகராசா சுஜீவறூபன் 793541058V**
(சண்டிலிப்பாய் மத்தி,சண்டிலிப்பாய்)

செலிங்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி. அச்சுவேலி VIP காப்புறுதிக் கிளையில் சிரேஷ்ர சந்தைப்படுத்தல் நிறைவேற்று அதிகாரியாக பணியாற்றிய மேற்காணும் நபர் தற்போது எமது நிறுவனத்தில் 27.05.2013 இல் இருந்து விலகியுள்ளார்.
எனவே எமது மதிப்பிற்குரிய வாடிக்கையாளர்களே எதிர்காலத்தில் எமது நிறுவனம் தொடர்பாக அவருடன் மேற்கொள்ளப்படும் எவ்வித செயற்பாடுகளுக்கும் மற்றும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாம் பொறுப்பல்ல என்பதை உங்களுக்கு இத்தால் அறியத்தருகின்றோம்.

பிரதி பொதுமுகாமையாளர் யாழ்.மாவட்டம்
செலிங்கோ VIP இன்சூரன்ஸ் பி.எல்.சி.
செலிங்கோ ஹவுஸ்,
இல.69,ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு -01. (37816)(5.6)

CEYLINCO VIP ON THE SPOT உலகிற்கே ஒன்று!



# தேவை
**(ACTWARE (Pvt) LTD**
1 ஆங்கில ஆசிரியர்கள்
2 தமிழில்/ஆங்கிலத்தில் கட்டுரை எழுதுபவர்
தொடர்பு: TP:072 159 6500
e mail: act042013@gmail.com
396 (570) K.K.S ROAD, JAFFNA (37824)(6.7.11)



# கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலை கல்வி சாரா ஊழியர் வாசன் அவர்களின் அன்புத் தந்தை
**தம்பிராசா சற்குணம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கொள்வதுடன் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
யா/யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
நலன்புரி சங்கம் (37826)(6.7.11)



# கண்ணீர் அஞ்சலி
எமது பாடசாலை கல்வி சாரா ஊழியர் வாசன் அவர்களின் அன்புத் தந்தை
**தம்பிராசா சற்குணம்**
அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்து கொள்வதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.
யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
கல்வி சாரா ஊழியர்கள் (37827)(6.7.11)



# வீடு வாடகைக்கு உண்டு
ஸ்ரேசன் றோட், கொக்குவிலில் சகல வசதிகளுடன் கூடிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு.
நிறுவனங்கள் விரும்பத்தக்கது. (37818)(5.6)
தொடர்பு: ராகுலன், 077 8590969



# கண்ணீர் அஞ்சலி
எமது கல்லூரி ஆசிரியர்
**செ.ஜெயரட்ணம்** அவர்களின்
அன்புச் சகோதரி
செல்லையா இந்துமதி கடந்த 24.05.2013 வெள்ளிக்கிழமை அன்று இறைபதம் அடைந்தார்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
[illegible]
யா/கோப்பாய் கிறிஸ்தவ கல்லூரி,
கோப்பாய். (37820)(5.6)



# கட்டாக்காலி மாடு யாருடையது
திருநெல்வேலி விவசாய சம்மேளனத்தால் பிடிக்கப்பட்ட மாடு ஒன்று 24.05.2013ஆம் திகதி நல்லூர் பிரதேச சபையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
தகுந்த ஆதாரங்களைக் காட்டி நிபந்தனைகளைப் பூர்த்திசெய்து 05.06.2013 ஆம் திகதி பி.ப.4.00மணிக்குள் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றேன். தவறும் பட்சத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன்.
**ப. வசந்தகுமார்,**
**தலைவர், நல்லூர் பிரதேச சபை.** (சி/9536)(5.6)



# மரண அறிவித்தல்



**திருமதி கணேசு இராசம்மா**
தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கணேசு இராசம்மா நேற்று (30.05.2013) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.
அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.
தகவல்: க.நந்தகுமார் (பிரதேச செயலகம், தெல்லிப்பழை)
கே.கே.எஸ்.வீதி, மல்லாகம். (2.6)(37851)



# புதிய இடத்தில் விரைவான சேவை
**மந்திகை பார்மஸி**
**ஆஸ்பத்திரி வீதி-மந்திகை**
எமது நிறுவனம் எதிர்வரும் 3 ஆம் திகதி திங்கட்கிழமை ஆஸ்பத்திரிச் சந்திக்கும் சாவகச்சேரி வீதிச் சந்திக்கும் இடைப்பட்ட புதிய இடத்தில் இயங்கும் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.
எமது வாடிக்கையாளர்களும், முகவர்களும் இந்த அழைப்பை ஏற்றுக் கொள்ளுமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
**மந்திகை பார்மஸி**
**ஆஸ்பத்திரி வீதி, மந்திகை.**
T.P- 021 226 3283 (C/9532)(6.7.11)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரும்பிராய் கிட்ஸ் பார்க்
## Play Group அனுமதி

01.01.2014 இல் 3 வயது பூர்த்தியாகக்கூடிய பிள்ளைகள் Play Group இல் இணையலாம். அனுமதி விரும்புவோர் நேரில் சந்திக்கவும். அனுமதி பெறுவோருக்கு அடுத்த ஆண்டு 3 Plus வகுப்பிற்கு விண்ணப்பிப்பின் முன்னுரிமை வழங்கப்படும்.

(37829)(6.2) தலைவர், உரும்பிராய் கிட்ஸ் பார்க்,
ஞானவைரவர் கோயில் வீதி, உரும்பிராய்.


# அறிவித்தல்

## வேலணை பிரதேச சபை
## நயினா தீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உயர் திருவிழா-2013

01. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த உயர் திருவிழாவானது 09.06.2013 தொடக்கம் 24.06.2013 வரை நடைபெற ஏற்பாடாகி உள்ளது. இக்காலப்பகுதியில் ஆலய வீதியிலும் வெளிச் சுற்றாடலிலும், புங்குடுதீவு, குறிகட்டுவான் பகுதியிலும் தற்காலிக வியாபார நிலையங்களை அமைத்து வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்வோர் வேலணை பிரதேச சபையின் புங்குடுதீவு, நயினாதீவு, உப அலுவலகங்களில் தொடர்பு கொண்டு வியாபார அனுமதிப்பத்திரம் பெற்று பிரதேச சபையின் அனுமதியுடன் வியாபாரத்தில் ஈடுபடல் வேண்டும். அனுமதிப் பத்திரம் இன்றி வியாபார நடவடிக்கையில் ஈடுபடு வோர் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

02. உயர் திருவிழாக் காலத்தில் நயினாதீவில் காலை 10.00மணி முதல் பி.ப 2.00 மணி வரையும் பின்னர் பி.ப.4.30 மணி முதல் இரவு 11.00 மணி வரையும் பிரதான வீதியிலும், யாத்திரிகர் மடத்திற்கு அப்பாலும்,ஆலயத்தின் தெற்கு மதிலுக்கு அருகிலுள்ள வீதியிலும், மேற்கு மதில் எல்லைக்குள்ளும், துவிச் சக்கர வண்டிகள், மோட்டார் சைக்கிள்கள், ஓட்டோக்கள் உட்செல்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. பிரதேச சபையின் வாகனத் தரிப்பிடத்திற்கு மேலதிகமாக எந்தவொரு தனி நபருக்கும் வாகனத்தரிப்பிடம் அமைப்பதற்கு அனுமதி வழங்கப்படவில்லை.

03. குறிகட்டுவான் துறைப்பகுதியில் புங்குடுதீவு உப அலுவலகத்தினால் வாகனத் தரிப்பிட வசதிகள், சுகாதார வசதிகள், குடிதண்ணீர் வசதிகள், தற்காலிக இளைப்பாறு மண்டப வசதிகள், மின்சார வசதிகள் போன்ற அனைத்து வசதிகளும் சிறப்பாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. சபையின் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலர்களினால் பணிக்கப்படும் ஒழுங்கு முறைகளைப் பேணுமாறு யாத்திரிகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

04. வாகனத் தரிப்பிடங்களில் உரிய தரிப்பிடக் கட்டணங்களை செலுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு வாகன உரிமையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

05. இக்காலப் பகுதியில் ஆலயச் சுற்றாடலின் வெளிப்புறங்களில் வியாபாரம் நடத்துவோர் வேலணை பிரதேச சபையினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள 04.06.2013ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு நயினை ஸ்ரீ நாகபூசணி ஆலய நூலகத்தில் நடைபெறவுள்ள கலந்துரையாடலுக்கு சமுகமளிக்க வேண்டும். அன்றைய தினமே தங்களுக்கான அனுமதிப்பத்திரம் சபையால் வழங்கப்படும். பின்னர் எக்காரணம் கொண்டும் அனுமதிப் பத்திரம் வழங்கப்படமாட்டாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

06. பொதுமக்களின் அசௌகரியங்களை கருத்திற் கொண்டு வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறும் கேட்டுக்கொள்கின்றேன்.

சின்னையா சிவராசா
தவிசாளர்,
பிரதேச சபை, வேலணை.
(சி/9530)(6.6)

# முதலாம் ஆண்டு நினைவுப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த நந்தன வருஷம் வைகாசி மாதம் 28ஆம் நாள் (10.06.2012) இறைபதம் அடைந்த எமது உள்ளம் நிறைந்த அன்புச் சகோதரன்

அமரர் உயர்திரு
**க.மு.விக்னேஸ்வரன்**

அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு தினம் 31.05.2013 வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் கிரியைகள், பிரார்த்தனைகள் நடைபெற்று அதனைத் தொடர்ந்து பகல் 10.00 மணியளவில் இல.75, லோரன்ஸ் வீதி, பம்பலப்பிட்டியில் அமைந்துள்ள சரசுவதி மண்ட பத்தில் நினைவுப் பேருரையும் மதிய போஜனமும் இடம்பெறும். அத்தருணம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"விக்கிவாசா" 34,
விவேகானந்தா வீதி,
வெள்ளவத்தை.
தொடர்பு- 0777301961

சகோதரர்கள் தம்பி.எ.க.மு.தம்பிராசா,
(சி/8672)(14.9.7) தம்பி.எ.க.முத்தையாபிள்ளை குடும்பம்.

# மரண அறிவித்தல்கள்

## கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் ஹட்டனை வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை 30.05.2013 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தங்கரத்தினத்தின் அன்புக் கணவரும் கல்யாணி, கணநாதன் (உகண்டா) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகநாதன், பிறேமகுமாரி ஆகியோரின் மாமனும் சொருபினி, கணாதிபன், அபிராமி, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (01.06.2013) சனிக்கிழமை மு.ப. 11 மணிக்கு ஹட்டனில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக ஹட்டன் குடா ஓயா மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

28A, 2nd Lane,
Dimbulla Rd, Hatton.
(37834) (23-7)

தகவல்:
குடும்பத்தினர்.
051 222 3181

## இராசேந்திரன் திருகரன் (கரன்)



இணுவில் மேற்கு, தேவி வாசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இராசேந்திரன் திருகரன் (கரன்) (29.05.2013) புதன்கிழமை அகாலமரணமடைந்தார்.

அன்னார் ஜானகிதேவியின் அன்புக் கணவரும், நிவேதனா, பவனுஜா ஆகியோரின் தந்தையும், கனகராசா இராசேந்திரன் - தனபாக்கியம் தம்பதியரின் சிரேஸ்ட புதல்வனும், சி.சோதிலிங்கம் (ஓய்வுபெற்ற கணக்காளர், கல்வித் திணைக்களம் - வடமாகாணம்) - வசிந்திராதேவி தம்பதியரின் மருமகனும், இ.அருந்தீபன் (பயிற்று விப்பாளர் ஸ்ரீராம் ஜிம்), இ.தனப்பிரகாஸ், வி.தபோதினி, காலஞ்சென்ற தாரணி மற்றும் பி.வரதினி (காயத்திரி - ஜேர்மனி), வை.அமுதினி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், சோ.நேச ராசா (கதிராளர் - பொது வைத்தியசாலை, திருகோணமலை), இ.விஜயரத்தினம், கு.சுவேந்திரராசா, கு.பிரபாகர் (ஜேர்மனி), வயித்தியநாதன் (கனடா), அ.திலீபா ஆகியோரின் மைத்துனரும், நே.சுகிதாவின் சகலனும், வி.விக்னராஜ், வி.நர்த்தனன், வி.மகாதனன், சு.மகிழினி, பி.அவனிகா, பி.அர்த்தனா, வை.ஆரூரன், நே.சாய்னி ஆகியோரின் மாமனும், அ.அபிசாந்த், அ.கஜனிகா ஆகியோரின் பெரியதந்தையும், கீரிமலை பொன்னையா - கனகராசா, அம்பிகை அம்மா, காலஞ்சென்றவர்களான இணுவில் ஆ.கந்தசாமி - இரத்தினம்மா தம்பதியரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (31.05.2013) வெள்ளிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் இணுவில் மேற்கு தேவி வாசத்திலிருந்து தாவடி இந்துமயானத்துக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

இணுவில் மேற்கு. (37831)(6.2) தகவல்: குடும்பத்தினர்.

## திருமதி சிற்றம்பலம் அருந்தவமலர்



தெல்லிப்பழையை பிறப்பிடமாகவும் மாகியப்பிட்டி சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிற்றம்பலம் அருந்தவமலர் (27.05.2013) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிற்றம்பலம் அவர்களின் அன்பு மனைவியும், லோகநாதன், பத்மநாதன் (கனடா), காலஞ்சென்ற ஜெகநாதன் (கிளி) மற்றும் புஸ்பநாதன் (சுவிஸ்), சிவநாதன் (கனடா), சாரதா (பிரான்ஸ்) உஷா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், ரஞ்சநாதன் (பிரான்ஸ்), சபாநாதன் (பிரான்ஸ்), சிவமலர், மாலினி (கனடா), சந்திரா, சுசி (சுவிஸ்), காமிலா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், தர்சிகா (கனடா), தர்சன் (கனடா), தினேசன் (கனடா), தனுசிகன் (பிரான்ஸ்), அக்சனா (சுவிஸ்), அசானா (சுவிஸ்), லக்ஸ்விந் (கனடா), பிறிவிந் (கனடா), சகானா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், சிவயோகமலர், மகேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரி யும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (02.06.2013) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டுபனை மாகியப்பிட்டி இந்து மயானத்ததுக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(சி/9539)
(6.11)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரம்.
மாகியப்பிட்டி, சண்டிலிப்பாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆஷஸ் கிண்ணத் தொடரில் விளையாட விருப்பம்



ஆஷஸ் கிண்ணத் தொடரில் விளையாடுவதற்கு தமக்கு விருப்பம் உள்ளது என்று ஆஸ்திரேலிய முன்னாள் கிரிக்கெட் அணித் தலைவர் ரிக்கி பொண்டிங் தெரிவித்துள்ளார். பிரித்தானியாவில் உள்ள 'டெய்லி மெயில்' எனும் சஞ்சிகைக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து விலகினாலும் ஆஷஸ் கிண்ண போட்டிகளில் விளையாடுவதற்கு அழைப்பு விடுக்கப்படுமாயின் அதற்கு நான் தயாராக இருக்கின்றேன் என்று அந்த நேர்காணலில் பொண்டிங் கூறினார்.

ரிக்கி பொண்டிங் சர்வதேச ஆட்டங்களில் இருந்து ஓய்வுபெற்றுள்ள போதும், அவர் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு விளையாட்டுக் கழகங்களுக்காக விளையாடி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இங்கிலாந்தில் நடைபெறவுள்ள ஆஷஸ் கிண்ணத் தொடர் எதிர்வரும் 10 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. (ற)

## சாம்பியன்ஸ் கிண்ணம் எம் வசமாகும்

### சர்வான் நம்பிக்கை



2004ஆம் ஆண்டு வென்றதைப் போன்று இம்முறையும் சம்பியன்ஸ் கிண்ணத் தொடர் எம் வசமாகும் என்று கூறுகின்றார் மேற்கிந்தியத் தீவுகளின் அனுபவ வீரர் ராம்நரேஷ் சர்வான்.


இது குறித்து நேற்று அவர் கூறியதாவது:

இங்கிலாந்து ஆடுகளங்களில், பந்தின் போக்கை நன்கு கவனித்து கடைசி செக்கன் வரை காத்திருந்து விளையாடுவது அவசியம். அங்குள்ள மைதானங்களில் பந்து விரைவாக எல்லைக் கோட்டை எட்டிவிடும். களத்தடுப்பு வியூகம் கடுமையாக இருந்தாலும் கூட எளிதாக பவுண்டரி அடித்துவிடலாம்.

சம்பியன்ஸ் கிண்ணத் தொடரை வெல்வது என்பது மிகப் பெரிய சாதனை. 2004ஆம் ஆண்டு தொடரில் நாங்கள் களமிறங்கிய போது, எங்கள் அணியை யாருமே ஒரு பொருட்டாக நினைக்கவில்லை. மிகவும் பலவீனமான அணியாகக் கணித்தனர். ஆனால், நாங்கள் ஒருங்கிணைந்து விளையாடிக் கிண்ணத்தைக் கைப்பற்றினோம். அதே போன்ற சாதனையை இம்முறை மீண்டும் நிகழ்த்த வேண்டும் என விரும்புகிறோம்.

தற்போது'20/20' ஆட்டங்களில் மிகச் சிறப்பாக விளையாடி வருகிறோம். இலங்கையில் நடந்த '20/20' உலக கோப்பை போட்டியில் இலங்கையை வீழ்த்தினோம். இப்போது மினி உலகக் கிண்ணத்தையும் கைப்பற்ற முடியும் என்ற நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. அதற்கு ஏற்ற வகையில் வலுவான அணி அமைந்துள்ளது. இங்கிலாந்து ஆடுகளங்களுக்கு ஏற்ப வீரர்கள் விரைவில் தங்களை தயார்படுத்திக் கொள்வது அவசியம். இளம் வீரர்கள் இதில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும்'' என்று கூறினார் சர்வான்.

2004ம் ஆண்டு சம்பியன்ஸ் கிண்ணத் தொடரில் சர்வான் 2 அரை சதம் அடித்து ஓட்டக் குவிப்பில் 2ஆவது இடம் பிடித்ததுடன் தொடர் நாயகன் விருது பெற்றமையும் குறிப்பிடத்தக்கது. (ற)



பிரெஞ்ச் பகிரங்க ரென்னிஸ் தொடரின் 5 ஆம் நாள் ஆட்டத்தில், மகளிர் ஒன்றையர் பிரிவில் பிரான்ஸின் கிறிஸ்ரினா மலடினோவிக் ஆஸ்திரேலியாவின் சமந்தா ஸ்ரோஸை எதிர்கொண்டார். (ற)

## சரியான நேரத்தில் பதில் வரும்

### மகேந்திரசிங் டோனி

''ஐ.பி.எல். தொடரில் இடம்பெற்ற சூதாட்டத்தில் இந்தியாவின் கௌரவம் பாதிக்கப்படவில்லை. சூதாட்டம் தொடர்பான கேள்விகளுக்குத் தகுந்த நேரத்தில் பதிலளிப்பேன்'' என்று தெரிவித்துள்ளார் சம்பியன்ஸ்கிண்ணத் தொடருக்காக இங்கிலாந்து சென்றுள்ள இந்திய கிரிக்கெட் அணியின் தலைவர் மகேந்திரசிங் டோனி.



லண்டனில் செய்தியாளர்களைச் சந்தித்த டோனி சூதாட்டம் தொடர்பான கேள்விகளைத் தவிர்த்துக் கொண்டார்.

''இந்தியாவிலும் சூதாட்டம் தொடர்பான கேள்விகளுக்கு நான் பதிலளிக்கவில்லை. இப்போதும் அதுகுறித்துப் பேசப்போவதில்லை. நேரம் வரும்போது அதுபற்றிக் கூறுகின்றேன்'' என்று கூறிவிட்டார் டோனி. (ற)

## லைனுக்கு அபராதம்

ஆஸ்திரேலியாவின் துடுப்பாட்ட வீரர் கிறிஸ் லைனுக்கு 2000 ஆஸ்திரேலிய டொலர்கள் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

சமூக இணையத்தளம் ஒன்றில் கிறிஸ் லைன் வெளியிட்டிருந்த கருத்துக்கள் கிரிக்கெட் விழுமியங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்து இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

அவரின் கருத்துக்கள் கிரிக்கெட் விழுமியங்களுக்கு பாதிப்பு ஏற்படுத்துவதாக அமைந்துள்ள என்ற குற்றச்சாட்டை கிறிஸ் லைன் ஏற்றுக்கொண்டுள்ளார்.

பிரிஸ்பேன் பெண் ஒருவரினால் ரக்பி வீரர் பென் டியோவிற்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் குறித்தே கிறிஸ் லைன் கருத்து வெளியிட்டிருந்தார்.

முன்னதாக சமூக இணையத்தளத்தில் கருத்து வெளியிட்டமைக்காக ஆஸ்திரேலியாவின் டேவிட் வோர்னருக்கும் அபராதம் விதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ற)

# ஐ.பி.எல். சூதாட்டம்: ஸ்ரீசாந்தின் நண்பரும் கைது

ஐ.பி.எல். கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக ஸ்ரீசாந்தின் நண்பர் ஒருவர் உட்பட 4 பேர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து தகவல் வெளியிட்ட டில்லிப் பொலிஸார்,

''ஸ்ரீசாந்தின் நண்பரான அபிஷேக் தற்போது கைது செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீசாந்த் கைதானதும் அபிஷேக்கை ஜீஜு தொடர்பு கொண்டுள்ளார். விடுதி அறையில் உள்ள தடயங்களை ஜீஜுவின் உத்தரவின்படி அபிஷேக் அழித்துள்ளார். ஸ்ரீசாந்துக்கு புக்கிகள் அளித்த ரூ. 10 லட்சத்தில் ரூ. 5 லட்சம் ஏற்கனவே கைப்பற்றப்பட்டுள்ளது. ஜுவிடம் அளிப்பதற்காக மீதமுள்ள ரூ. 5 லட்சத்தை மறைத்து வைத்துள்ள தாக அபிஷேக் கூறுகிறார். அதுகுறித்து தனிப்படையினர் விசாரித்து வருகின்றனர்'' என்று தெரிவித்தனர்.(ற)

**''உன்னால நான் கெட்டேன்'' என்று ஸ்ரீசாந்த் சண்டை போட, அதற்கு அஜீத் சண்டிலா கடுமையான வார்த்தைகளால் பதிலடி தர பொலிஸ் அதிகாரிகள் முன்பு இருவரும் கடுமையாக திட்டிக் கொண்டதால் பரபரப்பு ஏற்பட்டது. நேற்று நீதிமன்றத்துக்கு கொண்டு வரப்படுவதற்கு முன்பு ஸ்ரீசாந்துக்கும் சண்டிலாவுக்கும் இடையே கடும் சண்டை மூண்டதாம். இருவரும் கடுமையான வார்த்தைகளால் [illegible] என்று தலையிலடித்துக் கொள்கின்றனர் பொலிஸார்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘விளையாட்டின் ஊடான நல்லுறவை வளர்த்தல்’ சிநேகபூர்வ விளையாட்டு போட்டி நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், மே 31
மாகாணக் கல்வித் திணைக்களத்தால் ஏற்பாடு செய்யப்பட்டு, வடக்கு, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகள் பங்குபற்றும் "விளையாட்டின் ஊடாக சமூக நல்லுறவை வளர்க்கும் நோக்குடனான விளையாட்டுப் போட்டிகள்" வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் நேற்று ஆரம்பமாகியன.

ஆரம்ப நிகழ்வுக்குப் பிரதம விருந்தினர்களாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, வடமாகாணக் கல்விப் பணிப்பாளர் வி.செல்வராஜா, வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் நோயல் விமலேந்திரன் மற்றும் கல்வித் துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



ஆரம்பநிகழ்வில் தேசியக் கொடியை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி ஏற்றினார். வடமாகாணக் கொடியை வடமாகாண பிரதம செயலாளர் திருமதி விஜயலட்சுமி ரமேஸ்சும், வடமாகாண விளையாட்டுக் கொடியை வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.சத்தியசீலனும் ஏற்றி வைத்தனர்.

ஆரம்ப நிகழ்வாக போட்டிகளில் பங்குபற்றும் பாடசாலைகளின் அணிவகுப்பு இடம்பெற்றது. தொடர்ந்து சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மாணவிகளின் இசையும் அசைவும் நிகழ்வும், அனுராதபுரம் சுவர்ண பாலிகா மகா வித்தியாலய மாணவிகளின் கலாசார நிகழ்வும் இடம்பெற்றன.

தொடர்ந்து விளையாட்டு நிகழ்வுகளை சம்பிரதாயபூர்வமாக வடமாகாண ஆளுநர் ஆரம்பித்து வைத்தார்.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி வளாகத்தில் பெண்களுக்கான வலைப்பந்தாட்டம், ஆண்களுக்கான கரப்பந்தாட்டம் மற்றும் ஹொக்கிப் போட்டிளும், வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி பிக்நெல் மைதானத் தில் ஆண்களுக்கான கிரிக்கெட், உதைபந்தாட்டப் போட்டிகளும் இடம் பெற்றன.

(ற-23)





**விளையாட்டு நிகழ்வுகளுக்கான பரிசளிப்பு விழா இன்று மாலை 4 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.**

## விளையாட்டுக் கழகங்கள் விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம்மே31
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டை முன்னிட்டு கரப்பந்தாட்டம் மற்றும் உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள் நடத்தப்பட வுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த அணிகள் நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் செயலாளருடன் தொடர்பு கொண்டு விண்ணப்படிவங்களை பெற்றுக் கொள்ள முடியும் என்று போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ற-23)

★★★

தென்மராட்சி, மே 31
மட்டுவில் கண்ணகை விளையாட்டுக் கழகத்தின் 10ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மாவட்ட ரீதியிலான கிரிக்கெட் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

ஜுன் முதலாம், இரண்டாம் திகதிகளில் நடைபெறவுள்ள இந்த சுற்றுத் தொடர் 5 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்டதாகவும் ஆறு வீரர்கள் ஓர்அணியில் பங்குபற்றுவதாகவும் ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

போட்டிகளில் பங்குபற்ற விரும்பும் அணிகள் நாளை மறுதினம் மு.ப. 9 மணிக்கு மட்டுவில் பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் ஆலயத்துக்கு அருகில் உள்ள விளையாட்டு மைதானத்துக்கு சமுகமளிக்குமாறு கோரப்பட்டுள்ளது. (ற-9)

## பதக்கம் பெற்ற மாணவர்கள் கௌரவிப்பு




யாழ்ப்பாணம், மே 31
இலங்கை மெய்வல்லுநர் சங்கம் நடந்திய கனிஷ்ட பிரிவினருக்கான மெய்வல்லுநர் போட்டி அண்மையில் மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது.

அதில் 18 வயதுப்பரிவு பெண்ளுக்கான கோலூன்றிப் பாய்தலில் மகாஜனாக் கல்லூரி மாணவி 2.90 மிற்றர் தூரம் பாய்த்து முதலாமிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தைப் பெற்றுக்கொண்டார்.

16 வயதுப் பிரிவு ஆண்களுக்கான தட்டு எறிதலில் மகாஜனாக் கல்லூரி மாணவன் சுபிசாந் 39.52 மீற்றர் உயரம் எறிந்து மூன்றாமிடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தினையும் பெற்றுக் கொண்டார்.

இவர்கள் இருவரையும் கௌரவிக்கும் நிகழ்வு கடந்த திங்கட்கிழமை பாடசாலை ஒன்றுகூடலில் இடம்பெற்றது. (ற-23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், மே 31
யாழ். உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் பத்திநாதன் அருளானந்தம் வெற்றிக் கிண்ணத்துக்கான 9 பேர் பங்குபற்றும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரின் முதலாவது அரையிறுதியாட்டம் இன்று வெள்ளிக்கிழமை நாவாந்துறை சென். நீக்கிலஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

அதில் பாசையூர் சென். அன்ரனிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ற-23)

★★★

யாழ்ப்பாணம், மே 31
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகத்தின் 60 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் மென்பந்து சுற்றுத் தொடரின் 3ஆவது கால் இறுதியாட்டம் இன்று வெள்ளிக் கிழமை மாலை 3 மணிக்கு நெடியகாடு இளைஞர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெறவுள்ளது.

அதில் கரவெட்டி ஞானம்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து கொலின்ஸ் விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ற-23)

★★★

குருநகர், மே 31
அகில இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கம் நடத்தும் 17 வயதுப்பிரிவுக்கான கிரிக்கெட் ஆட்டங்களில் இன்று வெள்ளிக்கிழமை மு.ப. 6.30 யாழ்.சென். பற்றிக்ஸ் அணியை எதிர்த்து யாழ்.இந்துக் கல்லூரி அணி மோதவுள்ளது. (ற-51)

## டெஸ்ட் போட்டிகள் கட்டாயம் வேண்டும்

டெஸ்ட் அந்தஸ்துள்ள ஒவ்வொரு நாடும் குறிப்பிட்ட ளவு எண்ணிக்கையிலான டெஸ்ட் போட்டிகளை ஒவ்வொரு வருடமும் விளையாட வேண்டும் என்று சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்குழு பரிந்துரைத்துள்ளது. டெஸ்ட் போட்டிகளை எதிர்காலத்தில் பாதுகாக்கும் முகமாக இந்தப் பரிந்துரை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

சர்வதேசக் கிரிக்கெட் சபையின் கிரிக்கெட் செயற்குழுவிற்கு லக்ஷ்மன் சிவராமகிருஷ்ணன் சர்ச்சைக்குரிய விதத்தில் தெரிவுசெய்யப்பட்ட பின்னர் முதன்முறையாக இடம்பெற்ற இந்தச் செயற்குழுக் கூட்டத்தில், இந்தப் பரிந்துரைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4 வருடம் கொண்ட டெஸ்ட் சம்பியன்ஸ் காலகட்டத்தில், ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு அணியும் ஆகக் குறைந்தது 4 டெஸ்ட் போட்டிகளில் பங்குபற்ற வேண்டும்.

அண்மைக்காலமாக இலங்கை, மேற்கிந்தியத் தீவுகள் போன்ற கிரிக்கெட் சபைகள் டெஸ்ட் தொடர்களை இரத்துச் செய்து, அவற்றிற்குப் பதிலாக மட்டுப்படுத்தப்பட்ட பந்துப்பரிமாற்றங்கள் கொண்ட தொடர்களை ஏற்பாடு செய்து வரும் நிலையில் இந்தப் பிரேரிப்பு முன்வைக்கப்பட்டுள்ளது. (ற)

## பொன் அணிகளின் சமர் ஆரம்பம்

மட்டக்களப்பு, மே 31
'பொன் அணிகளின் சமர்' என்று வர்ணிக்கப்படும் கிழக்கு மாகாணத்தின் பிரபல பாடசாலைகளான திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கும் மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலயத்திற்கும் இடையிலான 20ஆவது வருட தங்க கிரிக்கட் சமர் நேற்று வியாழக்கிழமை [illegible] மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா தேசிய பாடசாலையின் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட இந்தப் போட்டியில் கடந்த 19 போட்டிகளில் திருகோணமலைஸ்ரீகோணேஸ்வரா இந்துக் கல்லூரி 11 போட்டிகளிலும் மட்டக் களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலயம் 8 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன.

நேற்று இடம்பெற்ற ஆரம்ப [illegible] மட்டக்களப்பு [illegible] பணிப்பாளர் திருமதி சுபா சக்கரவர்த்தி மற்றும் முன்னாள் [illegible] கல்விப் பணிப்பாளர் ஏ.எம்.இ. போல், மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் தலைவர் சுவாமி சுபாலிஜி மகாராஜ், மட்டக்களப்பு வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ்.லவக்குமார், திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அதிபர் எஸ்.பத்மசீலன், மட்டக்களப்பு கல்லடி சிவானந்தா வித்தியாலய தேசிய பாடசாலையின் அதிபர் கேமனோராஜ் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு தேர்தலுக்கு எதிராக கையெழுத்துப் போராட்டம்

மாகாணசபைகளுக்குரிய காணி, பொலிஸ் அதிகாரங்களுடன் வடக்குத் தேர்தலை நடத்தக்கூடாது என வலியுறுத்தி நாடளாவிய ரீதியில் கையெழுத்து சேகரிக்கும் மனு தேசிய செயற்றிட்டத்தை அரசின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணி ஆரம்பிக்கவுள்ளது.

எதிர்வரும் 3ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை 10 நாள்களுக்குள் சுமார் ஒரு லட்சம் பேரிடம் கையெழுத்துப் பெற்று மாபெரும் பேரணியூடாக ஜனாதிபதியின் செயலாளரிடம் மகஜரைக் கையளிக்கத் தீர்மானித்திருப்பதாகத் தேசிய சுதந்திர முன்னணி அறிவித்துள்ளது.

குறித்த மனு கையளிக்கும் தேசிய செயற்றிட்டத்தை நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்துவதற்கான நடமாடும் சேவையின் நிகழ்ச்சிநிரலையும் அக்கட்சி நேற்று வெளியிட்டது.

தேசிய சுதந்திர முன்னணியின் பிரதான காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அக்கட்சி மேற்கண்டவாறு தெரிவித்தது.

ஜூன் மாதம் 3ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேசாபிமான பிக்குகள் முன்னணியின் தலைவர் வண.பெங்கமுவே நாலக்க தேரரின் ஆசீர்வாதத்துடன் இந்தச் செயற்றிட்டம் ஆரம்பமாகும். இதனையடுத்து கடவத்தை, யக்கல, பஸ்யால, வரக்காபொல, பொல்கஹவெல உள்ளிட்ட நகரங்களுடாக இந்த நடமாடும் சேவை குருநாகலை நோக்கிப் பயணிக்கும்.

4ஆம் திகதி குருநாகலில் ஆரம்பமாகும் நடமாடும் சேவையானது, நுராதபுரத்தை நோக்கிப் பயணிக்கும். பின்னர் 5ஆம் திகதி அநுராதபுரம் ஸ்ரீமாபோதிக்கருகில் ஆரம்பமாகி மரதன்கடவல, கெக்கிராவை, தம்புள்ளை மற்றும் நாவுல, மாத்தளை ஊடாக கண்டியை நோக்கிப் பயணிக்கும்.

6ஆம் திகதி கண்டி, பேராதனை, பிலிமத்தலாவை, கடுகன்னாவை, மாவனல்ல, கேகாலை, ருவன்வெல்ல, கரவனெல்ல ஊடாக அவிசாவளை நோக்கிப் பயணிக்கும். அடுத்தநாள் 7ஆம் திகதி காலை எஹலியகொட, இரத்தினபுரி, பெல்மடுல்ல ஊடாக எம்பிலிபிட்டியவுக்கும், 8ஆம் திகதி சூரியவெவ, அம்பலாந்தோட்டை, ஹுங்கம, தங்காலை, பெலியத்த, ஹக்மன ஊடாகச் சென்று, 9ஆம் திகதி காலை மாத்தறை, வெலிகம, அபராதுவ, காலி, ஹிக்கடுவ, அம்பலாங்கொடை, பெந்தோட்டை ஊடாக அளுத்கமவையடைந்து, அடுத்தநாள் 10ஆம் திகதி காலை பேருவளை, களுத்துறை, வஸ்கடுவ, வாதுவ, பாணந்துறை, பண்டாரகம ஊடாக நடமாடும் சேவையானது ஹொரணையை நோக்கிப் பயணிக்கும்.

இதையடுத்து 11ஆம் திகதி காலை ஆரம்பமாகி கடுவலைக்கும் பின்னர் நாடளாவிய ரீதியில் மக்கள் கையெழுத்தைப் பெற்றுக்கொண்ட மகஜரை 12ஆம் திகதி லேக்ஹவுஸ் வட்டாரத்தினூடாக ஜனாதிபதி காரியாலயத்தை நோக்கிப் பேரணியாகச் சென்று ஜனாதிபதி செயலாளரிடம் கையளிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 'றோ' அதிகாரி வன்னிக்கும் பயணம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பொனிபஸ் பெரேராவைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் எதுவும் வெளியிடப்படவில்லை.

இந் தியப் புலனாய்வு அதிகாரிகளின் இந்தத் திடீர் ரகசியப் பயணங்களுக்கான உண்மையான காரணம் என்ன என்பது தெரியவரவில்லை.

## தமிழர் தீர்வு தொடர்பில் புதுடில்லியில் மாநாடு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் என்ற கோஷம் இலங்கை அரச மட்டத்தில் எழுந்துள்ள நிலையிலேயே மேற்படி மாநாடு நடத்தப்படவுள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளுக்கு இந்த மாநாட்டில் பங்கேற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் பங்குப்பற்றுமாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் அழைப்பு விடுவிக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த மாநாட்டில் பங்குப்பற்றுவது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்னமும் எந்த முடிவும் எடுக்கவில்லை எனத் தெரியவருகிறது. (த-5)

## மரண அறிவித்தல்

### திருமதி அற்புதமணி கிருபைராஜா

அற்புதமணி கிருபைராஜா (இளைப்பாறிய ஆசிரியர், வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி) 28.05.2013 அன்று கர்த்தருக்குள் நித்திரரை அடைந்தார்.

அன்னார் விக்டோரியா வீதியைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சட்டத்தரணி தில்லையம்பலம் அருமைநாயகம்-றோஸ் இராசம்மா தம்பதியரின் மகளும், காலஞ்சென்ற ஜோர்ஜ் இராஜரட்ணம் கிருபைராஜாவின் அன்பு மனைவியும், ஈவ்லின் கிருஷாந்தனாவின் (UK) அருமைத் தாயும், இமையகாந்தன் நவரட்ணத்தின் மாமியும், Dr. ஜீவரட்ணம் (SL), Dr. விஜயரட்ணம் (Aus), காலஞ்சென்றவர்களான இன்பமணி, துரைரட்ணம், மனோன்மணி, பொன்மணி, Dr. அரியரட்ணம், Dr. செல்வரட்ணம், ஜெயரட்ணம், இராசரட்ணம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், ஜானச்செல்வதி (SL), Dr. லீடா (Aus), மேர்சி (Mal), Dr. கிறிஸ்டா (USA), யோகம் (Can), காலஞ்சென்றவர்களான மதியாபரணம், கனகமணி, விக்டர் இராஜரட்ணம், சுப்பிரமணியம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை நாளை (01.06.2013) சனிக்கிழமை காலை 9.30 இக்கு 37/6, வைத்தியசாலை ஒழுங்கை, வேம்படி வீதியிலுள்ள சிவலிங்கம் இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

37/6, மாட்டின் ஒழுங்கை,
(சிவலிங்கம் வைத்தியசாலை ஒழுங்கை)
வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
கிருஷாந்தனா
இமயகாந்தன்
(மகள்) 0773455067
(37819) (10.6)

## ஜயலத் ஜயவர்த்தன நேற்று காலமானார்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கட்சி சார்பில் தேர்தலில் போட்டியிட்டு முதன்முதலில் நாடாளுமன்றத்துக்குத் தெரிவானார். 2002 ஆம் ஆண்டு ஐ.தே.க. அரசு ஆட்சி அமைத்த போது புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் அகதிகள் அமைச்சராக நியமிக்கப்பட்ட ஜயலத் ஜயவர்த்தன தமிழர் பிரதேசங்களில் பல்வேறுபட்ட உதவித் திட்டங்களை செயற்படுத்தினார்.

மன்னார் மடுத் தேவாலயத்துக்கு வருடாந்தம் உதவிகளை வழங்கும் ஜயலத் ஜயவர்த்தன, தமிழர் பகுதிகளில் இலவச கண் சிகிச்சை முகாம்களையும் நடத்தினார்.

கொழும்பில் தமிழ் மக்களுக்கு எதிராக மிக மோசமாக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களுக்கு எதிராக தொடர்ச்சியாக குரல் கொடுத்து வந்தவர் அவர்.

கடந்த சில மாதங்களுக்கு முன்னர் மாரடைப்புக் காரணமாக அறுவை சிகிச்சை செய்து கொண்டார். இந்த நிலையில் கடந்தவாரம் கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் தங்கி சிகிச்சை பெற்ற அவர் சில தினங்களுக்கு முன்னர் மேலதிக சிகிச்சைக்காக சிங்கப்பூரில் தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவருக்கு சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்பட்டிருந்த நிலையில் இலங்கை நேரப்படி நேற்று அதிகாலை உயிரிழந்தார்.

ஜயலத் ஜயவர்த்தனவின் பூதவுடல் விமானம் மூலம் நேற்று எடுத்து வரப்பட்டுள்ளது. பூதவுடல் எதிர்வரும் ஜூன் 3 ஆம் திகதி நாடாளுமன்றில் அஞ்சலிக்காக வைக்கப்பட்ட பின்னர், ஜா-எல வெலிகம்பிட்டியவில் இறுதிச் சடங்குகள் இடம்பெறவுள்ளன.

மன்னப்பெரும நியமனம்

ஜயலத் ஜயவர்த்தனவின் வெற்றிடத்துக்கு, ஹம்பகா மாவட்டத்தில் 2010 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் போட்டியிட்டு ஜயலத்துக்கு அடுத்ததாக விருப்பு வாக்குக்கள் பெற்ற சஜீத் மன்னப்பெரும நியமிக்கப்பட்டுள்ளார். (த-5-ரி)

## வடக்கு - கிழக்கு நிலைமைகளை ஐ.நா. குழுவினர் நேரில் ஆராய்வு

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னர், ஒவ்வொரு மாவட்டத்தின் இராணுவத் தளபதியையும், அந்தப் பகுதி நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிவில் சமூகத்தினர் ஆகியோரையும் சந்தித்து வருகின்றனர்.

அத்துடன் ஐ.நா. முகவர் நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பிலும் அக்னெஸ் தலைமையிலான குழுவினர் ஆராய்ந்துள்ளனர்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் இலங்கை வரவுள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள நிலையிலேயே அக்னெஸ் தலைமையிலான குழுவினரின் பயணம் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# வாக்காளர் புதிய சட்ட வரைவு 6 ஆம் திகதி நாடாளுமன்றில்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்காளர்களாகப் பதிவு செய்யும் விசேட சட்ட வரைவு நீதியமைச்சர் ஹக்கீமினால் கொண்டு வரப்படவுள்ளது.

இந்த வருடம் இடம்பெறவுள்ள வடமாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக இந்தப் பதிவை மேற்கொள்ளுவதற்கு ஏற்ற வகையில் சட்டவரைவு வடிவமைக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது.

மேற்படி வாக்காளர் பதிவு விசேட ஏற்பாடுகள் சட்ட வரைவு ஜனாதிபதியால் உயர்நீதிமன்றுக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சட்டவரைவு அரசியல் அமைப்புக்கு அமைவானதா என்பதை ஆராயும் பொருட்டே உயர்நீதிமன்றுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 4 ஆம் திகதி, பிரதம நீதியரசர் மொஹான் பீரிஸ், நீதியரசர்களாக சந்தியா ஹெட்டிகே, ரோகினி மாரசிங்க ஆகியோர் முன்னிலையில் இந்த வரைவு ஆராயப்படவுள்ளது. (த-5)

## தமிழக எதிர்ப்பால் ஆசிய தடகளம் புனேக்கு மாற்றம்

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வர்கள் எழுச்சி பெறுவதற்கும் இது காரணமாகியது. இதனால் ஜூலை மாதம் சென்னையில் நடத்த திட்டமிடப்பட்டிருந்த ஆசியத் தடகளப் போட்டியில் இலங்கை வீரர்கள் பங்கெடுக்கக் கூடாதெனவும், அதனை உறுதிப்படுத்தினால் மாத்திரமே சென்னையில் நடத்த அனுமதியளிக்கப்படும் எனவும் தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா கடந்த பெப்ரவரி மாதம் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் புதுடில்லியில் செய்தியாளர்களிடம் நேற்று பேசிய, இந்தியத் தடகளக் கூட்டமைப்பின் தலைவர் அடில் சுமரிபாலா, ஆசிய தடகளப் போட்டிகள் சென்னை நகரிலிருந்து புனேக்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார். எதிர்வரும் ஜூலை 3 ஆம் திகதி முதல் 7 ஆம் திகதி வரை இந்தப் போட்டிகள் இடம்பெறவுள்ளன. (த-5)

**மீண்டும் திருநெல்வேலியில்**
திருநெல்வேலிச் சந்தையில் இயங்கி வந்த ஆட்டிறைச்சிக் கடை மீண்டும் திறக்கப் பட்டுள்ளது என்பதை அனைவருக்கும் அறியத்தருகின்றேன்.
உரிமையாளர். ந. உதயகுமார்

**வீடு வாடகைக்கு**
தொடர்புகளுக்கு: (37821) 0774528114, 021 790 1252

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE-JAFFNA
ENGLISH
SAT, SUN 4.00-5.00 PM
சிங்களம்
SAT, SUN 5.00-6.00 PM
BY. சாம்சன் (சி/ 9522) (6.7.13)

**THE SCIENCE CORNER**
CLOCK TOWER LANE-JAFFNA
CHEMISTRY 2015
BATCH I SAT, SUN 6.00-7.00 AM
BATCH II SAT, SUN 1.30-2.30 PM
ORGANIC
SAT, SUN-2.30-3.30 PM
ஆரம்பம்: 01.06.2013 Saturday
BY. சிவகுமார் (சி/ 9521) (6.7.13)

**SLEAS**
வழிகாட்டி தொகுப்பு
ந.தவசேகர்
பதிவுகளுக்கு
0754164564

**கருத்தரங்கு**
மத்திய வங்கி
சனி (1/6), ஞாயிறு (2.6), சனி (8/6), மு.ப. 10-4 மணிவரை
யாழ்ப்பாணக் கல்லூரி
யாழ் ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்

**விரும்பிய நாட்டிற்கு குறுகிய காலம் போய்த் திரும்ப விசா ஆலோசனை**
Visit Visa, Sponsor
மறுக்கப்பட்ட விசாக்கள்
சட்ட ஆலோசனைகளிற்கு
திசை காட்டி(பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9016
021 568 9090

**NEW SCIENCE POINT**
கன்னாதிட்டி வீதி, யாழ்.நகர்.
A/L - 2014
ORGANIC
ஆரம்பம்:- 31.05. FRI 5 pm
MON, FRI 5 pm
INORGANIC
Sat, Sun 11.45-12.45
By:- அன்பு (சி/9529)

**சைப்பிரஸ் படிக்கப் போனால் பகுதி நேரமாக கை நிறையச் சம்பாதிக்கலாம்**
21 வயதெனின்
O/L போதும்
IELTS தேவையில்லை
ஏனையோர் A/L தேவை
செப்ரெம்பர் உள் வாங்கல்
திசை காட்டி(பிறைவேற்)லிமிட்
175, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
021 221 9016
021 568 9090

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 31.05.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.